
தமிழரசு
16-11-1978
50 காசு.


சென்னை, அண்ணா மேம்பாலம்
அரசு சிமெண்ட்
உபயோகித்துக் கட்டப்பட்டது!
● கண்கவர் வண்ணம்
● துல்லியமான பூச்சு
● அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
● காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது. ● அதிக உழைப்பு உறுதி ● கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.
IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.
ARASU CEMENT
TIDCO
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்போரேஷன் லிமிடெட்
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்
மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.
TIDCO

# தமிழரசு

மலர் : 9　　இதழ் : 10

16—11—1978




முகப்பில்:

## துன்பம் சூழ்ந்த நேரத்திலும்.....

**1978** ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள்!

சென்னை எண்ணூரில் தாழங்குப்பம் அருகே உள்ள மர்மத் தீவுக்கு உவகையுடன் உல்லாசப் பயணம் சென்றனர் பள்ளி மாணவர்கள்.

ஆனால், அவர்களது உவகை, உல்லாசமெல்லாம் நீடித்து நிற்கவில்லை. அதற்கு மாறாக அவர்கள் உயிரையே குடித்தது!

சென்னை வண்ணாரப்பேட்டை பி.ஏ.கே. பழனிச்சாமி உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த 64 மாணவர்கள் சாரண ஆசிரியருடன் இனிய பயணம் மேற்கொண்டனர்.

அதிகாலை எழுந்து, சீவி முடித்துச் சிங்காரித்து, அன்னை இட்ட அமுதை உண்டு, பெற்றோரிடம் 'போய் வருகிறேன்' என்று உவகை பொங்க உல்லாசப் பயணம் மேற்கொண்ட அந்த இளம் உள்ளங்கள், இரு படகுகளில், படகிற்கு 32 பேர் வீதம் பரவசத்துடன் பாடிச் சென்றனர் மர்மத் தீவு நோக்கி!

ஆனால், அவர்களில் சிலரது உடல்கள் தண்ணீரில் ஆடி வரும் என்று அவர்கள் நினைத்திருப்பார்களா?

இரண்டாவதாகச் சென்ற படகு வழியில் கவிழ, மாணவர்கள் அனைவரும் நீரில் மூழ்கினர். நம் நெஞ்சையெல்லாம் பிழிய வைக்கும் அந்தப் பிஞ்சு உள்ளங்கள்—நாளையத் தலைமுறைகளான அந்த மாணவ மணிகள் மரணமென்னும் கோரப்பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டனர்.

அந்தச் சமயத்தில்—உயிருக்குப் போராடுகின்ற அந்த நேரத்தில்—மலையாக வந்தான் ஒரு வீரச் சிறுவன்! பெயர், அண்ணாமலை!

தம் சக நண்பர்கள் உயிருக்குப் போராடும் காட்சியை அவன் பார்த்துக் கலங்கியிருக்கக்கூடும். நீச்சல் தெரியாதிருந்தும் கூட, தன் உயிரையும், தன் தோழர்களின் உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் கவிழ்ந்த படகின் ஒரு துடுப்பைப் பற்றிக் கொண்டான்.

அருகே தத்தளித்துக் கொண்டிருந்த மூன்று நண்பர்களும் துடுப்பைப் பற்றிக் கொள்ளத் துணை நின்றான். அவர்களும் பற்றிக் கொண்டார்கள். நீரில் மூழ்காமல் காப்பாற்றப்பட்டார்கள்.

வீரச் சிறுவன் அண்ணாமலையின் இந்த விவேக மிக்க செயலை இப்போது நினைத்தாலும்கூட நம் உடலெல்லாம் புல்லரிக்கிறது!

நேரு பிறந்த நாளான நவம்பர் 14 குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்படுகிறதல்லவா? அந்தக் குழந்தைகள் — நாளைய நாயகர்களாக விளங்கப் போகிற இளஞ் செல்வங்கள், சமயோசித அறிவு, துணிவு, துன்பம் சூழ்ந்த நேரத்திலும் போராடிப் பிறரையும் காப்பாற்றும் திறன் இவையெல்லாம் ஒருங்கே பெற்றிருக்க வேண்டும் என்று அமரர் நேரு கனவு கண்டார் அல்லவா?

அந்தக் கனவு நனவாகிற வகையிலே செல்வன் அண்ணாமலையின் வீரச் செயலைப் பாராட்டி உயிர்க் காப்புப் பணிக்கான தமிழக முதல்வரின் விருது—தங்கப் பதக்கத்தினைப் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள், இராசரத்தினம் ஸ்டேடியத்தில் நடந்த விழாவில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மகிழ்ச்சியுடன் வழங்கினார்கள்.

குதூகலமாய்க் கொண்டாடப்படும் இந்தக் குழந்தைகள் நாளில் செல்வன் அண்ணாமலை விருது பெறும் படத்தினைத் "தமிழரசு" முகப்பில் வெளியிட்டுப் பெருமிதம் கொள்கிறது.

# எங்கிருந்தாலும் என் சிந்தை முழுவதும் செந்தமிழ் நாட்டில்தான்!



அமெரிக்க அரசு விடுத்த அன்பழைப்பினை ஏற்று, உங்கள் அனைவரின் நல்வாழ்த்துக்களோடு அமெரிக்கா, மெக்ஸிகோ, பிரிட்டன், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு என்னுடைய ஐந்து வாரப் பயணத்தை மேற்கொள்ளுகிறேன். இதற்கு முன்னரும் நான் ஆசிய ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு சுற்றுப் பயணம் சென்றிருக்கிறேன் என்றாலும் இம்முறை நான் மேற்கொள்ளும் பயணத்தைத் தனிச் சிறப்புடையதாகக் கருதுகிறேன். இப்போது நான் தமிழக மக்களின் பிரதிநிதியாக இந்த நாடுகளுக்குச் செல்லுகிறேன் என்பதை எனக்குக் கிடைத்துள்ள அரிய நல்வாய்ப்பாகக் கருதுகிறேன்.

அமெரிக்காவிலும் நான் செல்ல இருக்கின்ற இதர நாடுகளிலும் எவ்வாறு வாழ்க்கையில் மக்கள் முன்னேற்றம் பெற்றிருக்கிறார்கள், தொழில் வளர்ச்சி எந்தெந்த வகையிலெல்லாம் ஏற்பட்டிருக்கிறது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அங்குள்ள அரசுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் ஆகியவற்றை நான் நேரடியாக அறிந்து கொள்வதற்கும், அறிந்தவற்றை நம்முடைய மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதற்கும் என்னுடைய இந்தப் பயணம் சிறந்த வாய்ப்பாக அமையுமென்று நம்புகிறேன்.

ஐந்து வாரங்கள் தமிழக மக்களோடு நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போகிறதே என்கிற ஏக்கம்-மனக்குறை எனக்கு இருந்தாலும் வெளிநாடுகளில் நான் பெறும் அனுபவத்தை, மக்களுக்கு பயன்படுத்தும் வாய்ப்புக் கிடைக்கிறதே என்கிற எண்ணத்துடன், ஏக்கத்தைப் போக்கிக் கொண்டு, உங்களின் சக்தி நிறைந்த நல்வாழ்த்துகளோடு என்னுடைய பயணத்தை மேற்கொள்ள முடிவு செய்தேன்.....

## வெளிநாடு செல்லும் முன் முதல்வர் விடுத்த செய்தி

ஐந்து வாரங்கள் தமிழகத்திலே நான் இல்லாமல் போனாலும் என்னுடைய அன்புக்கும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்கும் உரிய என்னுடைய உடன்பிறப்புக்களைக் கொண்ட அமைச்சரவையும், கடமை தவறாமல் பணிபுரிகின்ற அனுபவமிக்க அதிகாரிகளும் நாட்டு மக்களின் கடமைகளை செவ்வனே நிறைவேற்ற இருக்கிறார்கள். தமிழக மக்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் அரசுப் பணிகளும் மக்கள் முன்னேற்றப் பணிகளும் தொடர்ந்து சீரோடும் சிறப்போடும் நடைபெற அரசுக்கு முழு ஒத்துழைப்பினையும் அளிப்பார்கள் என்பதிலும் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

அக்டோபர் மாதம் 23-ல் ஹர்த்தால், கடை அடைப்பு நிகழ்ச்சிகள் தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில் என்னைச் சந்தித்து சுமார் 90 நிமிடங்கள் என்னுடன் பேச்சு நடத்தினார்கள். மனம்விட்டுப் பேசி, கசப்புணர்ச்சியின்றி கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். 'பந்த்' போன்றவைகள் நடப்பதன் விளைவாக தவிர்க்க முடியாமல் வன்முறைச் செயல்கள் நிகழ்ந்து விடுகின்றன என்கிற கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டோம். பொதுவாக வேலைநிறுத்தம், கடை அடைப்பு, ஏனைய கிளர்ச்சிகள் நடைபெறும்போது வன்முறைச் செயல்கள்-பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் போன்ற உணர்வுகளுக்குக்

கொஞ்சமும் இடமளித்தல் கூடாது என்கிற என்னுடைய கருத்தினை, என்னைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர்களிடம் வலியுறுத்திக் கூறினேன். அதனை எதிர்க்கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் ஒப்புக் கொண்டார்கள்.

என்றாலும், இதுபோன்ற ஹர்த்தால்கள், கிளர்ச்சிகள் நடைபெறும்போது பொதுத் தன்மையில் கைது செய்யப்படுகிறவர்களை விடுவிக்கும் பழக்கம் ஏற்கெனவே தொடர்ந்து இருந்து வருவதை அவர்கள் எடுத்துக் கூறி, அது போலவே இப்போதும் கைதானவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கிளர்ச்சியில் ஈடுபட்டு, பொதுவாகக் கைதானவர்களிடம் பரிவுடன் நடந்து கொள்ள அரசு தயாராக இருப்பதை நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் பாதுகாப்பு நடவடிக்கையாகவும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதில் அரசுக்குச் சங்கடம் எதுவும் இருக்காது என்பதை எடுத்துக்கூறிய நான், வன்முறையில் நேரடியாக ஈடுபட்டவர்களையும் வன்முறைக்கும், கலவரத்திற்கும் திட்டமிட்டு தூண்டியவர்களையும் விடுவிப்பதில் அரசுக்குள்ள சங்கடத்தை எடுத்துச் சொன்னபோது, அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். கிளர்ச்சி சம்பந்தமாகக் கைதானவர்கள் விஷயத்தில் அரசு நிச்சயம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளும் என்றும், அதே சமயம் வன்முறையில் ஈடுபட்டவர்களையும், வன்முறைக்குத் தூண்டியவர்களையும் சட்டத்தின் தீர்ப்புக்கு விடுவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்ற அரசின் முடிவு நியாயமானது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மற்றபடி தொழிலாளர் நலன், அவர்களின் முன்னேற்றம், தொழிற் சங்க உரிமை ஆகியவற்றைப் பேணிக் காப்பதில் தமிழக அரசு தூய உணர்வுடன் அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும் என்று நான் உறுதி அளிக்கிறேன். ஆனால், அதே நேரத்தில் எந்தக் காரணத்திற்காகவும், தொழிற்சாலைகள் மூடப்படாமல், தொழில் வளர்ச்சி தடைப்படாமல் தொழில் அமைதி கெடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு இருக்கிறது என்பதை எல்லோரும், குறிப்பாகத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இதில் நிர்வாகிகள், தொழிலாளிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகிய மூன்று தரப்பினருக்கும் பொறுப்புண்டு. சம்பந்தப்பட்ட அனைவரும், பிரச்சினை எதுவானாலும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். தொழிலாளர்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை நிர்வாகிகளுடன் பேசி சுமுகமான தீர்வு காண அரசும், அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பினையும் தருவார்கள் என்பதனையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே அனைத்துக் கட்சித் தலைவர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும், அரசு அலுவலர்களும் ஏனைய பல்வேறு துறையினரும், தொழில் அதிபர்களும், அனைவரும் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் அளித்து தமிழகத்தின் நலன்கருதி அமைதிகாக்கத் துணை நிற்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஐந்து வாரங்கள் நான் வெளிநாடுகளில் இருந்தாலும் என்னுடைய சிந்தனை முழுவதும் தமிழகத்தைச் சுற்றியேதான் இருக்கும் என்பதை நான் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. எனது இந்தப் பயணத்தை தமிழக மக்களின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை தீட்டுவதற்கான ஆக்கப் பயணமாக எண்ணி மேற்கொள்கிறேன். தமிழக மக்களின் ஒன்றுபட்ட ஆதரவையும், இதயபூர்வமான நல்வாழ்த்துக்களையும் என்னோடு துணையாகக் கொண்டு பயணம் புறப்படுகிறேன். தமிழக அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பினைத் தந்து, அமைதி காத்து, ஆக்கப் பணிகளில் ஈடுபட அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க அண்ணாவின் நாமம்.

(31-10-1978).

# கூட்டுப் பண்ணையால் கோடி நன்மை!

நம் நாட்டில் விவசாயிகள் மிகச் சிறியதான துண்டு நிலங்களை உடைமையாகப் பெற்றுப் பயிரிட்டு வருகிறார்கள். இக் காரணத்தால் விஞ்ஞான ரீதியில் எந்திரங்களைக் கொண்டு பரந்த அளவில் உழுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முதலியவற்றைச் செய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

பெரிய நிலப்பரப்பில் விவசாயம் நடத்துவதன் நன்மைகளை விவசாயிகள் அறிந்து கூட்டு விவசாய முறைக்கு ஒத்துழைத்தால் நாம் உற்பத்தியில் எதிர் காலத்தில் பெரிய முன்னேற்றம் உண்டாக்கிவிட முடியும். கூட்டுறவு முறையில் ஒத்துழைப்பாகப் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவது என்பது இன்னும் நம் நாட்டில் ஏற்படவில்லை.

ஒருங்கிணைந்த ரீதியில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், ஒருங்கிணைந்த முறையில் நிலத்துக்குச் சத்தூட்டுதல், அறுவடைக்குப் பிந்திய நடவடிக்கைகளைத் தொழில் நுட்பத் திறனோடு ஒருங்கிணைந்த முறையில் செய்தல் முதலியவற்றையெல்லாம் விவசாயிகள் கூட்டு முயற்சியாக மேற்கொள்ளலாம். தீவிர விவசாயத்தின் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதற்கும் சிறிய விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற தொழில் தடைகளைக் குறைப்பதற்கும் கூட்டுறவு முறை விவசாயம் மிகவும் பயன்படும்.

மேற்கூறிய முறைகளை இயன்ற வரையில் கடைப்பிடித்து நாட்டின் உற்பத்தியும், உற்பத்தித் திறனும், நிலவளமும், பொது நலமும் உயர யாவரும் ஒத்துழைப்பது விவசாயத்தில் வளர்ந்து வரும் எதிர் காலத்தின் இன்றியமையாத தேவையாகும்.

— டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்


வண்ணமயம்
வண்ணமயமான பருத்திப் பட்டாடைகள் குவிந்துள்ளன
உங்கள் குடும்பத் தேவையனைத்திற்கும் கோ-ஆப்டெக்ஸ் துணிகளையே தேர்ந்தெடுங்கள்.
புடவைகள் ● ஷர்ட்டிங்குகள் ● வேட்டிகள் ● ரெடிமேடுகள் ● லுங்கிகள் ● ஜனதா புடவைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

# கிராம வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு

—மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

## திரு கே. ஏ. கிருஷ்ணசாமி

மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதம் கிராமவாசிகளாய் இருக்கும்போது, கிராமப் பொருளாதார வளர்ச்சியின்றி தேசியப் பொருளாதாரம் வளர்ச்சி பெற முடியாது என்பது வெளிப்படை. தற்போதுள்ள கிராம அமைப்பில் பெருத்த மாறுதலின்றி, கிராம மூலப் பொருள்களையும், வேலையின்றி இருப்பவர்களையும் முழுமையாகப் பயன்படுத்தி கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே கிராம வளர்ச்சியின் நோக்கமாகும்.

உழவுத் தொழில் நவீன மயமாக்கப்பட வேண்டும்; அதன் துணைத் தொழில்களான பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவை வளர்ச்சியடைய வேண்டும். அதே போல சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இவற்றின் ஒட்டு மொத்தமான விளைவாக வேலையின்மை, குறைந்த வேலை வாய்ப்பு ஆகியவை குறைவதுடன், நிலத்திலிருந்தும், இதர வகையிலும் வரும் வருமானம் பெருக வேண்டும்.

உழவுத் தொழில் நமது ஆதாரத் தொழிலாகும். தேசிய வருவாயில் 50 சத வீதம் பங்கு அளிக்கும் தாய்த் தொழில் இது. இத் தொழிலில் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டுதான் திருவள்ளுவர்

''சுழன்றும் ஏர்ப்பின்னது
உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை''

என்று கூறியுள்ளார்.

உழவுத் தொழில் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அதுதான் மிக முக்கியமான தொழில்; உலகமே இதை நம்பியுள்ளது. உணவுடன் இதர தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களையும் உழவுத் தொழிலே உற்பத்தி செய்கிறது. உழவுத் தொழிலை நம்பியே பொருளாதாரத்தின் இதர துறைகள் இயங்கி வருவதால், உழவுத் தொழிலே உலகத்தின் அச்சாணி என்று திருவள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார்.

''உழுவார் உலகத்தார்க்கு
ஆணி; அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து''



நீர்ப்பாசன வசதிப் பெருக்கம், மின் உற்பத்திப் பெருக்கம் போன்ற வேளாண்மை வளர்ச்சிப் பணிகளுக்குப் பெரும் அளவில் அரசு முதலீடு செய்திருந்தும் சாகுபடி முறையில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டிருந்தும், பெரும்பாலான உழவர்களுக்கு வேளாண்மைத் தொழில் வாழும் ஒரு முறையாக உள்ளதே அல்லாமல், மற்ற தொழில்களைப் போல இலாபமளிக்கும் தொழிலாக இல்லை.

வேளாண்மை ஒரு தொழிலாகச் செயல்பட வேண்டுமானால், விவசாயிகளுக்குக் கடன், ஏனைய இடுபொருள்கள் ஆகியவை போதுமான அளவிலும் உரிய காலத்திலும் கிடைக்கச் செய்வதுடன், நவீன வேளாண்மை முறைகளையும் எல்லாரும் மேற்கொள்ளவும் செய்ய வேண்டும். வேளாண்மை போதுமான அளவிற்கு வளர்ச்சி பெற்றாலும் கூட, அதனைச் சார்ந்த தொழில்களான பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவை மூலமும் மற்றும் அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற சிறு தொழில், குடிசைத் தொழில்கள் மூலமும் அவர்களுக்குப் பயன் உள்ள வகையில் வேலைவாய்ப்பும் வருவாயும் கிடைக்கச் செய்யாவிட்டால் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் காண இயலாது.

கிராமங்களைத் தொழில் மயமாக்கும் நோக்கத்துடன் நாட்டிலுள்ள 460 மாவட்டங்களிலும், மாவட்டத் தொழில் மையங்களை ஏற்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

அண்மையில், தமிழ்நாட்டில் சேலம், தருமபுரி, செங்கல்பட்டு, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, இராமனாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு இறுதிக்குள் மீதமுள்ள 7 மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. தொழில்களைப் பதிவு செய்தல், தொழில்களுக்கான மூலப் பொருள்களை ஒதுக்குதல் போன்ற அதிகாரங்கள் மாவட்ட தொழில் மையங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியமும் இம்மையங்களுக்கு ஒத்துழைப்பு நல்கும். மாவட்டங்களிலுள்ள வசதிகளைக் கண்டறிய தொழில்நுட்பப்பொருளாதார ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது ; இந்த ஆய்வின் முடிவுகள் முக்கிய வங்கிகளுக்கும், தொழில் நடத்த முன் வருவோருக்கும் தெரியப்படுத்தப்படும்.

இந் நிலையில் கிராம வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு மிக முக்கியமானதாகும்.

சாகுபடிக்காகக் குறுகிய காலக் கடன்களையும், இரசாயன உரம் போன்ற இடு பொருள்களையும் நில மேம்பாட்டிற்கும் துணைத் தொழில்களுக்கும் நீண்ட கால, நடுத்தரக் காலக் கடன்களையும் கூட்டுறவு நிறுவனங்கள் நெடு நாட்களாக அளித்து வருகின்றன.

தொழில் துறையில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றை இணைத்து அருமையாகப் பணியாற்றி வருகின்றன. வேறு சில சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்கும் இது போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. தங்கள் விவகார எல்லையை அண்மையிலுள்ள கிராமங்களுக்

கும் விரிவுபடுத்தி, சமீப ஆண்டுகளில் சிறு தொழில்களுக்குக் கடன் வழங்குவதில் நகர கூட்டுறவு வங்கிகள் கூட ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளன.

1972ஆம் ஆண்டு 'வங்கிக் குழு' ( Banking Commission ) தெரிவித்தவாறு உள்ளூர் மக்கள் பங்கு கொள்ளுதல், மக்களாட்சி முறையிலான நிர்வாகம், உள்ளூர் தேவைகளேயும் உணர்வு பூர்வமான நோக்கங்களேயும் நிறைவு செய்தல் ஆகிய கோட்பாடுகளைக் கொண்ட கூட்டுறவு நிறுவனங்களே கிராம வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் பொருத்தமான நிறுவனங்களாகும்.

காலஞ் சென்ற பெரியவர் டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் போன்ற தலை சிறந்த, தன்னலமற்ற கூட்டுறவாளர்களின் சலியாத உழைப்பினுல் தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் வலுவாக வேரூன்றி, மேலும் வளர்ந்துள்ளது. தற்போதைய தேவைகளுக்கேற்ப ஒரு சில மாற்றங்கள் செய்யப்படுவதன் மூலம், கிராம வளர்ச்சியின் முக்கியக்கருவியாகக் கூட்டுறவு நிறுவனம் செயல் படமுடியும்.

வேளாண்மைத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் பெரும்பங்கு யாவரும் அறிந்த ஒன்று ; எனினும், அவற்றின் சேவையை மேலும் அதிகரிக்கும் தேவை உள்ளது. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண்மை விரிவாக்கப் பணியை மேற்கொள்வதன் மூலம் தொழில் நுட்ப அறிவை விவசாயிகள் உடனுக்குடன் பயன்படுத்துமாறு செய்யலாம். கடன் வழங்கும் முறை மேலும் எளிதாக்கப்பட வேண்டும். 'சுழல் முறைக் கடன்' வசதியைப் புகுத்தலாம் என்று ஒரு யோசனே கூறப்படுகிறது. இதன்படி, ஒவ்வொரு உழவருக்கும் உச்சக் கடன் வரம்பு நிர்ணயிக்கப்பட்டு, அந்த வரம்பிற்குட்பட்டு, தேவையான சமயத்தில், தேவையான தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்; ஒவ்வொரு முறை பணம் பெறும் போதும் கடன் அனுமதிக்காக ( Sanction ) அவர் காத்திருக்கத் தேவையிலை. தனது விளைபொருள் விற்பனைத்தொகையை அவர் தனது கடன் கணக்கிற்குச் செலுத்துவார். நிலம் மற்றும் இதர சொத்துக்களின் மீது பெறப்படும் உரிமை ( Charge ) அல்லது ஒரு குழுவாகக் கொடுக்கும் நபர் பொறுப்பு ( Group Security ) கடனுக்கு ஆதாரமாகக் கொள்ளப்படலாம். உச்ச வரம்பை நிர்ணயம் செய்து அவருக்கு ஒரு 'கடன் அட்டை' வழங்கப்பட வேண்டும். கடன் சுலபமாகக் கிடைப்பது போலவே, அதைச் சரியாகப் பயன்படுத்தித் திரும்பிச் செலுத்தவும் வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட போசனையை எவ்வளவு தூரம் செயல்படுத்த முடியும் என்பது பற்றியும் ஆராய வேண்டும். கூட்டுறவு நிறுவனங்களுக்கும் இதர கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் இடையே சரியான ஏற்பாடுகள் இருந்தாலன்றி, பல நிறுவனங்களின் மூலம் கடன் வழங்கும் முறை கிராமக் கடன் முறையிலுள்ள பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும்.



**திருவள்ளூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கியின் டிராக்டர் வழங்கும் விழாவில் (1-11-78) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 201-வது டிராக்டரை வழங்கினார். கூட்டுறவுத்துறை அமைச்சரின் பேரவைச் செயலர் திரு ஆனூர் பி. ஜெகதீசன் அவர்கள் தலைமை தாங்கினார்.**

போதுமான அளவில், தேவையான காலத்தில் வழங்கப்பட வேண்டிய கடன் மிக முக்கியமானதாக இருந்தாலும், கடன் மட்டும்தான் எல்லாம் என்று கூறிவிட முடியாது. வேளாண்மை விளைபொருள், தொழில் உற்பத்திப்பொருள்கள் ஆகியவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது, இவற்றின் உற்பத்திக்குக் கடன் வழங்குவதை விட மிக முக்கியமாகும். கதர் மற்றும் கைத்தறித் துணியைப் பொறுத்தவரை இவற்றை உற்பத்தி செய்தவரே விற்பனே செய்ய வேண்டும் என்ற நிலைமை இல்லாமல் இருப்பதுபோல் சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வலுவான விற்பனை ஏற்பாடுகள் மிகவும் தேவை.

கிராம வளர்ச்சிக்கு உதவும் வகையில் கூட்டுறவின் பங்கை மேம்படுத்தத் தேவையான ஆக்கப் பூர்வமான யோசனைகளை இக் கருத்தரங்கு முன்வைக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

*(7-10-78 அன்று கோவையில் நடைபெற்ற 'கிராம வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு' குறித்து நடைபெற்ற கருத்தரங்கினைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.)*

## கூட்டுறவு வார விழா

**14—11—'78**
**அனைத்திந்திய கூட்டுறவு நாள்**

**15—11—'78**
**உழவர் நாள்**

**16—11—'78**
**நுகர்வோர் நாள்**

**17—11—'78**
**நலிந்தோர் நல்வாழ்வு நாள்**

**18—11—'78**
**குடும்ப நல்வாழ்வு மற்றும் குழந்தைகள் நாள்**

**19—11—'78**
**கூட்டுறவுத் திட்ட நாள்**

**20—11—'78**
**தன்னாட்சி நாள்**

# முன்னேற்றப் பாதையில் கிராமங்கள்



மாண்புமிகு உள்ளாட்சித்துறை
அமைச்சர்
**திரு கா. காளிமுத்து**



நகர்ப்புறங்களில் கிடைக்கும் எல்லா வசதிகளும் கிராமங்களிலும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தைக் கருத்திற் கொண்டு அரசின் திட்டங்கள் யாவும் கிராமங்களையே மையமாகக் கொண்டு தீட்டப்படுகின்றன. ஏற்கெனவே செயல்பட்டுவரும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் பயனாகக் கிராமங்களில் சாலை வசதிகளும், பள்ளிக்கூட வசதிகளும், நீர்ப்பாசன வசதிகள் போன்ற பல முன்னேற்றங்கள் பெருகியுள்ளன. மேலும் மேலும் கிராமங்கள் வளம் பெற வேண்டும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் கிராம மக்களும் பயன்பெற வேண்டும், அவர்களின் வாழ்க்கைத் தரம் ஓரளவாவது உயர வேண்டும் என்பது அரசின் தலையாய இலட்சியம். தமிழக அரசு கீழே விவரிக்கப்பட்ட பல்வேறு கிராம முன்னேற்றத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறது.

1978-79 ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அரசின் புதிய திட்டமான 'கிராமத் தன்னிறைவுத் திட்டம்' அறிவிக்கப்பட்டது. ஏழ்மை நிலையில் மூழ்கித் தவிக்கும் கிராமத்தினரும் தன்னிறைவு நிலையடைவதும் சிறிய நகரங்கள் பெற்ற வளர்ச்சியினை சிறிய கிராமங்களும் அடைய வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். கிராமக் கைத்தொழில்களிலும், குளம் குட்டைகளில் மீன் வளர்ப்பதிலும், பண்ணை வளர்ப்பு மண்பாண்டத் தொழில் முன்னேற்றம், தரமான விதைகளைப் பயிரிடுவதிலும் மற்றும் பன்றி, கோழி, ஆடுகள் வளர்ப்பது போன்ற பொருளாதார முன்னேற்றத் தொழில்களில் தாங்களாகவே ஈடுபட்டு ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு முன்னேறும் வழிகளில் கிராம மக்கள் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் வட்டாரங்களில் ஆற்றும் பணிகள், சாலைகள் அமைத்தல், பராமரித்தல், பள்ளிகள் கட்டுதல், கிணறுகள் வெட்டுதல், விவசாய மேம்பாட்டுக்கு உரிய வழி முறைகள் வகுத்தல், நீர்ப்பாசன வசதிகள் பராமரித்தல், கால்நடை அபிவிருத்தி மற்றும் கிராமப் புறத் தொழில்களைத் திட்டமிட்டுச் செய்தல், கடன் வசதிகள் மூலம் ஆடுகள், கறவை மாடுகள், கோழி வளர்த்தல் போன்ற திட்டங்களினால் ஏழை மக்களின் வறுமையை விரட்டுவது புதிய தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கம்.

இந்தத் திட்டத்தைச் செயலாக்க இராமனாதபுரம், புதுக்கோட்டை, கோவை, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, கன்னியாகுமரி, செங்கல்பட்டு, மதுரை ஆகிய எட்டு மாவட்டங்களில் மிகவும் பின்தங்கியுள்ள பத்து வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் பத்து கிராமங்களை அரசு தேர்வு செய்துள்ளது. இவ்வட்டாரங்களில் பெறப்படும் அனுபவங்களைக் கொண்டு மற்றுமுள்ள மாவட்டங்களிலும் இதை விரிவுபடுத்த வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும்.

வட்டார வளர்ச்சி மற்றும், கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கான வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விட்டன. ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதலுக்குப் பின் இத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

மேற்கூறிய திட்டம் மாநில அரசின் நிதியிலிருந்து செயலாக்கப்படுவது. இது தவிர்த்து, மத்திய அரசின் நிதி உதவியுடன் கீழ்க்கண்ட தனித் திட்டங்களும் (Special Programmes) தமிழகத்தில் செயல்படுகின்றன.

(அ) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

(ஆ) வறட்சிப் பகுதித்திட்டம்

(இ) ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டம்.

**சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம், தமிழ்நாட்டில், 167 வட்டாரங்களில் செயல்படுகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், குறுநில விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் 33.3 சதவீதமும் மானியமாக அளிக்கப்படுகின்றது. இந்த மானியம், நீர்ப்பாசன வசதிகளுக்காகவும், வேளாண் பண்ணைக் கருவிகள் வாங்குவதற்கும், உரமிடுவதற்கும், நிலச்சீர்த்திருத்தம் செய்வதற்கும், கறவை மாடுகள், ஆடுகள் வாங்குவதற்கும், பழ மரங்கள் உற்பத்தி செய்வதற்கும், மீன், பட்டுப் பூச்சி வளர்ப்புக்கும், வரப்புகளில் மரங்கள் நடுவதற்கும், உணவு தானியக் கிடங்குகள் அமைப்பதற்கும், மற்றும் இது போன்ற வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ச்சியைப் பின்னணியாகக் கொண்ட தொழில்களுக்கும் அளிக்கப்படுகின்றது.

இந்த 167 வட்டாரங்களிலும் ரூ. 15.50 கோடிக்குத் திட்டமிடப்பட்டு 31.3.'78 வரை ரூ. 6.50 கோடி மட்டுமே செலவு செய்ய

பட்டுள்ளது. இன்னும் ரூ. 9 கோடி செலவு செய்யப்பட வேண்டும். இந்தத் திட்டம் நடப்பு ஆண்டுடன் (1978-79) முடிவு பெறும் என்பதால் எஞ்சியுள்ள பணம் இந்த நிதி யாண்டு இறுதிக்குள் செலவு செய்யப்பட வேண்டும். இதற்கான வழி முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வறட்சிப் பகுதித் திட்டம் :**

இத்திட்டம் இராமனாதபுரம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. இதற்காக 1977-78ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவு செய்யப்பட்டு விட்டது. நடப்பு ஆண்டில் இராமனாதபுரம் மாவட்டத்துக்கு ரூ. 1.38 கோடியிலும் தர்மபுரி மாவட்டத்துக்கு ரூ. 26கோடியிலும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலும் பெறப்பட்டுச் செயல் படுத்தும் நிலையிலுள்ளன.

**ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டம் :**

இது மத்திய அரசின் புதிய திட்டம். நடப்பு ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டியது ஆகும். இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக 130 வட்டாரங்களையும், இரண்டாவது கட்டமாக 31 வட்டாரங்களையும் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. இவற்றில் 100 வட்டாரங்களைச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் பகுதிகளிலிருந்தும், 30 வட்டாரங்களை வறட்சிப் பகுதித் திட்டம் செயல்படும் பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தவணையாக ஒதுக்கப்பட்டுள்ள 31 வட்டாரங்களை மேற்சொன்ன எந்தத் தனித் திட்டமும் செயல்படாத பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதல் தவணையாக ஒதுக்கப்பட்ட 130 வட்டாரங்களிலும், வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 5 இலட்சம் வீதமும், மற்ற 31 வட்டாரத்திற்கு ரூ. 2 இலட்சம் வீதமும் நடப்பு ஆண்டில் செலவு செய்யப்பட வேண்டும். இரண்டாம் தவணையாக ஒதுக்கப்பட்டுள்ள வட்டாரங்களுக்கு மாநில அரசின் பங்குத் தொகை தேவையில்லை. முதல் தவணை வட்டாரங்களுக்கு மட்டும் மொத்தம் ரூ. 30 இலட்சம் மாநில அரசின் பங்குத் தொகை தேவை. ஆக 161 வட்டாரங்களிலும் நடப்பு ஆண்டில் (1978-79) ரூ. 7.12 கோடி மானியமாகச் செலவிடப்பட வேண்டும். முதலிரண்டு திட்டங்களைப் போன்றே இந்திட்டமும் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும் வேலை வாய்ப்புப் பெறும் வசதியைப் பற்றியும் பின்னணியாகக் கொண்டது.

மேற்கூறிய மூவகைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் போதிய முன்னேற்றங்கள் இல்லை. ஒதுக்கப்பட்ட தொகை பெரும் பகுதி செலவு செய்யப்படாமல் தேங்கியுள்ளது. ஆகவே, இந்தத் திட்டங்களைச் செயல் படுத்தும் முழுப் பொறுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பில் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் அவர்களின் கீழ் உள்ள ஊர்நல அலுவலர்களுக்கும், இதர அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

ஊர்நல அலுவலர்களுக்கும், இதர திட்ட அலுவலர்கட்கும் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள் ஆகியவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஆறு மாத காலங்களில் செய்து முடிக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், செலவு செய்யப்படாது தேங்கியுள்ள ரூ. 9கோடி, மானியம் 31-3-79க்குள் செலவு செய்யப்பட வேண்டி இருப்பதால் கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலமாகச் சுமார் ரூ. 50 கோடி கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் வணிக வங்கிகள், கூட்டுறவுத் துறை வங்கிகள் ஆகியவற்றின் அலுவலர்களை அழைத்துப் பேசி அவர்களை இத்திட்டத்தில் முழுப் பங்கு பெறச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள மானியத்தைச் செலவு செய்வதிலும் திட்டத்தின் குறிக்கோள் அளவை நிறைவேற்றுவதிலும் காட்டக்கூடிய அக்கறையை விட, திட்டத்தின் முழுப் பயனும் உண்மையான சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், இவர்களுக்கு கிட்ட வேண்டும் என்பதில் மிகுந்த கவனமும் அக்கறையும் எடுத்துச் செயலாற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அவர்களின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில், திட்ட சம்பந்தப்பட்ட எல்லா அலுவலர்களும், குறிப்பாக வளர்ச்சித் துறை அலுவலர்களும் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டுமென நான் வற்புறுத்த விரும்புகிறேன்.



இது வரை இத்திட்டங்கள் வருவாய்த் துறையினராலும், வேளாண்மைத் துறையினராலும் செயல்படுத்தப்பட்டன. கடந்த ஆண்டுகளில் ரூ. 6.50 கோடி அளவுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு, ரூ. 9 கோடியளவில் தேங்கியுள்ளது. இத்தொகை இன்னும் ஆறு மாதக் காலத்திற்குள் எப்படியும் செலவு செய்யப்பட வேண்டும்.

கிராமங்களில் கிராம மக்களோடு ஒருங்கிணைந்து பணியாற்றுபவர்கள் வளர்ச்சித் துறைப் பணியாளர்கள், இதர துறையினரைவிட இப்பணிக்கு இவர்கள் மிகவும் தகுதி உடையவர்கள். கிராம முன்னேற்றப் பணிகளை மிகவும் துரிதமாகவும் செம்மையாகவும் செயல்படுத்த இவர்களால்தான் முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் மேற்படி திட்ட செயலாக்கப் பணியினை முழுவதுமாக வளர்ச்சித் துறைப் பணியாளர்களுக்கு அரசு ஒப்படைத்துள்ளது.

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?'' என்று அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளவாறு வளர்ச்சிப் பணியாளர்கள் எதையும் முடிக்க வல்லவர்கள். இதையும் அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டுவார்கள் என்று இத்துறையின் பொறுப்பை ஏற்றுள்ளவன் என்ற முறையில் நான் திடமாக நம்புகிறேன்.

குறித்த காலக் கெடுவுக்குள் எஞ்சியுள்ள — ஒதுக்கப்பட்டுள்ள தொகை முழுவதையும் செலவு செய்து கிராம மக்களின் வாழ்வில் ஒளி கூட்ட, அயராது பணியாற்றுவீர் என்று வேண்டுகிறேன்.



# தமிழ் வளர்த்த மாமதுரையில்
# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா, தமிழ் வளர்த்த மாமதுரையில் மிகச்சீரும் சிறப்புமாக நடந்தது.

தமிழ்நாடு அரசின் சார்பில் அக்டோபர் திங்கள் 21, 22 ஆகிய இரு நாட்களில் மதுரையில் பெரியார் (தமுக்கம்) மைதானத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நடந்தது. அன்று மதுரை நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

21-ந் தேதி மாலை மங்கல இசையுடன் விழா தொடங்கியது. தொடக்கத்தில் வணக்கத்துக்குரிய மதுரை மாநகர் மேயர் திரு எஸ். முத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தீண்டாமையை எதிர்த்தார் பெரியார். 'தீண்டாமை' என்ற வார்த்தையிலுள்ள முதல் எழுத்தையும் (தீ), கடைசி எழுத்தையும் (மை) இணைத்தால் தீமை என்று வருவதைச் சுட்டிக்காட்டி, தீண்டாமை என்றாலே தீமை தான் என்பதை எடுத்துரைத்தார்.

''ஆமையாக இருந்தவர்களை-ஊமையாக இருந்தவர்களை வாய்திறந்து பேச வைத்த பெருமை பெரியாரையே சேரும். 'ஏன்? எப்படி? எங்கே?' என்ற கேள்விகளை எழுப்பும் ஆற்றலை மக்களுக்குக் காட்டியவர் பெரியார்''!

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

கருத்தரங்கில் பங்கு கொண்டு பல்வேறு தலைப்புகளில் பலர் பேசினார்கள்; மாநிலத் திட்டக்குழுத் துணைத்தலைவர் திரு கோவை செழியன் அவர்கள் (சிந்தனையாளர் பெரியார்), சிறுசேமிப்புத் திட்ட துணைத் தலைவர் திரு எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் (கலையுலகப் புரட்சியாளர்), திருக்குறளார்

வி. முனுசாமி அவர்கள் (தொண்டிற் சிறந்தவர் பெரியார்), டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் (மொழிப்போர் வீரர் பெரியார்), டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் (தன்மான வீரர் பெரியார்), திரு. ஈரோடு எம். சுப்பய்யா அவர்கள் (அறப்போர் வீரர் பெரியார்), பேராசிரியர் எஸ். ஏ. சையது அப்துல்லா அவர்கள் (புரட்சிப் பேச்சாளர் பெரியார்).

அன்று இரவு கலை நிகழ்ச்சி நடந்தது. சென்னை சைதாப்பேட்டை நரிக்குறவர் பள்ளி மாணவர்களின் நடன நிகழ்ச்சியும், திரு. சி. எஸ் பாண்டியன் குழுவினரின் 'கிந்தனார்' கலை நிகழ்ச்சியும் அனைவரையும் கவர்ந்தன.

22-ந் தேதி காலை மகளிர் அரங்கம் நடந்தது.

திருமதி பா. வளர்மதி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.



மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தார்.

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், தந்தை பெரியாரின் தன்மைகளை எடுத்துரைத்தார்.

தந்தை பெரியாரின் அருமை பெருமைகளை விளக்கிப் பேராசிரியர் திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்கள், பேராசிரியர் திருமதி இளம்பிறை மணிமாறன், அவர்கள், டாக்டர் மீனாட்சி முருகரத்தினம் அவர்கள், திருமதி அருண்மொழி வில்வம் அவர்கள், திருமதி விசயா முத்துவண்ணன் அவர்கள், திருமதி விசாலாட்சி சிவலிங்கம் அவர்கள், திருமதி வி. சகுந்தலா அவர்கள் ஆகியோர் பேசினர்.

பிறகு நடந்த கவியரங்கில் கருத்துமழை பொழிந்தது.

மாண்புமிகு கிராமக் கைத்தொழில்கள் அமைச்சர் திரு கா. இராசாமுகமது அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

கவிஞர் புலமைப்பித்தன் எம். எல். சி., அவர்கள் கவியரங்கிற்குத் தலைமை வகித்தார். திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் துவக்க உரை ஆற்றினார்.

கவியரங்கில் கீழ்க்காணும் கவிஞர் பெருமக்கள் பல்வேறு தலைப்புகளில் தம் கவிதைகளைப் பாடினார்கள்:

திரு ஈரோடு தமிழன்பன் அவர்கள், கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்கள், கவிஞர் மீ. இராசேந்திரன் அவர்கள், டாக்டர் சக்தி பெருமாள் அவர்கள், கவிஞர் இ. முத்துராமலிங்கம் அவர்கள், திருமதி அரசு மணிமேகலை அவர்கள், கவிஞர் நாஞ்சில் ஆ. அரிது அவர்கள், கவிஞர் மு. சிங்காரவேலன் அவர்கள் ஆகியோர் கருத்துமழை பொழிந்தனர். பிறகு, 'மந்திரமா தந்திரமா?' என்னும் உண்மை விளக்கத் தந்திரக் காட்சியினை திரு கே. பி. சாமிநாதன் அவர்கள் நிகழ்த்திக் காட்டினார்.

அன்று மாலை மதுரை கல்லூரித் திடலிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் அலங்கார வண்டிகளுடன், தேசிய மாணவர் படையினர், காவல்துறை பாண்டு வாத்தியக் குழுவினர், ஊர்க்காவல் படையினர் ஆகியோர் அணிவகுத்து வந்தனர். ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் கரகம், சிலம்பம், பம்பை முதலியன பங்கு பெற்றன.

பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் பெரியாரின் கொள்கைகளையும், போராட்டங்களையும் விளக்கும் அலங்கார வண்டிகள் வந்தன. பெரியார் ஈரோடு நகரசபை தலைவராக இருந்தபோது நிறைவேற்றிய குடிநீர்த் திட்டம் பற்றிய காட்சி திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் சார்பில் சித்திரிக்கப்பட்டு இருந்தது.

கதர் இயக்கத்தில் பெரியார், மது ஒழிப்புப் பணியில் பெரியார், வைக்கம் வீரர் பெரியார்,

தொழிலாளர்களின் தோழர் பெரியார், பெண் ணுரிமைக்காகப் பாடுபட்ட பெரியார், மொழிப் போராட்டத்தில் பெரியார், புரட்சி எழுத்தாளர் பெரியார், அண்ணாவின் அரசை பெரியார் காணிக்கையாகப் பெற்றது ஆகிய காட்சிகள் ஊர்வலத்தில் சிறப்பிடம் பெற்றன.

நத்தம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் கொண்டு வரப்பட்ட ஒரு குதிரை, ஊர்வலத்தில் தாளத்துக்கு ஏற்றபடி நடனம் ஆடிச் சென்றது. அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

மேலமாசி வீதியும், தெற்கு மாசி வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைக்கப்பட்ட மேடையில் மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் நின்று ஊர்வலத்தைப் பார்வையிட்டார்.

ஊர்வலத்தில் 13 அலங்கார வண்டிகள் வந்தன. ஒரு வண்டியில் பழனி நாதசுரக் கல்லூரி மாணவர்கள் இசைமுழங்கிய வண்ணம் இருந்தனர்.

தந்தை பெரியார் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 60 திருமணங்களை நடத்தி வைத்தார். அதில் 28 கலப்புத் திருமணங்கள், 32 விதவை மறு வாழ்வுத் திருமணங்கள்.

பிறகு, சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அந்த நிகழ்ச்சிக்கு டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார்.

கேரள மாநில ஆளுநர் மேதகு திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் தந்தை பெரியார் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், திரு கே. எஸ். அப்துல்வகாப் எம். எல். சி., அவர்கள், காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், திரு எஸ். வி. இலட்சுமணன் அவர்கள், திரு. திருவாரூர் தங்கராசு அவர்கள், திரு ப. நெடுமாறன் அவர்கள், திரு ப. உ. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள் ஆகியோர் தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளையும், சிறப்பியல்புகளையும் விளக்கிக் கூறினார்கள்.

மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், விழா நிறைவுச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

''நாம் போற்றி வணங்கிப் பின்பற்றும் அய்யா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். அண்ணா-அய்யாவின் கொள்கைகளை இன்றைக்குத் தமிழகத்தில் 80 சதவீதத்தினர் செயல்படுத்தி வருகின்றனர்.''

இறுதியில் திரு கே. பி. ராஜமோகன் குழுவினரின் ''பெரியார் ஒரு சகாப்தம்'' என்னும் நாடகம் நடந்தது.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. சி. சிரியாக் ஐ. ஏ. எஸ்., அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவெய்தியது!

## தமிழ்நாட்டு கூட்டுறவு நூற்பு ஆலைகள்

தமிழ்நாட்டிலுள்ள பன்னிரெண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஒன்பது ஆலைகள், மொத்தத்திறனை 1.86 இலட்சம் கதிர்களிலிருந்து 3.02 இலட்சம் கதிர்களாக அதிகரிக்கும் வண்ணம் ரூ. 12 கோடி மூலதனச் செலவில் விரிவாக்கும் திட்டங்கள் மேற்கொண்டுள்ளன.

இதன் மூலம் ஒவ்வொரு ஆலையிலும் கதிர்களின் எண்ணிக்கை 12,000லிருந்து 25,000 ஆக இரட்டிப்பாக்கப்படுகின்றன. இந்த விரிவாக்கும் திட்டங்களினல் இந்த ஆலைகளின் நூல் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 95.21 இலட்சம் கிலோவிலிருந்து 172.80 இலட்சம் கிலோவாக உயரும்.

மேலும், இவ்வாலைகளின் மொத்த விற்பனை லேவாதேவி ஆண்டொன்றுக்கு ரூ.14.68 கோடியிலிருந்து ரூ.35 கோடியாக உயருவதுடன், கூடுதலாக 1,770 பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. இவர்களில் 1386 பேர் இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து வந்த அகதிகளாவர்.

சேலம், வேலூர், மேலூர், மாயூரம், தாராபுரம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் அவற்றின் விரிவாக்கும் திட்டங்களைச் சமீபத்தில் நிறைவேற்றி உள்ளன. எல்லாக் கூட்டுறவு நூற்பு ஆலைகளும் அவற்றின் உற்பத்தியை அதிகரித்து, நல்ல தரமான நூலை அளிப்பதைக் கருத்திற்கொண்டு ரூ.6 கோடி செலவில் அவற்றின் இயந்திரங்களை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளன.

நல்ல தரமான கலர் நூலை நியாயமான விலையில் அளிக்கும் நோக்கத்துடன் 1978-79 மற்றும் 1979-80 ஆண்டுகளில் ரூ.96 இலட்சம் மூலதனச் செலவில் தமிழ்நாட்டில் 8 நவீன சாயச்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்குப் பசைபோடப்பட்ட பாவு நூல் கொடுக்க வேண்டுமென்பதற்காக சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை பசை போடும் பகுதி (Sizing Plant) ஒன்றை இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்க உத்தேசித்துள்ளது.

கரூர் அருகிலுள்ள மலைக்கோவிலூரில் அமைந்துள்ள திருச்சி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை அதன் விரிவாக்கத் திட்டத்தை ரூ.1.22 கோடி மூலதனச் செலவில் முடித்துள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷனும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும், தமிழக அரசும் சேர்ந்த இந்த மூலதனத்தை அளித்துள்ளன. இந்த விரிவாக்கும் திட்டத்தால் கூடுதலாக 235 பேருக்கு இந்த ஆலையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.





13-11-'78 அன்று அரசினர் தோட்டத்தில் உள்ள செய்தி நிலையத்தில், சிறுவர்க்குதவும் வகையில் குழந்தைகள் நூலகத்தை, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் திறந்து வைத்தார்.

சிறுவர்களுக்கான திரைப்படக் காட்சியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் திறந்து வைத்தார்.





# சிற்பக் கலை சிறந்தோங்கிட

**எஸ். வையாபுரி**

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்**

நமது தமிழகம் கலைகளின் தாயகம். இசைக்கலை, நாட்டியக் கலை, இலக்கியக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை ஆகிய ஐம் பெரும் கலைகளைப் பண்டைத் தமிழக மன்னர்கள் பேணி வளர்த்த வரலாற்றுச் செய்தி களை நாம் அறிவோம்.

பண்டைத் தமிழகத்தின் சிறப்பை, பறைசாற்றிக் கொண் டிருக்கும் திருக்கோயில்களும், அங்குள்ள சிற்பச் செல்வங் களுமே இத்தற்குத் தகுந்த சான்று களாகும்.

இரண்டாயிரமாண்டு வரலாறு கண்ட இச்சிற்பக்கலை சிறந்த தொழில் நுட்பங்களையும் தன் னகத்தே கொண்டு வளர்ந் தோங்கியிருந்தது. மன்னர்கள் அரவணைப்பில் வளர்ந்த இச் சிற்பக்கலை அம்மன்னர்களின் ஆதரவு குன்றிய காலத்தில் படிப் படியாக நலியத் தொடங்கியது. உயர்ந்த செல்வாக்குப் பெற்று விளங்கிய சிற்பியர் குடும்பங்கள் தொழிற்துறையிலும் பொருளா தாரத் துறையிலும் நலிவுற்று, ஆதரவற்றிருந்தனர். அத்தகைய குடும்பங்களில் பிறந்த குழந் தைகள் கலைக் கல்வி பெறுவதை விடுத்து, நவீன காலக் கல்வி பெற்று அரசு ஊழியர்களாகவும் வேறு பல அலுவலர்களாகவும் பணியாற்ற முற்பட்டனர்.

அத்தகைய பின்னணியிலேதான் பெரும் புகழும், மேன்மையும் பெற்று விளங்கிய நமது சிற்பக் கலை மரபுகளையும், தொழில் நுட்பங்களையும், கலை நுட்பங் களையும் மீண்டும் உயிர்ப்பிக்கும் நோக்கோடு தமிழக அரசு 1957-ஆம் ஆண்டு மாமல்லபுரத்தில் ஒரு சிற்பக்கலை மறுமலர்ச்சிக்கு மாநில அரசு நல்லதோர் அடித் தளம் அமைத்தது எனலாம். வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்ச்சியை வழிவழியாக வந்த சிற்பச் சமூகத்தினரும், பொதுமக்களும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். தங்கள் குழந் தைகளை இப்பயிற்சி நிலையத் திற்கு ஆர்வத்தோடு நம்பிக்கை யோடும் அனுப்பி வைத்தார்கள்.

இப்பயிற்சி நிலையத்தைச் செம்மையாக நிறுவிதகுந்தபயிற்சி அளிப்பதற்குத் தமிழகத்தில் தலைசிறந்த சிற்பியாக மதிக்கப் பெற்றவரும், பல்வேறு திருக் கோயில்களையும், சிற்பங்களை யும் படைத்தவரும், குறிப்பாக கிண்டி காந்தி நினைவு மண்ட பத்தை நிர்மாணித்தவருமான சிற்பகலாசாகரம் திரு ம. வைத் தியநாத ஸ்தபதி அவர்களை இப் பயிலகத்தின் தலைவராகத் தமிழக அரசு நியமித்தது.

சிற்பக்கலையிலும், திருக் கோயில் கட்டடக் கலையிலும் நான்காண்டு பயிற்சியளிக்க இப் பயிலகத்தில் அரசு தக்க வசதி களைச் செய்து கொடுத்திருக் கிறது. 1962-வது ஆண்டில் சுமார் 4 இலட்ச ரூபாய் மதிப் பில் அழகியதொரு கட்டடத்தை யும் கட்டி ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்ந்து படிப்ப தற்கு மேலும் வாய்ப்பளித்தது. பயிற்சி பெற வந்த மாணவர்கள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த வர்களாக இருந்தமையால், தொடக்கத்தில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40-லிருந்து ரூ. 55 வரை உதவித்தொகையும் வழங்கி வந்தது. இதனை 10



சுதையால் சிற்பம் இயற்றிடும் மாணவர்.

ஆண்டுகளுக்கு முன்பு மாதம் ஒன்றுக்கு ரூ. 60 ஆக உயர்த்தியும் கொடுத்து மாணவர் துயர் துடைக்கவும் வகை செய்தது. நான்காண்டு பயிற்சி பெற்றுத் தேறிய மாணவர்களுக்கு Certificate of Proficiency நற்சான்றிதழ் வழங்கியது. இத்தகைய நிலை 1957-லிருந்து 1973-ஆம் ஆண்டு வரை நிகழ்ந்தது. இக்காலக் கட்டத்தில், இப்பயிலகத்தை, தமிழக அரசு, தொழில் வணிகத் துறை மூலம் செவ்வனே நடத்தியது.

இப்பயிலகத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் திறமை மிகுந்த சிற்பிகளாக பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகிறார்கள். சிற்பங்கள் செதுக்கும் சிற்பிகளாகவும், கோயில் நிர்மாணம் செய்யும் கட்டடச் சிற்பிகளாகவும், கோயில் சீரமைப்புப் பணிகளில் மேற்பார்வையாளர்களாகவும், தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆதரவில் ஸ்தபதிகளாகவும், தமிழக அறநிலையத் துறை ஆதரவின் கீழ் நடைபெறும் திருப்பணிகளில், ஒப்பந்தப் பணியாளர்களாகவும் வேலை செய்து வருகிறார்கள்.

இப்பயிலகத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆந்திர மாநிலத்தில் நல்ல வரவேற்பும் ஆதரவும் இருந்து வருகிறது. ஆந்திர அறநிலையத்துறையின் பொறுப்பான பதவிகளை அவ்வரசு இவர்களுக்கு வழங்கி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வரசின் மூலமாக அமெரிக்கா சென்று அங்கு நடைபெற்ற நியூயார்க் விநயகர் கோயிலிலும், பீட்டர்ஸ் பர்க் ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் கோயிலிலும் பிற சிற்பிகளோடு சேர்ந்து பணியாற்றும் அரிய வாய்ப்பையும் பெற்றிருக்கிறார்கள்.

அத்துடன் சொந்தத் துறையில் தொழிற்கூடங்களை அமைத்துக் கொண்டு உள்நாட்டுத் தேவைகளையும், அயல்நாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறார்கள். மற்றும் சிலர் மலேசியா, சிங்கப்பூர், மொரேசியஸ், ஸ்ரீலங்கா ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று கோயில் நிர்மணிப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்பயிலகத்தில் தொடர்ந்து பயிற்சி பெற்றுத் தேறிய சிற்பிகளின் வளர்ச்சிக்காக அண்மையில் தமிழக அரசு தொடங்கி முடித்த பூம்புகார் மற்றும் வள்ளுவர் கோட்டப் பணிகளில் சிறப்பான பங்கு ஏற்றுத் தமிழகத்திற்குப் புகழ் தேடித் தந்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் 1960-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்திலும், ஆந்திர மாநிலத்திலும், மற்றும் பீகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், டெல்லி ஆகிய பிற மாநிலங்களிலும், நடந்தேறிய கோயில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுப் பெரும்புகழ் ஈட்டியிருக்கிறார்கள். பொருளாதாரத்துறையில் பின்தங்கியிருந்த சிற்பியர் குடும்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வறுமையிலிருந்து விடுபட்டு இன்று ஓரளவு செழிப்போடு வாழ்ந்து வருகின்றன.

இச்சிறிய பயிலகம் சிற்பக் கலைத் துறையில் மாபெரும் புரட்சியையே செய்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, கலை மரபுகளைப் போற்றிக் காத்து, கலைத்துறையில் ஒரு மறுமலர்ச்சிக்கான அருஞ்சேவை செய்து வருகின்றது. இங்குப் பணிபுரிந்து வரும் ஆசிரியப் பெருமக்கள் திறமையும், ஆர்வமும் மிக்கவர்கள். சேவை மனப்பான்மை கொண்டவர்கள். மாணவர் தம் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறைகொண்டவர்கள். புதியன படைக்கும் ஆசையும், ஆற்றல் உடையவர்கள். அதுமட்டுமல்ல; இப்பயிலகத்தை மேலும் விரிவுப்படுத்தி, தமிழகச் சிற்பக்கலையை ஒரு கல்லூரி அளவில் ஓங்கச் செய்து காலத்திற்கேற்ற-தேவைகேற்ற புதிய அம்சங்களை இத்துறையில் புகுத்தி, புதிய வரலாறு படைக்கவும் விரும்புகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் 1973-ஆம் ஆண்டு இப்பயிலகம் தொழில் வணிகத் துறையிலிருந்து, தொழில் நுட்பக் கல்வி துறைக்கு மாற்றப்பட்டது.

இப்பயிலகத்தின் ஆற்றலைப் புரிந்து கொண்ட தொழில் நுட்பக் கல்வித்துறை அப்பயிலகத்தின் இலட்சியத்தையும், பாடத் திட்டங்களையும், பயிற்சி முறைகளையும் ஆய்ந்து கீழ்க்கண்ட சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறது.

பாடத்திட்டங்களையும், பயிற்சி முறைகளையும் ஆய்ந்து, தகுந்த மாற்றங்களுடன் சீர்திருத்தி, வாரியத் தேர்வுகளையும் (Board of Examination) புகுத்தி, பயிற்சியில் வெற்றியடைந்த மாணாக்கர்களுக்கு Diploma-க்குப் பதிலாக வழங்கப்பட்டு வருகிறது.

இங்குப் பயிற்சி பெற்ற மாணாக்கர்களை அரசுத் துறைகளில் தக்கப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ளலாம் என்று ஆணையிட்டுப் பயிற்சி பெற்ற

சிற்பிகளுக்குத் தகுந்த அந்தஸ்தை அளித்திருக்கிறது.

பண்டைக் காலத்தில் பல தரப்பட்ட சிற்பிகள் ஒரே தலைவரின் கீழ் குழுவாகப் பணியாற்றியிருக்கிறார்கள். இதனை இன்று Guild என்று சொல்லுகிறோம். அனைவரும் சேர்ந்து ஒரே மரபைக் காத்து, வளர்த்து ஓரினத்தைச் சார்ந்த-ஒருமைப்பாடுடைய-கலைச் சின்னங்களை இயற்றியிருக்கிறார்கள். சிறிது விரித்துக் கூறின், கல்லாலும், செங்கல்லாலும், சுதையாலும், மரத்தாலும், உலோகத்தாலும், செய்யப்பட்ட சிற்பங்கள் அனைத்தும் ஒரே இலக்கண மரபிலும், ஒரே கலை மரபிலும் இயற்றப் பெற்றிருப்பதைக் காணலாம். பிற்காலத்தில் அக்குழுக்கள் சிதறி வேவ்வேறு விதமான கலைக் கூறுகளைப் பெற்று மரபுகள் வழுவி சில குறைபாடுகளுடன் இக்கலை குன்றி விட்டதாகச் சிற்பிகளும், கலை ஆய்வாளர்களும் கூறுவர். எனவே, அப்பழைய முறையை மீண்டும் புதுப்பிக்கவும், அதன் மூலம் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும் இப்பயிலகத்தில் கல், மரம் சுதை, உலோகம், வண்ணம் ஆகிய பொருள்களால் சிற்பங்கள் செய்வதற்கேற்ற தனித் தனிப் பிரிவுகள் (Six Electives) தொடங்கப் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிற்கும் ஆண்டுதோறும் ஐந்து மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மாணவர்களும் தத்தம் விருப்பத்திற்கேற்ற பிரிவைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

இப்பயிற்சி நிலையத்தில் ஏற்கெனவே கற்பிக்கப்பட்டு வந்த கோயிற் கட்டடக் கலை சம்பந்தமான பாடத்திட்டங்களைப் பரிசீலனை செய்து தக்கசீர்திருத்தங்களைப் புகுத்தி, மரபு வழுவாமல் திருக்கோயில்களைக் கட்டுவதற்கும், அதே சமயத்தில் இக்கால விஞ்ஞானத்தால் பெற்ற தொழில் நுட்பங்களையும், கட்டடப் பொருள்களையும் பற்றியச் செய்திகளையும் இவர்களுக்குப் போதித்து, இக்காலத் தேவைகளைப் புரிந்து, சேவை செய்யத் தக்க அறிவையும், ஆற்றலையும் ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், பண்டையக் கட்டடக் கலையோடு இன்றைய Civil Engineering கல்வியும் இணைந்து செயல்படுமாறு பயிற்சி திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது.

மாறிவிட்ட இக்காலச் சூழ்நிலையில், பண்டைக் காலச் சிற்பக்கலையும், கட்டடக் கலையும், புதுப்பொலிவுப் பெற்று, மேலும் வளர முடியுமென்று இப்பயிலக ஆசிரியர்கள் நம்புகிறார்கள். நவீன காலக் கட்டடங்களில், தமிழகக் கட்டடக் கலையம்சங்களைத் தேவையான இடங்களில், தேவையான அளவில் சுவையுணர்வோடு புகுத்த முடியும் என்று சொல்லுகிறார்கள். பல இடங்களில் இக்கருத்தைச் செயல்படுத்தியும் வருகிறார்கள். எனவே, அந்த இலட்சியத்தைத் துரிதமாக அடைய இவ்வரசு வழிவகை செய்ய வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். அவர்களது கோரிக்கையைத் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அறிந்து, இத்துறைக்குப் பட்டப் படிப்பு (Degree programme) கொண்டு வர இயலுமா என்று ஆய்ந்து கொண்டிருக்கிறது.

இப்பயிலகத்தில் மரத்தில், சிற்பங்கள் செய்வதற்குரிய தனிப்பிரிவு ஒன்று இயங்கி வருகிறதல்லவா? இப்பிரிவுக்கு வழிவழியாக உபயோகித்து வந்த ஆயுதங்கள் இருப்பினும், புதிய ஆயுதங்களும், இயந்திரங்களும், இத்துறைச்கு அறிமுகமாகி இருக்கின்றன. சிற்பங்களை விரைவில் செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சிறுகச் சிறுக இத்துறையில் நவீன காலக் கருவிகளைப் புகுத்தி, பணிகளைச் சிரமமின்றி செய்யவும் தீர்மான வேலைகளைச் செவ்வனே செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பயிலகத்திற்கு ரூ. 25 ஆயிரம் மதிப்புடைய புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளது. அத்துடன் மாணாக்கர்கள் ஒய்வு நேரங்களில் படித்துத் தாங்கள் ஈடுபட்டிருக்கும் துறைக்கேற்ற அறிவு சேர்ப்பதற்கு ஏதுவான புத்தகங்களையும் வாங்கி (Book Bank) புத்தக வங்கி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தனித்தன்மை வாய்ந்த இப்பயிலகத்திற்கு Academic Autonomy கொடுக்கலாமா என்பதும் ஆய்வில் உள்ளது.

இப்பயிலகம் பாலிடெக்னிக் அந்தஸ்து பெறுவதற்கான நடவடிக்கைகளைத் தொழில்நுட்பத் துறை மேற்கொண்டுள்ளது.

கோவிற் கட்டட வேலை



தமிழக அரசின் கல்விச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், அறநிலையத் துறை ஆணையர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் முதலிய தலைமை அதிகாரிகள் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைத்து இப்பயிலகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.



கட்டடக் கலை வரைபடம் தயாரிக்கும் மாணாக்கர்கள்

இப்பயிலக மாணவர்கள் அடிக்கடி சிற்பங்களையும், கோயிற் கட்டடங்களையும் நேரடியாகச் சென்று, தங்கிப் பார்த்து அவற்றின் கலைக் கூறுகளை மனத்தில் பதிய வைத்துக் கொள்ள அடிக்கடி ஆய்வுப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, இப்பயிலகத்திற்கு ஒரு 'மினி' பேருந்து அரசிடமிருந்து வாங்கி வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்றுத் தேறிய சுமார் 10 சிற்பிகள் வரை பணியாற்றத் தக்க ஓர் உற்பத்திப் பிரிவு இப்பயிலகத்தோடு இணைக்கப்பட்டு, 1969-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இதுவரை இந்நிலையம், 16 இலட்சம் ரூபாய் மதிப்புடைய சிற்ப வேலைகளைச் செய்திருக்கிறது.

இவ்வுற்பத்திப் பிரிவின் நோக்கம் யாதெனில், பரம்பரைச் சிற்பிகள்' குடும்பத்தைச் சேராதவர்களும், இந்நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களும், உடனடியாக வெளியுலகத்தில் வேலை தேட முடியாதவர்களும் போன்ற சிற்பிகளுக்கும்வேலை வாய்ப்பு அளிப்பதேயாகும். இங்கு வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதே வெளி வட்டாரங்களில் நல்ல வேலை வாய்ப்புக்கள் வரும்பொழுது எச்சமயத்திலும் அவ்வேலைகளில் ஈடுபட எந்தத்தடையும் இல்லாது இவ்வுற்பத்திப் பிரிவு செயல்படுகிறது. அதாவது, மாணவர்களுக்கு ஓர் ஆதரவாகச் செயல்படுவதே இவ்வுற்பத்திப் பிரிவின் நோக்கம்.

இப்பயிலகத்தில் ஐந்தாண்டு டிப்ளமோ பயிற்சியளிக்கப்படுகின்றது. விருப்பப் பாடங்கள் 6 ஆகும். விருப்பப் பாடம் ஒன்றுக்கு ஐந்து மாணவர்கள் வீதம் ஆண்டுதோறும் 30 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். தற்போது மொத்தம் 115 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இப்பயிலகத்திற்கு இயற்கையிலேயே போதுமான இடவசதியில்லை. இதற்கிடையில் மாமல்லபுர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், அங்கேயே புதிய கட்டடங்கள் கட்டிக்கொண்டு விரிவுபடுத்த வாய்ப்பு இல்லாதிருக்கிறது. எனவே, மாமல்லபுரம் கிராமத்திலிருந்து 1 கிலோமீட்டர் தூரத்தில் 30 ஏக்கர் நிலம் வாங்கும் யோசனை உள்ளது. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வழிவழியாகச் சிற்பக்கலை போதிக்கப்பட்டு வந்த பண்டைக் காலத்திலும் இப்பயிலகத்தில் 21 ஆண்டுகளிலும் தமிழே போதனாமொழியாக இருந்து வந்திருக்கின்றது. சிற்ப நூல்கள் அனைத்தும் தொன்றுதொட்டு சமஸ்கிருத மொழியில்தான் எழுதப்பட்டிருக்கின்றன. இங்குப் பயிலும் மாணவர்களுக்கு சமஸ்கிருதமொழி கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டிருப்பினும் குறுகிய காலத்தில் தேவையான மொழியாற்றல் பெறமுடியாதவர்களாகவே இருக்கிறார்கள். எனவே, தமிழில் சிற்பக்கலைப் பாட நூல்கள் நான்கினை எழுதிப் பதிப்பிப்பதற்காக 1965-ஆம் ஆண்டிலும் பாட நூல்கள் நான்கினை எழுதிப் பதிப்பிப்பதற்காக 1965-ஆம் ஆண்டிலும், 1970-ஆம் ஆண்டிலும் அரசு தக்க ஆணைகளைப் பிறப்பித்தது. போதிய அறக்கொடையும் வழங்கியது. அதன பயனாய் முதல் நூலான 'சிற்பச் செந்நூல்' என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத் திருக்கோயில்கள் அனைத்தும் தமிழ் மண்ணில் தோன்றிய சிற்பிகளாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. தமிழகப் பண்பாட்டுச் சிறப்புகளே அக்கோயில்களில் காணப்படுகின்றன. மேலும், பண்டைச் சமஸ்கிருத சிற்ப நூல்களைத் தமிழகத்தில் பிறந்த சிற்பிகளே இயற்றியுள்ளார்கள். இத்தனையிருந்தும் தமிழில் சிற்பக்கலை நூல் ஒன்று இல்லையே என்ற ஒரு குறை நீண்டநாட்களாகத் தமிழ்த்துறையில் இருந்து வந்தது. 'சிற்பச் செந்நூல்' வெளியிடப்படுவதன் மூலம் அக்குறை நீங்குகிறது எனலாம்.

மாமல்லபுரம் சர்தேசப் புகழ் வாய்ந்த சுற்றுலா நகரமாக மிளிருகிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் இப்பயிலகம் இருக்க வேண்டுமென்று தமிழக அரசு மாமல்லபுரத்தில் இதனை முன்னர் நிறுவியது. இதனால் இப்பயிலகம் பெரும் பயனடைந்துள்ளது. இங்கு வராத பெரியோர்களே இல்லையெனலாம். இங்குள்ள ஆசிரியர்களும், மாணாக்கர்களும் வெளி உலகத்திற்கு நல்ல வண்ணம் அறிமுகமாகிறார்கள். வேலை வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன.

வெளிநாட்டுப் பயணிகளை வெகுவாக ஈர்க்கும் சக்தி கொண்டதாக இப்பயிலகம் சிறந்து விளங்குகிறது!



# கோவையில் வளரும் சிறு தொழில்கள்

"சிட்கோ'' என்று சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு தனி நிறுவனமாக 23-3-1970 அன்று நிறுவப்பட்டு, பின்பு 21-3-1971 முதல் ஒரு பொது நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் மூலக் குறிக்கோள், சிறு தொழில்களுக்கு உதவி செய்தல், தொழில் நுட்ப ஆலோசனை கூறல், நிதி வசதி அளித்தல், மற்றும் அத்தொழில்களுக்குத் தேவையானபாதுகாப்பு வழங்கிப் பேணி வளர்த்தல் ஆகும்.

மேலும், ''சிட்கோ'', தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கி வந்த 783 தொழிற்கூடங்கள் கொண்ட 35,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 33 தொழிற்பேட்டைகளையும், 1,117 தொழிலாளர் குடியிருப்புகளையும், தமிழக அரசின் நியமனத்தின்பேரில் பராமரிக்கும் பொறுப்பை நிறைவேற்றி வருகிறது.

இவற்றில் கோவையில் இரு தொழிற்பேட்டைகள் உள்ளன. அவை 1) குறிச்சியில் 7 தொழிற்கூடங்கள், 2) ஈரோட்டில் 15 தொழிற்கூடங்கள்.

**சிட்கோவின் தொழிற்பேட்டைத் திட்டங்கள் :**

தொடக்கம் முதல் 31-3-78 முடிய சிட்கோ 332 தொழிற்கூடங்களை ரூ. 332.76 இலட்சம் மதிப்பில் 9 இடங்களில் கட்டி வழங்கியுள்ளது. இம்மாவட்டத்தில் ரூ. 58.00 இலட்சத்தில் கட்டப்பட்ட 63 தொழிற்கூடங்கள் அடங்கும்.

மேலும், 1978-79ஆம் ஆண்டு மட்டும் தற்போது திட்டமிட்டுள்ளபடி கோவையில் குறிச்சியில் 26 தொழிற்கூடங்கள், திருப்பூரில் 30 தொழிற்கூடங்கள் ஆக மொத்தம் 56 தொழிற்கூடங்களை ரூ. 47.74 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டித் தொழில் முனைவோர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 1,170 பேர்களுக்கு இம்மாவட்டத்தில் வேலை வாய்ப்புத் தோற்றுவிக்கப்படும்.

கிராமப் புற வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு கிராமம் மற்றும், குடிசைத் தொழில் வளர்ச்சிக்கானத்தொழில் துவக்க முன் வருபவர்களுக்குச் சின்னஞ்சிறு தொழிற்கூடங்களைக் கட்டித் தரும் புதிய திட்டம் ஒன்றும் துவக்கப்பட்டுள்ளது. இதன்படி 1978-79ஆம் ஆண்டு 90 சின்னஞ்சிறு தொழிற்கூடங்களை இந்த மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட இருக்கின்றன:

1. தாராபுரம்
2. காசிபாளையம்
3. கோபி
4. அனுப்பர்பாளையம்
5. குறிச்சி
6. அவினாசி
7. காங்கேயம்
8. கொடுமுடி
9. சின்னியம்பாளையம்

இத்திட்டத்தின்படி தொழில் ஆரம்பிக்க ஆர்வமுள்ளோர் முன் வருவார்களேயானால், மேலும் அதிக இடங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கான இடங்கள் மாவட்ட கோட்டாட்சித் தலைவர், மாவட்டத் தொழில் மையம், சிறுதொழில் முனைவோர் சங்கம் ஆகியவற்றின் கூட்டாலோசனைகளுடன் நிர்ணயிக்கப்படும். இத் திட்டத்தினால் முதல்



ரப்பர் தயாரிக்கும் தொழிற் கூடம்.

கட்டத்துல் 210 பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் இம்மாவட்டத்தில் தோற்றுவிக்கப்படும்.

**சின்னஞ்சிறு தொழிற்கூடத் திட்டம் :**

1. ஒரு சின்னஞ்சிறு தொழிற்கூடத்தின் மதிப்பு ரூ. 6,900 மட்டுமே.

2. சுலபமான தவணைகளில் பணம் கட்டும் வசதி, அதாவது:

(அ) தொழிற்கூடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் 3 சதவிகிதம் நிர்வாகச் செலவுக்காகவும், 5 சதவிகிதம் முன்பணமாகவும் செலுத்த வேண்டும்.

(ஆ) மீதித் தொகையை நாள் ஒன்றுக்கு ரூ. 4 வீதம் செலுத்த வேண்டும்.

(இ) கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் 10 ஆண்டுகள்.

(ஈ) தொழிற்கூடம் அமைந்துள்ள கிராமம்—ஊராட்சியின் மக்கட் தொகை 50,000க்கு மேற்படாமலும், இயந்திரச் சாதன முதலீடு ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படாமலும் உள்ள நிறுவனங்களுக்குக் குறைந்த வட்டியில் பணம் வழங்கும் கடன் உதவித் திட்டமும் இதில் அடங்கும்.

**கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை வினியோகித்தல் :**

இரும்பு, நிலக்கரி, தீப்பெட்டி, மெழுகு, பொட்டாசியம் குளோரைடு, மட்டன் 'டாலோ' முதலிய மூலப்பொருட்களை 'சிட்கோ' வினியோகித்து வருகிறது. இதன்படி 31-3-1978 முடிய

பாலிதீன் பைகள் செய்யும் தொழிற் கூடம்.



இம்மாவட்டத்தில் சுமார் 746 தொழிற்கூடங்களுக்கு மூலப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேற்படி 15 சதவிகிதம் மத்திய மூலதன உதவி அளிக்கும் திட்டத்தில் தமிழ்நாடு 1977-78ல் முதலிடம் பெற்றுள்ளது.

இந்திட்டத்தின்படி 'சிட்கோ' 1-4-1974 முதல் இதுவரை 685 நிறுவனங்களுக்கு ரூ. 159.93 இலட்சங்கள் வரை உதவி அளிக்க அங்கீகரித்துள்ளது.

இவ்வாண்டு 150 நிறுவனங்களுக்கு ரூ. 30. இலட்சங்கள் வரை மேற்படி திட்டத்தில் உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

**விற்பனை வசதி....**

சிறிய அளவில் தொடங்கிய இத்திட்டத்தின் கீழ் இது வரை ரூ. 3.93 இலட்சம் மதிப்புள்ள பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சிறு தொழில் உற்பத்தியாளர்களுக்கு உரிய சிறப்பு விலைச் சலுகை அடிப்படையின்கீழ் பொருட்களை விற்பனை செய்ய விரும்பும் சிறு தொழில் விற்பனையாளர்களைக் கண்டறிந்து கணிசமாகப் பொருட்களை வாங்கும், மின்சார வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிநீர் மற்றும் கழிவுப் பொருள் வாரியம் முதலிய பொது நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு விற்பனை வசதி வாய்ப்பினை ஈட்டித் தரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிட்கோ - தமிழ்நாடு சிறு தொழில் முதலீட்டுக்கழகக் கூட்டு (SIDCO - TIIC) திட்டத்தின் கீழ் தவணை முறையில் இயந்திரங்கள் வாங்கக் கடனுதவி வழங்கும் திட்டத்தில் 1-4-1974 முதல் ஜூன் 78 முடிய ''சிட்கோ'' 1,058 தொழில் முனைவோர்க்கு இயந்திரங்கள் வாங்க ரூ. 1,690 இலட்சங்கள் வரை உதவி அளிக்க அங்கீகரித்துள்ளது.

இதில் கோவை மாவட்டத்தில் மட்டும் 14 நிறுவனங்களுக்கு ரூ. 73.01 இலட்சம் வரை உதவி அளிக்க அங்கீகரிக்கப்பட்டு, இதன் பயனாக 100 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**அகதிகள் முன்னேற்றத் திட்டத்தின் கீழ்:**

ஜனவரி 1978ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் அகதிகள் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கியின் கூட்டுடன் அகதிகளை நிரந்தரமாக வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் சிறு தொழிற்சாலைகளுக்கு, வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு நபருக்கும் ரூ. 10,000 விதம் கணக்கிட்டு குறைந்த வட்டி கடனுதவி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இதுவரை 4 தொழிற்கூடங்களுக்கு ரூ. 2.30 இலட்சம் வழங்கப்பட்டு 23 அகதிகளுக்கு வேலைவாய்ப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**குறிச்சித் தொழிற்பேட்டை:**

இத்தொழிற்பேட்டையில் 63 தொழிற்கூடங்கள் 1974 மத்தியில் கட்டி முடிக்கப்பட்டு, தவணை முறைத் தொழிற்கூடம் வழங்கும் முறையின்படி வழங்கப்பட்டு வருகின்றது. இத்தொழிற்பேட்டையின் மொத்தப் பரப்பளவு 45.18 ஏக்கராகும். இந்தத் தொழிற்கூடங்களில் பொதுவாக அலுமினியம், மற்றும் பித்தளைத் தகடுகள் அச்சு இயந்திரங்கள், இயந்திர உதிரிப் பொருட்கள், பாலிதின் பைகள், பேப்பர் பைகள் மற்றும் வார்ப்பட பொருள்கள் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும் ''சிட்கோ'' தொழிலகங்களுக்குத் தேவையான அத்தியாவசியமான உதவியைப் பெற்றுத் தந்திருப்பதுடன், தொழிற்பேட்டையின்பராமரிப்பையும்பொறுப்பில் கொண்டுள்ளது. இத்தொழிற்பேட்டை திட்டத்தின் மூலம் சுமார் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

# முன்னேற்றப் பாதையில்...

**தமிழ்நாட்டில் உள்ள பதினாறு மத்திய கூட்டுறவு வங்கிகளின் நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு அறிக்கையினை தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அண்மையில் வெளியிட்டுள்ளது. அறிக்கையில் காணப்படும் விபரங்கள் இந்நிறுவனங்களின் சிறப்பான முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன.**

1977—78-ம் ஆண்டு இறுதியில் இந்த வங்கிகள் பெற்றிருந்த இட்டு வைப்புகளின் நிலுவை ரூ. 12,651·15 லட்சமாக இருந்தன. மத்திய வங்கிகளின் சுய நிதி ஆதாரங்களுக்கு இட்டு வைப்புகள் 71 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருந்து வருகின்றன. இது ஓர் சிறப்பு அம்சமாகும். ஐந்து மத்திய கூட்டுறவு வங்கிகள், அதாவது கோயமுத்தூர், சென்னை, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மத்திய வங்கிகள், ஒவ்வொன்றிலும் ரூ. 10 கோடிக்கும் அதிகமான அளவில் இட்டு வைப்பு நிதிகள் குவிந்திருந்தன. இந்த 5 வங்கிகளிலும் சேர்ந்திருந்த இட்டு வைப்புகள் 58 சதவிகிதத்துக்கும் மேலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கிகள் பெற்றிருந்த கடன்களின் நிலுவை ரூ. 17,045·99 லட்சம். முன் ஆண்டு இறுதியில் இருந்ததைவிட இது ரூ. 4,314·49 லட்சம் அதிகம். இக் கடன்களில் 99 சதவிகிதத்துக்கும் மேல் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்டிருந்தது.

இணைக்கப்பட்ட சங்கங்களுக்கு மத்திய வங்கிகள் வழங்கி நிலுவையிருந்த கடன்கள் ரூ. 30,124·17 லட்சம். முந்திய ஆண்டில் இவைகளின் நிலுவை ரூ. 23,603·15 லட்சம். பெரும்பாலான கடன்கள், அதாவது ரூ. 19,429·89 லட்சம், தமிழ் நாட்டின் விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தன. நெசவுத்துறை முன்னேற்றத்துக்கு வழங்கிய கடன்களின் நிலுவை ரூ. 1,363·67 லட்சம் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நலிந்தோர்க்கு நகைக் கடன் உதவி, இதர துறைகள் மூலம் ரூ. 9,330·61 லட்சம் கடன் அளிக்கப்பட்டிருந்தது. மத்திய வங்கிகள் வழங்கியிருந்த கடன்களில் 58 சதவிகிதத்துக்கும் அதிகமான தொகை அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து கொடுக்கப்பட்டிருப்பது ஓர் சிறப்பு அம்சமாகும்.



டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்



டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை. நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்

# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

# மின் விளக்குப் பொறி

**ப**யிர்களுக்கு ஊறு விளைவிக்கும் பூச்சிகளில், சிலவற்றைத் தவிர மற்ற எல்லாமே மூன்று பருவங்களைக் கடந்துதான் அந்துப்பூச்சிகளாக மாறுகின்றன. அதாவது 1. முட்டைப் பருவம், 2. புழுப் பருவம், 3. கூட்டுப் புழுப் பருவம், 4. அந்துப் பூச்சிப் பருவம்.

தாய் அந்துப் பூச்சியும், ஆண் அந்துப் பூச்சியும் இனச் சேர்க்கைக்குப் பின் நூற்றுக்கணக்கான முட்டைகளைப் பயிரின் இலைகளின் இடுகின்றன என்பதனை எல்லாரும் அறிவோம்.

பயிர்களுக்கு ஊறு விளைவிக்கும் பூச்சிகளில் பெரும்பாலானவை எல்லாப் பருவத்திலும் பயிர்க் காலம் முழுவதும் ஊறு விளைவிப்பதில்லை. சில குறிப்பிட்ட பருவத்தில் குறிப்பிட்ட பயிரின் வளர்ச்சிக் காலத்தில்தான் தீங்கு விளைவிக்கிறது. பயிருக்கு ஊறு விளைவிக்கும் இப்பூச்சிகள் கூட்டுப் புழுவில் இருந்து அந்துப் பூச்சிகளாக வெளிவந்த உடனேயே அழித்துவிட்டால் பின் அவை முட்டையிட்டு அவற்றிலிருந்து வெளிப்படும் பல நூற்றுக்கணக்கான புழுவைக் கட்டுப்படுத்த ஆகும் செலவு மிக மிச்சமாகும். மேலும், பூச்சி பயிரை, ஓரளவு சேதப்படுத்திய பின்னர்தான் நம்மால் பூச்சியை ஒழித்து எஞ்சியுள்ள பயிரைக் காப்பாற்ற முடியும்.

ஆகவேதான், அந்துப் பூச்சிகளைப் பிடித்து ஒழிக்கவும், எப்பருவத்தில் எந்தப் பூச்சிகள் அதிகம் வருகின்றன எனக் கணக்கிடவும் மின் விளக்குப் பொறி வைக்கப்படுகிறது.




சாதாரணமாகவே தாய் அந்துப் பூச்சிகள் இரவில் விளக்கின் ஒளியில் ஈர்க்கப்பட்டு விளக்கைச் சுற்றி வரும். இந்தத் தத்துவத்தை வைத்துத்தான் மின் விளக்குப் பொறியில் 125 வாட்ஸ் பாதரசக் குமிழ் வைக்கப்பட்டுள்ளது.

இரவில் இவ் விளக்கு பிரகாசமாக எரியும்பொழுது 2 மைல் சுற்றளவு வரை ஒளி நன்கு தெரியும். இதன் ஒளியால் தாய் அந்துப் பூச்சிகள் கவரப்பட்டு விளக்கைச் சுற்றிப் பறக்கும்பொழுது அதில் அமைக்கப்பட்டு உள்ள பாபல் தகட்டில் அடிப்பட்டுப் புனல் போன்ற அகன்ற வாயுள்ள துத்த நாக அண்டாவில் விழுகிறது.

அண்டாவில் விழுந்த அந்துப் பூச்சி வெளியே வர மீண்டும் பறக்கும் பொழுது அண்டாவில் ஒரு சிறு கண்ணாடிப் புட்டியில் வைக்கப்பட்டுள்ள நூவான் என்ற மருந்து நனைந்த பஞ்சிலிருந்து வெளிப்படும் விஷ வாயு இப்பூச்சிகளைக் கொன்று விடும். இவை அண்டாவில் அடியில் இணைத்துள்ள அடிப்பாகத்தில் சிறு துளைகள் இடப்பட்ட கண்ணாடிப் புட்டியில வந்து விழுந்து விடும்.

இவ்விதம் விழும் பூச்சிகளை தினமும் பிரித்து அவற்றின் எண்ணிக்கையை தினமும் ஒரு பதிவேட்டில் குறித்து வர வேண்டும். ஏதாவது ஒரு அந்துப் பூச்சி விழுந்தால், நிச்சயமாக அவற்றைத் தங்களுடைய பயிர்களிலும் காணலாம். ஆகவே, அந்துப் பூச்சிகள் மின் விளக்குப் பொறியில் கண்டதும் தம் பயிர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு செய்தால் அதிகச் செலவில்லாமல் தூள் மருந்தாலேயே பூச்சிகளிலிருந்து பயிரைக் காக்கலாம்.

மேலும் இந்தப் பதிவேட்டை நல்ல முறையில் பராமரித்து வந்தால் ஆண்டில் எந்த மாதத்தில் எந்தப் புழுக்கள் அதிகம் தோன்றும் என்றும் கணித்து முன்கூட்டியே விலை குறைவாய் உள்ள தூள் மருந்து தூவி, பயிர்களைக் காக்கலாம்.

ஆகவே, விவசாயிகள் தாமே இந்த மின் விளக்குப் பொறிகளைத் தங்கள் தோட்டத்தில் 5 ஏக்கருக்கு ஒன்று விதம் வைத்தால் பூச்சிகள் தொல்லை பெரிதும் குறையும். இரவு நேரத்தில் மாலை 7 மணி முதல் இரவு 12 மணி வரை வைத்தால் போதுமானது. இதற்காகும் ஒரு நாளைக்காகும் செலவு 50 காசுக்கும் குறைவு தான்!

# கோழிமுட்டைகளை அநேக நாட்கள் பாதுகாக்கும் முறை



கிராமங்களிலும், பட்டணங்களிலும் அநேகர் கோழிப் பண்ணைகள் வைத்துள்ளனர். ஏனெனில், இது ஒரு இலாபகரமான தொழிலாகும். கோழிப் பண்ணைகளின் வளர்ச்சி சென்ற பத்து ஆண்டுகளில் மிகவும் அதிகரித்துள்ளது.

கோழிமுட்டை ஒரு சத்து மிகுந்த உணவுப் பொருள். இதில் புரதச் சத்து, கொழுப்புச் சத்து, இரும்புச் சத்து, உயிர்ச்சத்துக்கள் ஏ, பி, போன்றவை உள்ளன. முட்டையின் புரதச்சத்தின் தரம் மற்ற எல்லா உணவுப் பொருட்களின் புரதங்களைவிட மேலானது. இத்தகைய தன்மை வாய்ந்த முட்டை, விரைவில் கெட்டுப் போகிறது. சாதாரணமாக முட்டை, அறை வெப்ப நிலையில் (28°-34°சி) ஒரு வாரம் மட்டுமே தரமுள்ளதாய் இருக்கிறது.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்குச் சுமார் 12,000 மில்லியன் முட்டைகள் உற்பத்தியாகின்றன. ஆனால், அவற்றைப் பாதுகாத்து அதிக நாட்கள் கெடாமல் சேமித்து வைப்பதற்கு வசதியில்லை.

விற்பனை வசதிகள், சீரான முறையில் இல்லாததால் சில சமயங்களில் பண்ணைகளிலோ அல்லது வியாபாரிகளிடமோ முட்டைகள் விற்காமல் தேங்கி விடுகின்றன. அச் சமயங்களில் முட்டைகள் கெட்டுப் போவதால் நஷ்டமேற்பட நேரலாம். மேலும், முட்டைகள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து வெகு தொலைவிற்கப்பாலுள்ள இடங்களுக்குச் சில சமயங்களில் அனுப்பப்படுகின்றன. இதனால் முட்டையிட்டுப் பல நாட்களுக்குப் பின்பே அது விற்பனையாக வேண்டியுள்ளது. நம் நாட்டின் வெப்பநிலை அதிகமானதால், முட்டை சீக்கிரத்தில் கெட்டுப்போக ஏதுவாகிறது.

**புதிய முட்டையின் தரத்தை அறிவதெப்படி?**

ஒரு முட்டையை உடைத்து, தட்டில் ஊற்றினால், அது புதிய முட்டையாக இருப்பின், அதிகமாகப் பரவாமல் இருக்கும். மேலும், முட்டையின் வெண்கரு சிறிது கெட்டியாக இருக்கும். முட்டையின் மஞ்சள் கரு உயரமாகவும், குவிந்தும் இருக்கும். ஆனால், நாள்பட்ட பழைய முட்டையை உடைக்கும்போது அதன் வெண்கரு நீர்போல், தட்டில் அதிகமாகப் பரவும். மேலும், அதன் மஞ்சள் கரு தட்டையாகவும், அகலமாகவும் இருக்கும். இவ்வாறான முட்டை தரம் குறைந்ததாகும். மேலும், பழைய முட்டையில் காற்றுப்பை பெரியதாக இருக்கும். இக்காற்றுப் பைகளின் அளவை, முட்டையினூடே வெளிச்சத்தைச் செலுத்திப் பார்ப்பதன் மூலம் அறியலாம்.

இவ்வாறு ஏற்படும் சேதங்களைத் தடுத்து, முட்டையைச் சுலபமாக அதிக நாட்கள் பாதுகாக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உணவு நுண்ணியல் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக ஒரு சுலபமான வழிமுறை கண்டறியப்பட்டுள்ளது.

கடலை எண்ணெய் 100 மில்லி லிட்டர், தண்ணீர் 100 மில்லி லிட்டர், ட்ரைஇத்தனால் அமைன் (Triethanol amine) 1 மில்லி லிட்டர், ப்யூடிலேடட் ஹைடிராக்ஸி டாணையீன் (Buiylated Hydroxy Toluene) 100 மில்லி கிராம், அக்ரிமைசின் (Agrymycin) 20 மில்லி கிராம் இவற்றை ஒன்றாக ஒரு 'மிக்ஸியில்' அடித்துக் கலந்து கொள்ள வேண்டும். இப்போது நீரும் எண்ணெய்யும் சேர்ந்த 'எமல்ஷன்' கலவை வெண்மை நிறத்தில் காணப்படும். இதை ஒரு தெளிப்பானைக் (Sprayer) கொண்டு முட்டைகளின்மேல் அடிக்க வேண்டும். வீடுகளில் கொசு மருந்து அடிக்க உபயோகிக்கும் கருவியை இதற்குப் பயன்படுத்தலாம். ஆயிரக்கணக்கான முட்டைகளுக்கு, விவசாயத்தில் உபயோகிக்கும் பெரிய தெளிப்பான்களைப் பயன்படுத்தலாம். ஆனால், ஏற்கெனவே வேறு மருந்துகளையும், கொல்லிகளையும் தெளிக்க பயன்படுத்தப் படுத்தப்பட்ட தெளிப்பான்களை இதற்கு உபயோகிக்கக்கூடாது. தெளிப்பான்கள் இல்லாத நேரங்களில், ஒரு பஞ்சை இந்தக் கலவையில் நனைத்து முட்டைகளின் மேல் துடைக்கலாம்.

ஒரு லிட்டர் 'எமல்ஷன்' கலவையைக் கொண்டு சுமார் 6,000 முட்டைகளைத் துடைக்கலாம். அல்லது 3,500 முட்டைகளின் மேல் தெளிக்கலாம். ஆயிரம் முட்டைகளைக் கலவையால் துடைக்க 85 காசும், கலவையால் தெளிக்க ரூ. 1.50 ஆகும். கலவையைத் தெளிக்கும்போது, அது முட்டை இல்லாத இடங்களிலும் படுவதால் அதிகச் செலவாகிறது. ஆனால், பெரிய கோழிப் பண்ணைகளில் கலவையைத் தெளிக்கும் முறையே சிறந்ததாகும். பெரிய தெளிப்பானை உபயோகிக்கும்போது, ஒரு மணி நேரத்தில், இரண்டு வேலையாட்கள் வைத்து, 8,000 முட்டைகளின்மீது தெளிக்கலாம்.

முட்டைகளைத் துடைப்பதால் குறைந்த செலவானாலும், இப்படிச் செய்ய அதிக நேரமாகும். மேலும், ஒவ்வொரு முட்டையாகத் துடைக்கும்போது, அவை விழுந்து உடைய வாய்ப்புண்டு. இதனால் தெளிக்கும் முறையே சிறந்தது.

இவ்வாறு கலவை தெளிக்கப்பட்ட முட்டைகளை நல்ல காற்றோட்டமுள்ள அறைகளில் வைக்க வேண்டும். இம்முட்டைகளை அறை வெப்பநிலையில் 4 வாரங்களுக்கு, முட்டையின் தரம் அதிகமாகக் குறையாமலும், கெடாமலும் வைத்திருக்கலாம்.

**எஸ். நீலகண்டன்,**
**ஏ. பி. சாந்தி,**
**உணவு நுண்ணியல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோயம்புத்தூர்.**

# அதிக உற்பத்திக்கான புதிய ரகங்கள்



விவசாய ஆராய்ச்சியில் நமது நாடு மிகுந்த திறமை கொண்டதாக விளங்குகிறது. இதன் காரணமாக அதிக தானிய உற்பத்தியை அடைய முடிந்தது. கடந்த ஆண்டு 1,260 லட்சம் டன் தானியம் உற்பத்தி செய்யப்பட்டது. மதிப்பீடு செய்யப்பட்ட 52.8 இலட்சம் டன் நெல் உற்பத்தியும், 31.5 இலட்சம் டன் கோதுமை உற்பத்தியும் அதிக உற்பத்தி தரும் ரகங்களை விவசாயம் செய்வதால் ஏற்பட்ட விளைவாகும். இந்த ரகங்கள் நோய் தாங்கும் சக்தி கொண்டவையாகவும், அதிக உற்பத்தி தருவனவாகவும் உள்ளன. சிறந்த பயிர் விளைச்சல் முறையும், அதிக உற்பத்திக்கு ஒரு காரணமாகும்.

நாட்டில் மக்காச் சோளம் உற்பத்தியில் புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டது. பீகாரில் ரபி பருவ மக்காச் சோளத்தைப் புகுத்தி புதிய சாதனையை ஏற்படுத்தப்பட்டது. கரீப் பருவ மக்காச் சோளத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியின் கூடுதலாக இது இருக்கிறது. கடலைப் பருப்பு வகையில் புதிய பருப்பு வகையைப் புகுத்துயதின் மூலம் மத்திய மற்றும் தீபகற்பப் பகுதிகளில் நல்ல விளைச்சல் ஏற்பட்டது. பருத்திச் சாகுபடியில் எச். 655, எப். 414, எச். 777, எல்டி. 713 ஆகிய புதிய ரகங்கள் புகுத்தப்பட்டன. ராஜஸ்தான் கால்வாய்ப் பகுதிகளிலும், பஞ்சாப், அரியானா பகுதிகளிலும் இப்பயிர் நல்ல மகசூல் ஆகியிருக்கிறது. பூச்சிக் கொல்லி நிர்வாகத் தொழில் நுட்பம் அபிவிருத்தி அடைந்ததின் மூலம் பருத்தியைத் தாக்கும் பல்வேறு பூச்சிகளைக் கொல்லும் முறை பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஒருங்கு இணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பருத்தி விளையும் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இருந்த பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. அதன் மூலம் 8 வகையான நிலக்கடலை ரகங்களும், இரு வகை சூரியகாந்தி விதை உள்ளிட்ட பல் வேறு தானியங்களில் புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சூரியகாந்தி விதைகளில் கண்டுபிடிக்கப்பட்ட 2 ரகங்கள் தற்போது வர்த்தக உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றன. புதிய சணல் ரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 125 நாட்களில் எக்டேர் ஒன்றுக்கு 7 முதல் 8 குவிண்டால் சணல் விளையும் ரகமும், 150 நாட்களில் விளையும் சணல் பயிர் ரகமும் இந்தப் புதிய கண்டு பிடிப்பில் இடம் பெற்றுள்ளன.

குறைந்த காலக் கரும்பு ரகமான சிஓ 7704, சிஓ 7712, சிஓஏ 7601, சிஓசி 67-1 ஆகியவை புகுத்தப்பட்டுள்ளன. அதில் சிஓ 7712, எட்டு மாதப் பருவம் கொண்டவை. அது 18சதவிகிதம் சக்ரோஸை 90 சதவிகிதம் சுத்தமாக கொடுக்கும் தன்மை கொண்டதாகும். இதைப் போலவே 9 மாதங்களில் பலன் தரும் சிஓஏ 7601 என்ற ரகம் அதிக விளைச்சல் தரும் ரகமாகும்.

### எண்ணெய் வித்துக்களுக்கு ஊக்க விலை

நிலக்கடலை, சூரியகாந்தி விதை சோயா பீன்ஸ் ஆகியவற்றிற்கு குவிண்டால் ஒன்றுக்கு 175 ரூபாய் உதவி விலை கொடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது 1977-78 பருவத்திற்காகக் கொடுக்கப்படும். சென்ற ஆண்டு நிலக்கடலைக்கு, கொடுத்த உதவி விலையை விட இது 15 ரூபாய் அதிகமாகும். சோயா பீன்ஸ்க்கு 30 ரூபாய் (குவிண்டால் ஒன்றுக்கு) அதிகம் கொடுக்கப்படுகிறது. சூரியகாந்தி விதைக்கு10ரூபாய் அதிகம். உதவி விலையில் அதிகரிப்பு ஏற்பட்டது. விவசாயிக்கு எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனை ஐக்கிய நிறுவனம் இந்த உதவி விலை சம்பந்தமான பணிகளை மேற்கொண்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் அதற்கு முந்திய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 78 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களை விட அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் 90 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. இது எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் 15.4 சதவிகிதம் அதிகம். 1977-78ல் நிலக்கடலை உற்பத்தி 60.7 இலட்சம் டன் ஆகும். அதற்கு முந்திய ஆண்டில் உற்பத்தி செய்தது 52.6 இலட்சம் டன்.

### கிராமப்புற ஏழைகளுக்கான சத்துணவு

நமது நாட்டில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது. சமூகத் தோட்டங்கள், பள்ளிகள், வீட்டுத் தோட்டங்கள் ஆகியவற்றில் காய்கறிகளையும், பழங்களையும் மேலும் உற்பத்தி செய்வதற்கு இந்தத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கோழிப் பண்ணைகள் கிராமங்களிலும், வட்டாரங்களிலும் அமைக்கப்படுகின்றன. தகுந்த இடங்களில் மீன் வளர்க்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இதுவரை 48 ஆயிரம் பள்ளித் தோட்டங்களில் 13,158 எக்டேர் நிலங்களிலும் 30.55 லட்சம் வீட்டுத் தோட்டங்களில் 50 ஆயிரம் எக்டேர் நிலங்களிலும், 17,500 சமுதாயத் தோட்டங்களில் 9 ஆயிரம் எக்டேர் நிலத்திலும் காய்கறிகளும் பழங்களும் உற்பத்தி செய்ய இந்தத் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. 7 ஆயிரத்துக்கு மேற்பட்ட வட்டாரங்களில் கோழிப் பண்ணைகளும், 75 ஆயிரம் கிராமங்களில் கோழிப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன் வள அபிவிருத்திக்காக 84 ஆயிரம் எக்டேர் நீர்ப் பரப்பில் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. சத்துணவுகளை எப்படி உற்பத்தி செய்வது என்பது பற்றி கிராம மக்களுக்கு விளக்கச் செயல்கள் மூலம் நம்ப வைத்து அதன் மூலம் இத்திட்டத்தை மேலும் மேம்பாடடையச் செய்ய வேண்டும். இதன் மூலம் அவர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் மாறுபடும். நமது நாட்டில் சத்துணவுத் திட்டம் தற்போது 1,754 வட்டாரங்களில் செயல்படுகின்றன. இது நாட்டிலுள்ள வட்டாரங்களில் மூன்றில் ஒரு பகுதியாகும். சுய உதவியின் அடிப்படையில் ஆங்காங்கே கிடைக்கும் சத்துணவு வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதன் மற்றொரு அம்சம் சமையலிலும், உணவு முறைகளிலும், புதிய வழிமுறைகளை செயல் விளக்கம் மூலம் செய்வதாகும். இதில் 30 ஆயிரம் மகிளா சமிதிகளும், 9.39 இலட்சம் உறுப்பினர்களும் 25 ஆயிரம் இளைஞர் மன்றங்களும், 5.2 இலட்சம் உறுப்பினர்களும் பங்கு கொண்டுள்ளனர். இந்த உறுப்பினர்களுக்கு போதிய பயிற்சியை அளிக்கப்படுகிறது.



# ஆனைமலை அழைக்கிறது!

நள்ளிரவு!

நடுக்காட்டில் நாங்கள் அகப்பட்டுக் கொண்டோம்.

எங்களைச் சுமந்து வந்த 'ஜீப்' இப்படி 'மக்கர்' பண்ணும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை!

அங்கு வருவதற்கு முன், அது கொடிய விலங்குகள் வாழும் பயங்கரக் காடு என்று கேள்விப்பட்டது அடிக்கடி நினைவுக்கு வந்தது!

என்றாலும் அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு 'ஜீப்'பைத் தள்ளிப் பார்த்தோம். எங்கள் 'பாச்சா' ஒன்றும் அதனிடம் பலனளிக்கவில்லை.

காரிருள்-பயங்கரக் காடு-கொடிய விலங்குகள்-எங்களைக் கலக்கியது!

உடனே 'ஜீப்'பைக் காட்டிலேயே விட்டுவிட்டு 'வேனில்' எல்லாருமாக ஏறிக்கொண்டு விரைந்தோம்.

'காரிருளில் காட்டுக்கு யாராவது போவார்களா?' என்று நீங்கள் கேட்பது புரிகிறது. காட்டில் விலங்குகளைப் பார்க்க வேண்டாமா? அந்த அனுபவத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாமா?

**8,000 அடி உயரத்தில்...!**

அக்டோபர் திங்கள் 4-ஆம் நாள்!

தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு, வானொலி, தொலைக்காட்சி உட்பட சுமார் 35 செய்தியாளர்கள்-கோவை மாவட்டத்தில் மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் செய்யப் புறப்பட்டோம்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இந்த அரிய வாய்ப்பைத் தந்தது.

6-ந் தேதி மாலை, எங்களை ஏற்றி வந்த பேருந்து, பூமியிலிருந்து சுமார் 8,000 அடி உயரத்திலுள்ள 'டாப் சிலிப்'புக்குப் பாம்புபோல ஊர்ந்து சென்றது. வளைந்து வளைந்து சென்ற பாதையில், மேலே மேலே போய்க் கொண்டே இருந்தோம். கீழே பார்க்கின்றோம். 'கிடு கிடு' பாதாளம். கோவை நகரே தெரிகிறது. உயர்ந்து வளர்ந்த பல வகையான மரங்கள். பசுமையான அடர்ந்த செடிகொடிகள், புதர்கள், கற்பாறைகள், எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசே



லெனப் பந்தல் போட்டிருக்கும் இயற்கை அன்னையின் எழில் தாண்டவம்! பார்த்துக்கொண்டே போகிறோம்.

'டாப் சிலிப்' என வழங்கும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தோம்.

உடனே பெட்டிப் படுக்கைகளை விடுதியில் வைத்துவிட்டு, அவசர அவசரமாகப் புறப்பட்டோம், காட்டைச் சுற்றிப் பார்க்க!

வனத்துறையின் 'வேனில்' சிலரும், 'ஜீப்'பில் சிலருமாகக் காட்டுக்குள் புகுந்தோம். எங்களுக்கு முன்னதாகப் புகைப்படக் காரர்களும், தமிழ்நாடு திரைப் படப் பிரிவினரும், தொலைக் காட்சி நிலையத்தினரும் கையில் 'காமிரா'வை வைத்துக்கொண்டு அலைந்து கொண்டிருந்தார்கள்.

''அதோ! யானை!'' ஒருவர் தூரத்தில் இருந்த ஒன்றைச் சுட்டிக்காட்டினார். நாங்கள் அந்தத் திசைப்பக்கம் ஆவலுடன் பார்த்தோம். யானைபோல் இருந்த கருத்த கற்பாறை அது!

அந்த 'வேன்' காட்டுக்குள் புகுந்து நெளிந்து சென்றது. வேனுக்குள்ளேயே மேற்புறத்தைத் திறந்து கொண்டு, ஏணியின் மேலே ஏறி நின்று ஒருவர் 'சர்ச் லைட்' ஒளியைக் காட்டுக்குள் பாய்ச்சி விலங்குகளைக் காட்டத் தயாராக நின்று கொண்டிருந்தார்.

நாங்கள் மாலை புறப்பட்ட போது ஐந்து வகையான கிளிகள் பறந்து செல்வதைப் பார்த்தோம்!

**உஸ்...பேசாதே!**

டாப் சிலிப்பில் 60 கிலோ மீட்டர் தூரம் வரை போகலாம் என்றும், காட்டுக்குள் வரும் போது யாரும் பேசக்கூடாது என்றும், மிருகங்களைப் பார்ப்பது உங்களுடைய 'லக்' என்றும் வன அலுவலர் ஒருவர் முன்கூட்டியே எங்களுக்குத் தெரிவித்திருந்தார். அதன்படி நாங்கள் யாரும் பேசாத மௌனியாய் கண்களை நாலாபக்கமும் சுழற்றிக்கொண்டு வந்தோம்.

கொஞ்சங் கொஞ்சமாக இருள் கவ்விக் கொண்டு வந்தது. கொடிய விலங்குகளும், பாம்புகளும் நிறைய இருக்கின்றன என்று வன அலுவலர் சொன்னதை நினைத்துக் கொண்ட எங்களுக்கு உள்ளூர பயம்தான். என்றாலும் காட்டில் தன்னிச்சையாகத் திரியும் விலங்குகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உந்தித் தள்ளியது.

'வேன்' சென்று கொண்டிருந்தது!

ஒருவர் 'கரடியைப் பார்த்தேன்!' என்று சொன்னதும், உடனே மற்றொருவர் 'கரடி விடாதீர்!' என்று சொல்லி முடிப்பதற்குள், வேனிலிருந்த விளக்கின் ஒளி காட்டுக்குள் பாய்ந்தது. 'அதோ, பாருங்கள்! காட்டெருமைகளை!' என்றார் வன அலுவலர். ஒளியைக் கண்டு கண்ணைச் சிமிட்டும் காட்டெருமைகளைக் கண்டோம்.

**போகாத இடந்தனிலே..**

சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வரகலியாறு வரை சென்றோம். அதற்கு மேல் கரடுமுரடான காட்டுப்பாதை. பொதுவாகப் பார்வையாளர்கள் போகாத பாதை அது. அங்கும் சென்றோம். இருள் சூழவே வந்த வழியே திரும்பினோம்!

அப்போது மான்களையும் பார்த்தோம். மானின் மருண்ட விழியைப் பார்த்ததால் என்னவோ, நாங்களும் கொஞ்ச நேரத்தில் மருண்டோம்...ஆம். அப்போது தான் 'ஜீப்' 'மருண்டு' நின்று விட்டது!

மறுநாள் காலை 5 மணிக்கெல்லாம் தயாராகிவிட்டோம். கடுங் குளிரில் கம்பளியைப் போர்த்திக் கொண்டு 'வனவாசம்' சென்றோம்!

ஆனைமலைக்கு வந்து யானைகளைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கத்தோடு சென்று கொண்டிருந்தோம். அப்போது முதன் முதலில் கருங்குரங்கு முகத்தில் விழித்தோம். நரிமுகத்தில் விழித்தாலும் பரவாயில்லை! கொஞ்ச தூரம் சென்றோம். கிரௌஞ்சப் பறவை ஒன்று பறந்து சென்றது. இப்பறவையைக் காண்பது மிகவும் அரிதாம்!

**உயிர்மேல் ஆசை!**

''இங்கிருந்து, நடந்து போனால் அங்கிருக்கிற பள்ளத்தாக்கில் யானையைப் பார்க்கலாம்'' என்றார் வன அலுவலர். நாங்கள் அதற்குச் சம்மதித்தோம். வேனை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு, பாதையே இல்லாத மரஞ்செடி கொடிகளுக்கிடையே நடக்க ஆரம்பித்தோம். முன்னே வன அலுவலர் செல்ல, பின்னே ஒருவர்பின் ஒருவராக வரிசையாகச் சென்றோம். அந்தக்காட்சி யாத்திரை செல்வது போல இருந்தது!

சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரம் வரை சென்றுவிட்டோம். எங்களுக்கு உயிர்மேல் ஆசை



வந்து விட்டது! இப்படியே திரும்பிவிடலாமா என்றும் மெல்ல பேசிக்கொண்டோம். நடந்து போகும்போது இடையிடையே சில்லென்று ஓடிய சிற்றோடையைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது.

**மரத்தில் தவம்!**

நாலாபக்கமும் பார்த்தவாறே சென்ற எங்களை ஒரு மரத்தடிக்கு அழைத்து வந்தார் வன அலுவலர். அந்த மரத்தில்தான் பிரபல புகைப்படக்காரர் திரு. கிருஷ்ணன் என்பவர் தவம் கிடந்தார் என்பதை அறிந்தோம்.

(திரு கிருஷ்ணன் அவர்கள் வன விலங்குகளைப் படம் எடுப்பதில் வல்லுநர்.) ரொட்டி, தண்ணீர், கூழ் இவைதாம் அவருக்கு ஆகாரமாம். மரத்துக்குப் பத்தடி தூரத்தில் தரையில் உப்பு தூவப்பட்டிருந்ததைப் பார்த்தோம்.

காட்டில் உப்பு எப்படி வந்தது?

உப்பு என்றால் விலங்குகளுக்குக் கொள்ளை ஆசையாம். அதை விரும்பித் தின்ன விலங்குகளெல்லாம் அங்கே வருமாம். அப்போதுதான் மரத்தின்மேலே இருக்கும் புகைப்படக்காரர் தம் 'கைவரிசையைக்' காட்டுவாராம்.

பள்ளத்தாக்கும் வந்தது! எங்களுக்குப் பசியும் வந்தது; பயமும் வந்தது! அங்கே 'சலசல' வென சிற்றோடையின் ஓசை கேட்டதே தவிர, யானை ஒன்றும் தென்படவில்லை. நடந்து வந்த களைப்பில் ஒரு மேட்டுப் பகுதியில் அமர்ந்தோம். கால்களைப் பார்த்தோம். செடிகொடிகள் கீறிய அடையாளம் இருந்தது. எங்கள் புகைப்படக்காரர் ஒருவரின் காலில் 'அட்டை' உறிஞ்சியதால் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

பிறகு, வந்த வழியே வராமல் வேறு வழியாக விரைந்து சென்று 'வேன்' இருக்குமிடத்தை அடைந்தோம். அப்போதுதான் மூச்சு வந்தது!

விரைந்து வரும்போது இரு பக்கமும் 'சலசல'வெனச் சத்தம் கேட்டது. பிறகு விசாரிக்கும் போதுதான், அது பாம்புகள் ஓடும் சத்தம் எனத் தெரிய வந்தது !

**யானையைப் பார்த்தோம் !**

விடுதிக்கு வந்த நாங்கள் பிறகு மீண்டும் பயணமானோம், கேரள மாநிலத்திலுள்ள பரம்பிக்குளம்-ஆளியாறு அணைக்கட்டைப் பார்க்க!

எழில் கொஞ்சும் அந்த அணைக் கட்டைப் பார்த்துவிட்டுத் திரும்பும் வழியில் காட்டில் மூங்கில் மரங்களைச் 'சடசட'வென முறிக்கும் சத்தம் கேட்கவே, எங்களை ஏற்றி வந்த பேருந்து சட்டென நின்றது. எல்லாரும் ஜன்னல் வழியே தலையை நீட்டிக்கொண்டு வெளியே பார்த்தோம். இரண்டு மூன்று யானைகள் மூங்கில் மரங்களை முறித்தும் சாய்த்தும் அட்டகாசம் செய்து கொண்டிருந்தன. எங்கள் புகைப்படக்காரர் காமிராவுடன் ஓடி அதைப் படமெடுத்துக் கொண்டு வந்தார்.

வழியில் கருங்குரங்குகளை நிறைய பார்த்தோம். அவை மரத்துக்கு மரம் தாவி 'சர்க்கஸ்' ஆடிக்கொண்டிருந்தன!

**ஆனைமலைச் சரணாலயம் :**

ஆனைமலை வனவிலங்குச் சரணாலயம் எங்குள்ளது?

கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட்டப் பகுதிகளில் இச்சரணாலயம் அமைந்துள்ளது. மலை முகடுகள் மிகுந்த மேலைத் தொடர் மலைகள் மாவட்டத்தின் மேற்கு எல்லையாக அமைந்துள்ளன. இவற்றுள் 2,250 உயரச் சிகரங்கள் உள்ளன.

இம்மலைத் தொடர்களின் கிழக்குச் சரிவுகள் வனவளம் மிகுந்து காணப்படுகின்றன. வட பகுதியில், சந்தன மரங்கள் ஏராளம் உண்டு. நடுப்பகுதியிலும், தென்பகுதியிலும் தேக்கு ஈட்டி, வெண்தேக்கு, வேங்கை, மருது போன்ற மரங்களும், விறகு மூங்கில் போன்றவையும் குங்கிலியம், சீயக்காய், பிரம்பு, தேன், நெல்லி, மாங்காய் போன்ற சில காட்டுப் பொருள்களும் கிடைக்கின்றன.

இத்தகைய வனச்செல்வங்கள் நிறைந்த காடுகளிலேதான் ஆனை மலை வன விலங்குச் சரணாலயம் அமைந்துள்ளது. இது தென் வடலாகச் சுமார் 40 மைல் நீளமும், கிழக்கு மேற்காகச் சுமார் 30 மைல் அகலமும், பரந்து விரிந்து சுமார் 940 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ளது.

**வேறெங்கும் இல்லை !**

உயர்ந்த மலைகளும், செழிப்பான பள்ளத்தாக்குகளும், பீட பூமிகளும் ஒருங்கே சேர்ந்துள்ளமை இச்சரணாலயத்தைத் தவிர வேறெங்கும் காண இயலாத ஒன்றாகும்.

இங்கு மிதமான தட்பவெப்ப நிலையின் காரணமாகவும், பசுமையான தாவரங்கள் செறிந்து காணப்படுவதாலும் பெரும்பான்மையான வனவிலங்குகள் இச் சரணாலயத்தில் வாழ்கின்றன.

ஆனமலை வனவிலங்குச் சரணாலயத்தைக் கண்டு மகிழ்ந்திட பொள்ளாச்சியிலிருந்தோ, வால்பாறையிலிருந்தோ, உடுமலைப் பேட்டையிலிருந்தோ பார்க்க நல்ல வசதிகள் உள்ளன. என்றாலும் பொள்ளாச்சியிலிருந்து 42 கிலோ மீட்டர் தூரத்தில் 'டாப் ஸ்லிப்' என்னும் இடம் உள்ளது. இதனையே பலரும் பார்க்க விரும்புகின்றனர்.





### 'டாப் ஸ்லிப்' எப்படி வந்தது?

'டாப் ஸ்லிப்' (Top-Slip) என்னும் பெயர் எப்படி வந்தது?

நூறு ஆண்டுகளுக்கு முன், மரங்களை வெட்டி இங்குள்ள ஒரு சரிவான இடத்திலிருந்து உருட்டி விடுவார்களாம். அந்த மரங்கள் உருண்டு வந்து அடிவாரத்துக்கு வந்துவிடுமாம். உச்சியிலிருந்து வழுக்கி விழுந்ததால் அதற்குப் பெயர் 'உச்சிவழுக்கல்' அதாவது 'டாப் ஸ்லிப்' (Top-Slip) என்ற பெயர் வழங்கலாயிற்றாம். (இதைக் கேள்விப்பட்டதும் செய்தியாளர்கள் பலர், 'யாருக்கு உச்சி வழுக்கை?' என்று தம் தலையைத் தடவிப் பார்த்துக் கொண்டனர்!).

ஆனைமலை என்ற பெயர் எப்படி வந்தது? வால்பாறையில் ஒரு பெரிய யானை படுத்திருப்பது போலக் காணப்படுவதாலும், யானைகள் இங்கு அதிகமாக இருப்பதாலும் இப்பெயர் வந்தது என்று கூறுகின்றனர்.

இந்த 'உச்சி வழுக்கல்' என்னுமிடம் அடர்ந்த காடுகளின் நடுவில் அமைந்துள்ள ஒரு சின்னக் குடியிருப்பு ஆகும். வனத்துறையினரே பெரும்பாலும் வாழ்கின்ற இப்பகுதியில், நவீன வசதியுள்ள அழகிய ஓய்வில்லங்கள் பல உள்ளன. உட் அவுஸ், சித்தன் லாட்ஜ், பைசன் லாட்ஜ், அம்புலி இல்லம் ஆகியவை இந்த விடுதிகளின் பெயர்கள். இவற்றில் அம்புலி இல்லம் உயரமான இடத்தில் அமைந்துள்ளது. அங்கிருந்து கோவை, பொள்ளாச்சி நகரைக் காணலாம்.

### காட்டுக்குள்ளே......!

இந்தச் சரணாலயத்தில் அதிக அளவில் யானைகள் உள்ளன. சாம்பர், புள்ளிமான், கடமான், எலிமான், சரகுமான் போன்றவையும்; புலி, சிறுத்தை, சாம்பல் நிறக் காட்டெருமை, கரடி, செந்நாய், ராஜநாகம், மலைப் பாம்பு, சாரைப்பாம்பு முதலானவையும் உள்ளன. இவையன்றி கருங்குரங்குகள், மலபார் அணில்கள், கிளிகள், கொம்பு மூக்கன், மைனா, புல்புல், கரிச்சான்குருவி, விசில் அடிக்கும் குருவிகள் மற்றும் பல்வேறு பறவைகளையும் இங்குக் கண்டு மகிழலாம்.

செப்டம்பர் முதல் மார்ச் வரை பார்த்துப் பரவசமடைய ஏற்ற பருவகாலங்களாகும்.

உச்சி வழுக்கலில் தங்கிச் சரணாலயத்தில் செல்ல ஊர்தி வசதிகள் உள்ளன. யானை மீதும் (பழக்கப்பட்ட யானை மீது) சவாரி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. யானைமீது ஏறிக் கொள்ள பஸ் ஸ்டாண்டு போல, யானை ஸ்டாண்டும் உள்ளது!

உலாந்தி பள்ளத்தாக்கு, சின்னார் பள்ளத்தாக்கு என்ற இடங்கள் வன விலங்குகளுக்கு நல்ல பாதுகாப்பான இடங்களாகும்.

வால்பாறையிலிருந்து சரணாலயத்தைக் காண விரும்பும் பயணிகள் சோலையார்-நீரார் போன்ற இடங்களிலுள்ள ஓய்வில்லங்களில் தங்கி உயர்ந்த மலைச்சிகரங்களின் அழகைக் கண்டு மகிழலாம். சுமார் 7,000 அடி உயரத்தில் இந்த இடம் உள்ளதால் குளிர் அதிகமிருக்கும்.

வால்பாறையிலிருந்து 25 கிலோமீட்டர் தூரத்திலுள்ள அக்காமலைப் புல்வெளிகளில் அரிதாகக் காணப்படும் வரையாடுகள் உள்ளன. வால்பாறையைச் சுற்றியுள்ள அடர்ந்த பகுதிகளில் சிங்கவால் குரங்குகள் உள்ளன. கேழையாடுகள், யானைகள், காட்டெருமை போன்றவற்றையும் இங்கே காணலாம்.

உடுமலைப்பேட்டையிலிருந்தோ அமராவதி நகரிலிருந்தோ சரணாலயத்தைப் பார்க்க விரும்புவோர் உடுமலைப்பட்டை-மூணார் சாலையில் சென்றால் புள்ளிமான்கள், காட்டெருமைகள், யானைகள், சிறுத்தைப்புலி, கடமான்கள், கேழையாடுகள் முதலானவற்றைக் காணலாம். இங்கு பகல் நேரங்களைவிட மாலை நேரங்களிலேயே விலங்குகள் அதிகம் நடமாடுகின்றன. அப்போது அவற்றைக் கண்டு மகிழலாம்.

### முதலைப் பண்ணை!

இக்காடுகள் வறண்ட இலையுதிர்க்காடுகள். வெப்பமான பகுதி இது. டிசம்பர்-ஜனவரி-பிப்ரவரி மாதங்கள் நன்றாக இருக்கும்.

இப்பகுதியிலுள்ள அமராவதி அணை நீர்த்தேக்கத்தில் முதலைகள் உள்ளன. அமராவதி நகரில் தமிழக அரசின் முதலைப்பண்ணை ஒன்றும் உள்ளது. 4 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை வயதுள்ள சுமார் 250 முதலைகளை இந்தப் பண்ணையில் பார்க்கலாம்.

ஒரு காலத்தில், ஆனைமலைச் சரணாலயத்தில் கருஞ்சிறுத்தைகள் நிறைய இருந்தன. ஆனால், இப்போது அவை ஒன்றுகூட இங்கே இல்லை. இவ்வாறு அரிய இனங்கள் அழிவதைத் தடுக்கவும் தக்கவாறு பாதுகாக்கவுமே இச்சரணாலயம் உள்ளது.

### விலங்கின ஆராய்ச்சிகள் :

இச்சரணாலயத்தைச் சேர்ந்த வனவிலங்குக் காப்பாளர் திரு பி. பத்மநாபன் அவர்கள் கூறுகிறார்:

"இந்தச் சரணாலயத்தில் பல்வேறு விலங்கினங்கள் பற்றி ஆராய்ச்சிகள் செய்ய நால்வர் வந்துள்ளனர். அவர்கள் அன்றாடம் விலங்குகளைப் பின்தொடர்ந்து சென்று அவற்றின் பழக்க வழக்கங்களை அறிகின்றனர்.

"ஒரு சமயம் நான்கு அமெரிக்கர்கள் கருங்குரங்குகள் பற்றி ஆராய்ச்சி செய்ய இங்கு வந்திருந்தார்கள். மூன்று வகைக் குரங்குகளை அவர்கள் கண்டனர். என்றாலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. சிங்கவால் குரங்கைப் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்கு! கடைசியில் அதைப் பார்த்து விட்ட மகிழ்ச்சியில் கூத்தாடினார்கள். தென்னிந்தியாவிலேயே நான்கு வகையான குரங்குகளையும் (1. நீலகிரிக் கருங்குரங்கு 2. சாம்பல் நிறமந்தி, 3. சிங்கவால் குரங்கு, 4. சாதாரணக் குரங்கு. இதைப் பழனிக் குரங்கு என்றும் கூறுகின்றனர்.) ஒரே இடத்தில் இங்குதான் காண முடியும்.

"இங்கிலாந்திலிருந்து ஒரு பெண்மணி ஐந்தாண்டுகளுக்கு ஓர் முறை இங்கு வருவார். அவருக்கு ஐம்பது வயதிருக்கும். அவர் யானைகள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தார். அவர் யானைகளைப் பின் தொடர்ந்தே போவாராம். யானை நீரில் நீந்திச் சென்றால், கூடவே அவரும்



நீந்திச் செல்வாராம். காடுகளில் சுற்றி இரவில் பாறை இடுக்குகளில் படுத்துக் கொள்வாராம்!

''இங்கு நிறைய தேக்கு மரங்கள் உள்ளன. 1928ல் நடப்பட்ட அந்த மரங்கள் ஓங்கி வளர்ந்து அடர்ந்து காணப்படுகின்றன. ஒரு மரத்தை 80 ஆண்டுகள் கழித்தே வெட்டுவார்களாம். ஒரு மரத்தின் விலை சுமார் ரூ. 3,500. இங்குள்ள மரங்கள் தரமானவை. நியாய விலைக்குக் கிடைப்பவை. அரசு போக்குவரத்துக் கழகங்கள், டான்சி முதலானவற்றுக்கு இங்குள்ள மரங்களே பயன்படுகின்றன.''

**தென்மலை யானைகள்!**

வனத்துறையின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக யானைக்குச் சிகிச்சை செய்து வருபவர் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். அவர் தம் அனுபவத்தைச் சுவைபட இங்கே கூறுகிறார்:

''இந்தச் சரணாலயத்தில் சுமார் 500 யானைகள் உள்ளன. யானைக்குச் சரியான நல்ல தீவனம், நீர் இல்லையென்றால் வயிற்றுப் போக்கு, அடைப்பான், ஈரல் சம்பந்தப்பட்ட நோய்கள் வருகின்றன.

''யானை நின்றுகொண்டே ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் தூங்கும். மத்தியான வேளையில் தண்ணீரில் குளிக்கும். சேற்றையும், மண்ணையும் வாரி இறைத்துக் கொள்ளும். தன் உடல் குளுமையாக இருக்கவே அது அவ்வாறு செய்கின்றதாம்!

''இங்குள்ள யானைகளைத் 'தென்மலை யானைகள்' என்று சொல்வதுண்டு. தமிழகத்து யானைகள் அழகான அமைப்புள்ளவை, கம்பீரமானவை. அதனால் அவற்றைக் கோவில்களில் உபயோகித்துக் கொள்கின்றனர்.

''யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். ஒரு பெரிய ஆண் யானையின் விலை ரூ. 25ஆயிரத்திலிருந்து ரூ.30ஆயிரம் வரை இருக்கும். குட்டி யானையின் (1 அல்லது 3 வயது) ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 வரை இருக்கும். பெண் யானையின் விலையோ குறைவு.

''ஆனைமலைச் சரணாலயத்தில் 800 காட்டெருமைகளும் 5,000 மான் வகைகளும், 150 கரடிகளும், 8 புலிகளும், 30 சிறுத்தைகளும், செந்நாய், மரநாய், பன்றிக் கூட்டங்களும், புனுகுப் பூனை, பலவிதமான கழுகுகள், மலபார் ஆன்பில் (ஈருவாட்சிப் பறவை), நான்கு வகையான மரக்கொத்திகள், பாடும் பறவைகள், பறக்கும் ஓணான், உடும்பு, முதலை முதலானவை உள்ளன.

**'கரடி' ஆறுமுகம்பிள்ளை!**

இச்சரணாலயத்தில் திரு ஆறுமுகம்பிள்ளை என்பவர் வனப் பாதுகாவலராக இருந்தார். 1952-ஆம் ஆண்டு என்று எனக்கு நினைவு. அவர் காட்டைச் சுற்றிப் பார்க்கும்போது, திடீரென இரண்டு கரடிகள் அவர்மீது பாய்ந்தன! அவர் அவற்றோடு எவ்வளவோ போராடினார். அவை இரண்டும் அவரை உடலெங்கும் காயப்படுத்தின. சுமார் 40 காயங்கள் அவர் உடலில் இருந்தன. ஆறேழு மாதங்கள் மருத்துவமனையில் இருந்தார். ஓய்வு பெற்ற அவர் இப்போதும் உள்ளார். அந்தச் சம்பவத்திலிருந்து அவரைக் கரடி ஆறுமுகம்பிள்ளை என்று நாங்கள் அழைப்பதுண்டு!

**யானை துரத்தியது!**

''ஒரு சமயம் இங்கு என்னை ஒரு யானை துரத்தியது. தப்பி ஓடி வந்தேன். முதுமலையில் ஒரு யானை என்னை 200 கஜ தூரம் வரை துரத்திக் கொண்டு வந்தது. எங்கிருந்தோ கார் சத்தம் கேட்கவே அந்த யானை திரும்பி ஓடியது. நல்ல காலம், நான் உயிர் பிழைத்தேன்!

''இந்தக் காட்டில் ஒற்றைக் கொம்பன் யானை ஒன்று திரிவதாகவும், அது கொடூரம் வாய்ந்தது என்றும் சொல்கிறார்கள். அதெல்லாம் வீண் வதந்தி. அந்தக் கிழட்டு யானை சாதுவானது!

**ஆனைமலையில் ஐ. ஜி.!**

''இந்தச் சரணாலயத்தில் அவ்வப்போது யானைகள் பிடிக்கப்படுவது வழக்கம். அந்தச் சமயத்திலெல்லாம் எங்களுக்கு 'ஐ.ஜி.' தான் கைகொடுத்து உதவும். ஆம். எங்களுக்கு மிகவும் பழக்கமான, புகழ்மிக்க, வயதான அந்த 'யானைக்குப்' பெயர்தான் ஐ. ஜி. அது, யானை பிடிக்கப்படும்போது; குழியிலிருந்து யானையை மேலே தூக்கவும், தள்ளவும் உதவும்.

''1969-ஆம் ஆண்டில் இவ்வாறு யானை பிடிக்கும்போது, குழியில் காலை வைக்க மறுத்துவிட்டது ஐ. ஜி.! இருள் சூழும் நேரம் வேறு. எவ்வளவோ சொல்லியும் அந்த ஐ. ஜி. குழியில் காலை வைக்க மறுத்துவிட்டது. அதனால் அடித்தும் பார்த்தோம். அதற்கும் அது அசைந்து கொடுக்கவில்லை. பிறகு ஒருவர் 'டார்ச்' லைட்டைக் கொண்டு குழியில் பார்த்தார். குழந்தை ஒன்று அங்கே விழுந்து கிடந்தது!

''காட்டில் எப்படி குழந்தை வந்தது? யானையைப் பழக்குகிறவர்கள் அங்கே குடியிருக்கிறார்களல்லவா? அவர்களுடைய குழந்தை ஒன்று எப்படியோ அங்குத் தவறி விழுந்துவிட்டது. அதன்மேல் எப்படிக் காலை வைப்பது என்று ஐ. ஜி. தயங்கியதே அதற்குக் காரணம். இந்தச் சம்பவத்திலிருந்து யானைக்கும் இதயமுண்டு என்று தெரிகிறதல்லவா?''

**கரடி கதவைத் தட்டும்!**

காட்டில் வாழும் விலங்குகளைப் பற்றித் தெரிந்துகொண்ட நாம், எட்டாயிரம் அடி உயரத்தில் அந்த விலங்கோடு விலங்காக மழை, வெய்யில், கடுங்குளிரில் காலமெல்லாம் வாழ்ந்துவரும் மக்களைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

யானையைக் கவனித்துக் கொள்ளும் திரு. ராயன் என்னும் முதியவர் கூறுகிறார்:

''நான் இங்கேயே பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். கடந்த 30 ஆண்டுகளாக இந்த வேலையில் இருக்கிறேன். இரவு வேளையில் பயம்தான் என்றாலும் ஜாக்கிரதையாக இருப்போம். சில சமயங்களில் விலங்குகளுக்குப் பயந்து தீ மூட்டிக்கொண்டிருப்போம். இரவில் கதவு தட்டும் சத்தம் கேட்டால் உடனே திறந்து விடமாட்டோம். ஏனென்றால், சிலசமயம் கரடிகூட வந்து கதவைத் தட்டுவதுண்டு!''

''யானைப் பணி முகாம்' என்ற இடத்தில், சிறுசிறு குடிசைகள் மேட்டுப் பகுதியில் தென்படுகின்றன. அவற்றில் குழந்தையும்



குட்டியுமாக வாழ்கிறார்கள் யானைப் பாகர்கள். அவர்களின் குழந்தைகள் தன்னிச்சையாக அந்தப் பகுதிகளில் பயமின்றி சுற்றித் திரிவதைப் பார்க்கலாம்!

யானைக்கு ராகி, கொள்ளு சேர்ந்த களி உருண்டைகள் உணவாகத் தரப்படுகின்றன. ஒரு வேளைக்கு ஏழு கிலோ வீதம் உணவு வழங்கப்படுகிறது. காலை 8 மணிக்கும் பிறகு மாலை 6 மணிக்கும் உணவு வழங்கப்படுகிறது. யானை ஒரு நாளைக்கு 20 மைல் தூரம் வரை நடந்து செல்கின்றன. 15 வயதிலிருந்தே அதற்கு மோப்பச் சக்தி உண்டாகிறது. காடுகளில் வெட்டிய மரங்களை அப்புறப்படுத்த பழக்கப்பட்ட பல யானைகள் இங்குப் பயன்படுகின்றன.

**புலி இருந்தது !**

வனத்துறையைச் சார்ந்த திரு அப்துல் காதர் என்னும் டிரைவர் கூறுகிறார்:

"ஒரு சமயம் ஒரு யானை என்னை 2 கிலோ மீட்டர் தூரம் வரை துரத்திக் கொண்டு வந்தது. ஒற்றை யானை இருந்தால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அது ஆளைப்பார்த்து விட்டால் லேசில் விடாது. ஒரு நாள் இரவு விடுதியில் தங்கியிருந்த நான், சிறுநீர் கழிக்க வெளியே வந்தேன். அப்போது அங்கே புலி ஒன்று படுத்துக் கொண்டிருந்தது! எப்படித்தான் உள்ளே வந்தேதேனோ எனக்கே தெரியாது! அந்தப் புலிதான் அங்குச் சுற்றித் திரிந்த பத்துப் பதினைந்து ஆடு மாடுகளை அடித்துத் தின்றது என்று பிறகு தெரியவந்தது!

**யானையோடு பேசலாம் !**

யானையோடு பேச முடியுமா? ஓ, தாராளமாக! யானைப்பாகர்கள் யானையோடு பேசுவதை-அதற்குக் கட்டளை இடுவதை-அதைத் தலைமேல் ஏற்று அது செய்வதைப் பார்க்கிறோம்.

'பார்' என்று சொன்னால் அது தும்பிக்கையைத் தூக்குகிறது. 'வரி' என்றால் தும்பிக்கையைக் கீழே இறக்குகிறது. 'டிரே' என்றால், கையிலுள்ள கம்பைப் பிடிக்கிறது. 'வெட்தா' என்றால் யானைப் பாகன் பின்னே செல்கிறது. 'செய்' என்று சொன்னால் நின்றுவிடுகிறது. 'வெடியட்' என்றால் நடந்து போகிறது. 'பைட்' என்றால் படுத்துக் கொள்கிறது.

யானைக் கூட்டத்தினிடையே கீதா என்னும் குட்டி யானை ஒன்று நின்று கொண்டிருந்தது. காட்டில் திரிந்து கொண்டிருந்த அது தவறி ஒரு குழியில் விழுந்து விட்டதாம். தாய் யானை அதைக் காப்பாற்ற எவ்வளவோ முயன்றதாம். 'கடைசியில் அதை நாங்கள் பிடித்துக்கொண்டு வந்து விட்டோம்' என்கிறார் ஒரு வனத்துறை அலுவலர்.

இப்படி ஆனைமலை சொல்லும் பல சுவையான கதைகளைக் கேட்டுக் கேட்டு இன்புற்றோம்.

ஒருநாள் இரவு அங்குத் தங்கி இருந்து, மறுநாள் ஆனைமலையை விட்டுக் கீழே இறங்கி வரும் போது, மானசீகமாக அந்தக் காடுவாழ் உயிரினங்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் பிரியாவிடை பெற்றது போன்ற ஓர் உணர்ச்சி!

அழகிய, இனிய, அமைதியான சூழலிலிருந்து பரபரப்பான நகர வாழ்க்கைக்குத் திரும்புகிறோமே என்ற ஏக்கம்!

'மீண்டும் எப்போது இங்கே வருவோம்?' என்ற பேராவல்!

எல்லாம் மனத்தில் அலைமோத, அந்த இயற்கை எழில்மிக்க ஆனைமலையை விட்டு எங்கள் பேருந்து கீழே இறங்கி வருகிறது. ஊரை அடைகிறோம். மறுபடியும் பரபரப்பான நகர வாழ்க்கையில் பிணைந்து போய்விடுகிறோம்!

அமைதியான-இயற்கை எழில் மண்டிக்கிடக்கும்-அரிய விலங்கினங்கள் பலவற்றை உள்ளடக்கிய அந்த ஆனைமலையிலுள்ள 'டாப்சிலிப்'பை, அருகிலேயே உள்ள அந்த மாவட்டத்து மக்கள் எத்தனைப் பேர் போய்ப் பார்த்திருப்பார்கள்?

—பி. வி. கிரி.

# மண் பரிசோதனை ஏன்?

ச. பிரேமநாதன்,
உதவி மண் வேதியர்,
மதுரை மண் பரிசோதனை நிலையம்.

உழவியல் அறிஞர்களும், வேளாண்மை இரசாயன வல்லுநர்களும், மண்ணியல் விஞ்ஞானிகளும், விளைச்சலில் 40 சதவிகிதத்தை மண்ணின் வளமும், இரசாயன உரமுமே கொடுக்கும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். எனவே, உற்பத்தியைப் பெருக்க மண்ணிலுள்ள வளத்தை நிர்ணயித்து எவ்வளவு உரம் போட வேண்டும் என்பதை முடிவு செய்ய மண் பரிசோதனை மிகவும் அவசியம்.

பல்வேறு வகையான உரங்களும், அவற்றின் தேவையான அளவும், பயிருக்குப்பயிர், இடத்திற்கு இடம், நிலத்திற்கு நிலம், நிச்சயமாக மாறுபடும். உர உபயோகத்தின் மூலம் உணவு உற்பத்தி பெருகி உள்ளது என்பதை விவசாயிகள் பலரும் அறிவர். ஆனால், எந்த அளவு, எந்த வகையான இரசாயன உரம் பயிருக்குத் தேவை என்று அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். இந்தத் தேவையான உரங்களை தேவையான அளவில், தேவையான சமயத்தில் தேவைப்படும் பயிர்களுக்கு இடுவோமேயானால் நிச்சயமாக நாம் அதிகமான அளவு உணவு உற்பத்தியையும், அதற்கேற்ப இலாபத்தையும் அடையலாம். மண் பரிசோதனை, ஒரு நிலத்திற்கு எந்த அளவு, என்ன மாதிரியான உரம் தேவை என்பதை நிர்ணயிக்கும்.

அறிவியல் ரீதியில் விவசாயம் செய்துவரும் இந்நாளில், மண்ணை பரிசோதனை செய்யாமல் பயிர்களுக்கு உரமிடுவதென்பது, மருத்துவர் அறிவுரை இல்லாது மருந்து உண்பது போலாகும்.

மண்பரிசோதனை செய்யாவிடில், விவசாயிகள் பயிருக்கு அதிக (அளவோ குறைவான அளவோ உரமிட நேரிடும். இதனால் பயிருக்கு இன்றியமையாத உணவுச்சத்து தேவைக்கும் அதிகமாகவோ குறைவாகவோ கிடைக்க நேரிடும். இதனால் அவர்கள் இரசாயன உரமிட்டும், பயிர்கள் சரியான பலனைத் தராது. ஆகையால் மண்ணைப் பரிசோதனை செய்வதன் மூலம் மண்ணின் வளம். மண்ணின் தன்மை, மண்ணில் அமைந்திருக்கும் களர், அமிலம் மற்றும் உவர்தன்மை ஆகியவைகளைத் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப பரிந்துரைக்கப்படும் உரங்களையும், நிலச்சீர்திருத்த முறைகளையும் கடைப்பிடித்தால் கண்டிப்பாக உணவு உற்பத்தியில் உயர்நிலையை அடையலாம்.

மதுரை மாவட்ட வேளாண் பெருமக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு 1966-ஆம் ஆண்டில் மதுரையில் ஒரு மண் பரிசோதனை நிலையம் நிறுவப்பட்டு, நன்முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் ஒரு சிறிய மண் பரிசோதனை நிலையம் தேனியில், சென்ற ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் 1,38000-க்கும் மேற்பட்ட மண்மாதிரிகளும் 164 பாசன நீர் மாதிரிகளும் பரிசோதனைகள் செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், விவசாயிகளின் நிலங்களில் உரப் பரிசோதனைகளும், நுண்ணூட்ட உரப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

மண் பரிசோதனையின் மூலம் இன்னும் சீரிய முறையில் உரப் பரிந்துரை செய்யும்பொருட்டு, ''மண் வள மதிப்பீட்டுப் பரிசோதனைகள்'' சென்ற மூன்று ஆண்டுகளாக விவசாயிகளின் நிலங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பரிசோதனைகளில், மாறுபட்ட மண் கூறுகளில், வெவ்வேறு அளவுகளில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இடப்பட்டு, பயிர் மகசூல் கணக்கிடப்படுகிறது. இந்தப் பரிசோதனைகள் நெல், சோளம், கம்பு, பருத்தி (இறைவை, மானாவாரி), மிளகாய் மற்றும் கரும்பு போன்ற பயிர்களில் நடத்தப்பட்டன. இப்பரிசோதனைகளின் முடிவுகள் கம்ப்யூட்டர் மூலம் (Computor) பரிசீலிக்கப்பட்டு உர சிபாரிசுகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, வடபுதுப்பட்டியில் நடத்தப்பட்ட ஒரு பரிசோதனையில், எம். சி. யு. 5 பருத்திக்கு ஒரு ஹெக்டருக்கு 195 கிலோ தழைச்சத்தும், 3 கிலோ சாம்பல் சத்தும் இட்டு ரூ. 754 செலவு செய்ததால், மற்ற சாகுபடி செலவுகள் உள்ளிடாமல், ரூ. 10,000 ஒரு ஹெக்டருக்கு பெற முடியும் எனதெரிய வந்தது.

அதேபோல், மானாவாரியில் சோளப்பயிருக்கு ஹெக்டருக்கு 100 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து இடுவதின் மூலம் 3903 கிலோ மகசூல் ஏரமநாயக்கன்பட்டியில் நடத்தப்பட்ட பரிசோதனையில் கிடைத்துள்ளது.

மேற்கண்ட பரிசோதனைகளின் அடிப்படையில் தற்போது, உரப் பரிந்துரைகள் மாற்றி அமைக்கப்பட்டு ஒவ்வொரு பயிருக்கும் இரண்டு உர அளவுகள் பரிந்துரை செய்யப்படுகின்றன. ஒன்று உரச்சிபாரிசு அதிக லாபம் பெறவும், மற்றொன்று சிக்கன உரச் சிபாரிசும் வழங்கப்படுகின்றன. இதனால் விவசாயிகள் தங்கள் வசதிக்கேற்ப இதில் ஏதாவது ஒரு உரச்சிபாரிசைப் பின்பற்றலாம்.

மண்பரிசோதனை செய்வதற்கு ஆகும் செலவு ஒரு மண்மாதிரிக்கு அல்லது ஒரு பாசன நீர் மாதிரிக்கு ஒரு ரூபாய் மட்டுமே. ஆகையால் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து சிக்கனமாக உரமிட்டு, அதிக விளைச்சலினால் அதிக இலாபமும் பெறலாம்.

நடப்பு ஆண்டில், மதுரையிலுள்ள மண் பரிசோதனை நிலையம் 38 உரப்பரிசோதனைகள் நடத்தத் தீர்மானித்திருக்கிறது. வேளாண் துறையில் இந்தச் சேவையை வேளாண் பெருங்குடி மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# பெருவிளக்கத் திடலின் பெரும் பயன்

**கோ**வை மாவட்டம், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரு விளக்கத் திடல் விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்த உதவும் புது யுக்திகளைக் கற்பிக்க வும், விவசாய விரிவினையாளர் கட்குக் கூறித் தெரிந்து கொள்ள வும் ஒரு வாய்ப்பளிக்கிறது.

இத்திடலில் விரிவினையாளர் களும், விவசாயிகளும் ஒருங்கு இணைந்து செயல்படுகிறார்கள். வேளாண்மை ஒரு இலாபகரமான தொழிலாக அமைந்து உண்டி கொடுக்கும் உழவர்களின் வாழ்க் கையை உயர்த்துகிறது.

நிலம், நீர் விவசாய வளர்ச் சிக்கு இன்றியமையாதவை. கூடு தலான நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வருவது என்பது நமது மாநிலத்தில் அரிது. நீர் கிடைப் பது அரிதாய் இருப்பதால் அவற் றினைச் சிரத்தையுடன் உபயோ கிக்க வேண்டும். இலாபகரமாக விவசாயம் செய்ய மண்ணின் வளம் காத்தல் வேண்டும். அதற்கு நமது வேளாண் குடி மக்கள் கீழ்க்கண்ட யுக்திகளை அவசியம் மேற்கொள்ளல் வேண் டும்.

அ. மண் அரிப்பைத் தடுக்க வும், நிலத்தின் ஈரத்தைக் காக்க வும், நீர்ப்பாசனம், வடிகால் வசதிகள் சம்பந்தமான பிரச்சினை களைச் சமாளிக்க விஞ்ஞான ரீதி யில் நிலச்சீர்திருத்தம் அவசியம்.

ஆ. மண்ணின் உற்பத்தித் திறனைக் காக்கவும், மண்ணில் விளையும் பிரச்சினைகளைத் தவிர்க்க வும், மண் வளத்தை நிர்வகிக்க வேண்டும்.

ஆகையால், மண் வளம், நீர் வளம் பராமரித்தல், திருந்திய சாகுபடி முறைகள் மேற்கொள் வதன் மூலம் விவசாயிகளின் வளம் நிலையான மாறுதல் பெற்று உயர வாய்ப்பளிக்கிறது. அதற் காக விவசாயிகள் செலவிடும் அளவிற்கு அதிக இலாபம் பெற பல வழிகளை விஞ்ஞானிகள் வகுத் துள்ளனர். அம்முறைகள் ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து விவசாயிகளுக்குப் போய்ச்சேரும் கால நேரங்கள் குறைக்கப்பட வேண்டும்.

மானாவாரிக்கு அதிக ஊட்டச் சத்து ஏற்றப்பட்ட பண்ணை எரு பயன்படுத்துதல், இரசாயன உர மிடுதல், நுண்ணூட்டச் சத்துக் கள் இடுதல் மற்றும் களைக் கொல்லி பயன்படுத்துதல் ஆகிய புதிய தொழில் நுட்ப முறைகளை அதிக மகசூல்பெறப் பயன்படுத்த வேண்டும்.

நரசிம்ம நாயக்கன் பாளையம் கிராமத்தில் சோளம் மானாவாரி பெருவிளக்கத் திடல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பெரு விளக்கத் திடல், நிலத்தின் சரிவிற்குக் குறுக்கே விதைக்கப்பட்டுள்ளது. 120 செ.மீ. அகல மேட்டுப்பாத்தியும், 30 செ.மீ. அகலமுள்ள வாய்க்கால் களும் அமைக்கப்பட்டுள்ளன.

**மேட்டுப் பாத்தி விதைப்பின் நன்மைகள் :**

1. கூடுதல் மகசூல்.

2. மண் அரிப்புக் குறைக்கப் படுகிறது.

3. வாய்க்கால்களில் ஓடி வரும் தண்ணீர் சேகரமாவதுடன் பாத்திகளில் தண்ணீர் உறிஞ்சப் படுகிறது. அதிகத் தண்ணீரை வடிக்க உதவுகிறது.

4. பாத்தியின் மேலுள்ள மண் பொருக்குத் தட்டி இருக் கும். பயிர் அறுவடைக்குப் பின் கோடையில் உழவு செய்ய எளி தாக இருக்கும்.

5. பாத்தியின் மேல் பகுதி விதைப்பதற்கு முன்கூட்டியே தயார் நிலையில் இருக்கும்.

6. பாத்தியின் அகலம் 120 செ.மீ. இருப்பதால் பலவிதப் பயிர் விதைப்பதற்கு ஏதுவாக உள்ளது. இடம் வீணாவதில்லை. களைகள் குறைவாகவுள்ளன.

7. இம்முறையில் தண்ணீர் பாய்ச்சவும் முடியும். பாத்தி களில் தண்ணீர் ஊடுருவிச் செல் லும்.

**ஊட்டம் ஏற்றப்பட்ட பண்ணை எரு தயாரித்தல் :**

நன்கு சலிக்கப்பட்ட 300 கிலோ தொழு உரத்துடன் 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் இரசா யன உரத்தை நன்றாகக் கலந்து ஒரு மாதம் மூடி வைக்கவும். பின்பு விதைப்பதற்கு முன் 35 கிலோ யூரியா உரத்துடன் நன் றாகக் கலந்து சோளம் மானாவாரிப் பயிருக்கு அடியுரமாக இட வேண்டும். இவ்வாறு தயாரிக்கப் பட்ட 300 கிலோ ஊட்டமேற்றப் பட்ட பண்ணை எரு 5 டன் தொழு உரம் இடுவதற்குச் சமமாகும்.

# நிறைந்த மகசூலுக்கு நீலப்பச்சை பாசி

அண்மையில் நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை மற்றும் தமிழ்நாட்டில் நடத்தப் பட்ட பரிசோதனைகளிலிருந்து நெல்லுக்கு நீலப்பச்சைப் பாசி இடுவதால் விளைச்சல் அதிகரிக்கிறது எனக் கணக்கிடப்பட்டிருக் கிறது.

நீலப்பச்சைப் பாசி, குழி முறையில் தயாரிக்கத் தேவையான பொருட்கள் :

1. சாய்வான குழி :
(அ) குழியின் மேல் அளவு : 1.5 மீ. X 2.5 மீ.

(ஆ) குழியின் கீழ் அளவு 1 மீ. X 2 மீ.

2. பாலிதீன் தாள் (20 கேஜ்) 3 மீ. X 2 மீ.

3. சூப்பர் பாஸ்பேட் 100 கிராம்.

4. வயல் மண் 2 கிலோ.

5. மரத்தூள் அல்லது அரிசித் தவிடு 200 கிராம்.

6. கார்போ பியூரான் 3 சதவிகிதம் 25 கிராம்.

7. நீலப் பச்சைப் பாசி விதை 250 கிராம்.

**தயாரிக்கும் முறை**

1. முதலில் 6 அடி நீளம், 3 அடி அக லம், 9 அங்குல ஆழமுள்ள குழியை வெட்டிக் கொள்ளவும். 2. வெட்டிய குழியின் பக்கங் களையும், அடிப்பாகத்தையும் மண்ணைக் கொண்டு பூசவும். குழியினுள் பாலிதீன் தாளை நன்கு பரப்பி வைத்து மண்ணால் பூசவும். 3. குழியினுள் மண் கலந்த இரசாயன உரக் கலவையை இடவும். (அதாவது 2 கிலோ மண்ணுடன் 100 கிராம் சூப்பர் பாஸ்பேட், 200 கிராம் மரத்தூள் அல்லது அரிசித் தவிடு கலந்து குழியினுள் சீராக இடவும்.) 4. குழியி னுள் தண்ணீர் 4 அங்குலம் அல்லது 5 அங்கு லம் நிற்குமாறு போதிய அளவு ஊற்றவும். 5. 25 கிராம் கார்ப்போ பியூரான் 3 சத விகிதம் (பியூராடான்) குருணை மருந்தை ஒரே பரவலாகத் தண்ணீரின் மேல் தூவவும். 6. பின்பு, நன்றாகப் பொடி செய்த 250 கிராம் நீலப் பச்சைப் பாசி விதைகளைக் குழியினுள் தூவவும். 7. தண்ணீர் வற்றியவுடன் 10, 15 நாட்களில் அறுவடை செய்யலாம். அறு வடை ஒவ்வொன்றுக்கும் 4 கிலோ நீலப் பச்சைப் பாசி கிடைக்கும். 8. அறுவடை செய்த நீலப் பச்சைப் பாசியை நிழலில் நன்கு உலர்த்திச் சேகரம் செய்து வைக்கவும்.

மீண்டும் நீலப்பச்சைப் பாசி தயாரிக்க இதே முறைகளைக் கையாளவும்.

அதிக அளவு தயாரிக்கும் முறை :

தேவையான பொருட்கள் :

1. 0.5 செண்ட் பாத்தி (20 ச. மீட்டர்).

2. சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ.

3. நீலப்பச்சைப் பாசி விதை 2.5கிலோ

**தயாரிக்கும் முறை :**

1) நிலத்தை நன்கு சேறு கலக்கி 0.5 செண்ட் பாத்தி தயாரிக்கவும். பாத்தியில் 2.5 செ.மீ. ஆழத்திற்குத் தண்ணீர் நிறுத் தவும். 2) 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் சீராக இடவும். 2.5 கிலோ நீலப்பச்சைப் பாசி விதையைப் பொடி செய்து சீராகத் தூவவும். 3) பாத்தியில் எப்பொழுதும் 2.5 செ.மீ. ஆழத்திற்குத் தண்ணீர் நிற்குமாறு பார்த்துக் கொள்ளவும். 4) முதல் அறுவடை 30வது நாளில் செய்யலாம். அதற்குப் பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்ய லாம். 5) ஒவ்வொரு அறுவடைக்குப் பின் பும் 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவும். 6) அறுவடை செய்த நீலப் பச்சைப் பாசியை நிழலில் நன்கு உலர்த்திச் சேமித்து வைக்கவும். 7, தேவைப்பட்டால் 0.5 கிலோ கார்போ பியூரான் இடவும். 8) ஒரு அறுவடைக்கு 8 கிலோ நீலப் பச்சைப் பாசி கிடைக்கும். 9, முதல் அறுவடைக்குப் பின்பு ஒவ்வொரு முறையும் 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் மட்டும் இட்டால் போதுமானது.

**கவனிக்க வேண்டியவை :**

1. வெட்டப்படும் குழி திறந்த வெளி யில் சூரிய வெப்பம் படும்படியாக இருத்தல் வேண்டும்.

2. மழைக் காலங்களில் குழியை மூடி வைத்தல் அவசியம்.

3. மார்ச்-செப்டம்பர் மாதங்களில் நீலப் பச்சைப் பாசி அதிகமாக வளர்ச்சி அடைந்து பெருகுகிறது.

**ஏற்படும் நன்மைகள் :**

1. நீலப் பச்சைப் பாசி எக்டேருக்கு 25 கிலோ தழைச் சத்து உரத்தைப் பயிர் வளர்ச்சிக் காலத்தில் கொடுக்கிறது.

2. இடப்பட்ட உரத்தின் திறமையை அதிகரிக்கிறது.

3. மிகக் குறைந்த செலவில் தழைச் சத்தைப் பயிருக்கு அளிக்கலாம்.

4. 4 அல்லது 5 பயிர்க் காலங்களில் இது நிரந்தரமாக வயலில் இருந்து கொண்டு, வயலில் கேடு விளைவிக்கும் படரும் பச்சைப் பாசியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது.

நீலப் பச்சைப் பாசி, பரிந்துரை செய்யப் பட்ட தழை உரத்திற்கு மாற்ருக ஆகாது. பரிந்துரை செய்யப்பட்ட முழு உர அளவுடன் தான் இதனை இட வேண்டும்.

# ஒரு தலைமுறையின் மறுபிறப்பு!

அம்புஜம்



மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்கு ரயிலில் பயணம் செல்லுவோர் மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தைத் தாண்டியதும், ஒரு சூனியம் மிகுந்த செம்மண் பூமியைத் தொடுவானம் வரையிலும் காணலாம்!

அது ஒரு மார்கழி மாதத்தின் மாலைப்பொழுது! ஆடி மாதத்தில் வெறுமையாகக • கிடந்த அந்தச் செம்மண் பூமி, மார்கழி மாதத்தில் சோளம், கம்பு, தினை ஆகிய புஞ்சைத் தானியங்கள் நிறைந்தும், பயறு வகைச் செடிகளின் பசுமையைத் தாங்கியும் காட்சி தந்து கொண்டு இருக்கிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ''ஆப்பிரிக்கத் தங்கம்'' என அப்பகுதி வாழ் மக்களால் வருணிக்கப்படும் நிலக்கடலைச் செடி, மழைத்தாயின் கருணையால் செழித்து வளர்ந்து கிடக்கிறது.

மாலை நேரத்துச் சூரியன் உலகின் இன்னொரு பக்கத்தில் உதயமாக ஆயத்தப்பட்டு விரைந்து சுழலும் வேளையில், சிந்திடும் ஒளிக்கதிர்கள் மனிதன் ரசிப்பதற்காக இயற்கையன்னையால் உருவாக்கப்பட்ட இனிய காட்சிகள்!

கடலைக் காட்டிற்குக் காவல் காத்துக் கொண்டிருக்கும் தாயம்மாள் கிழவிக்கு இருப்புக்கொள்ளவில்லை. அவளது கணவன் சிவன்காளை சேர்த்து வைத்த ஐந்து ஏக்கர் புஞ்சை நிலத்தின் வடகோடியில் தோண்டியிருக்கும் கிணற்று மேட்டில் வேய்ந்துள்ள ஓலைக் குடிசைக்குள்ளிலிருந்து வெளிப்பட்டு, இரவுச் சாப்பாடு கொண்டு வரும் தன் பேரனை வழி நோக்கி விழி நிமிர்த்திப் பார்த்தாள். அறுபது வயதைத் தாண்டி விட்ட தாயம்மாளின் கண்கள மாலைச் சூரியனின் மோகனக் கதிர்களின் ஒளிபட்டுக் கூசிற்று! விழிகளுக்கு மேலாக நெற்றியில் இடது கையைக் குடைப்பிடித்தாற்போல் வைத்துக் கொண்டு, கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் பார்வையைச் செலுத்தினாள்.

பேரன் வருவதாகக் காணோம். காலையில் கொஞ்சம் கூழ் குடித்தது தான்! மதிய உணவை அவள் பார்த்ததே இல்லை! அவள் மட்டுமல்ல...நிலத்தை நம்பி வாழ்கின்ற கிராமத்து மக்களில் பெரும்பகுதியினரின் நிலை இது தான்!

தாயம்மாளுக்கு மயக்கமாக வந்தது. மீண்டும் குடிசைக்குள் நுழைந்து, அங்கே கிடந்த கல்லில் தலைவைத்து, கிழிந்து போன பாயில் படுத்தவாறு, நினைவுகளில் மூழ்கிப் போனாள்!

அந்தக் கிராமத்தில், ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த அவளது கண்கண்ட தெய்வம் ''சிவன்காளை'' சீமானாக வாழ்ந்த அந்த நாட்கள்!

எதிரே தெரியும் கிணறு! அவள் எண்ணங்களில் பூத்த நறுமலரையெல்லாம் இரக்கமின்றி அழித்து விட்ட பாழும் கிணறு! கடன் வாங்கிக் கிணறு வெட்டி புஞ்சையை நஞ்சையாக்கித் தானும் வாழ்ந்து, உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பணியாற்றிய பெருமை கிட்டும் என்ற எண்ணத்தில், அரசின் கூட்டுறவு நிலவள வங்கியில் கடன் வாங்கி வெட்டிய கிணறு பொய்த்துவிட்ட நாளில், அவள் கணவன், சிவன்காளையின் பூதவுடலும் பொய்த்துப் போய் விட்டது!

ஓர் அரசியைப் போல் வாழ்ந்து கொண்டிருந்த தாயம்மாள், விதவையானாள். வாழ்வின் துயரங்களை அவள் அனுபவிக்கத் தொடங்கினாள்!

எதையெல்லாமோ எண்ணிப் பார்த்த தாயம்மாள், நினைவுகளிலிருந்து விடுபட்டவளாய் குடிசைக்கு வெளியே தலையை நீட்டி மீண்டும் ஒருமுறை எட்டிப் பார்த்தாள்.

கூப்பிடு தூரத்தில் தெரியும் கைகாட்டி மரத்தையொட்டிய சண்டவாளத்தைக் கடந்து பேரன் பெரியசாமி சோற்றுச் சட்டியைத் தலையில் வைத்துப் பிடித்தவாறு வந்து கொண்டிருந்தான்.

மதுரையிலிருந்து போடிநாயக்கனூருக்குச் செல்லும் ரயில் கிழக்கேயிருந்து ஒலி எழுப்பிக்கொண்டு வந்தது. ரயில் வருவதற்குள் தண்டவாளத்தை வேகமாகக் கடந்துவிடும்படி பேரனை இரைந்து கத்தி எச்சரிக்கை செய்தாள் கிழவி!

தாயம்மாள் இரவு உணவைப் பேரனுக்குப் பகிர்ந்தளித்து உண்டு மகிழ்ந்தாள். இந்த ஆண்டு பூமித்தாயின் ஆசைதீர மழை மகள் அழுது தீர்த்திருந்தாள்! தாயம்மாள் கிழவியின் நினைவுகள் அவள் வாயில் அசைபோட்டுக் கொண்டிருக்கும் வெற்றிலையோடு போட்டி போட்டுக்கொண்டிருந்தது.

எதையெல்லாமோ நினைத்துப் பார்த்த கிழவி நித்திரையில் ஆழ்ந்து போனாள்!

* * * *

...ரயில்வே லயனையொட்டியிருக்கும் வண்டிப் பாதையில் அரசுக்குச் சொந்தமான ''ஜீப்'' ஒன்று வந்து நிற்கிறது. அதிலிருந்து சில அதிகாரிகளும், சேவகர்களும் இறங்குகின்றனர். தாயம்மாள் கிழவி ஒரு பரபரப்போடும், நெஞ்சப் பதைப்போடும் அவர்களைப் பார்க்கிறாள்!

ஜீப்பிலிருந்து இறங்கிய அதிகாரிகள் கிணற்று மேட்டுக்கு வந்து சேர்ந்தனர். சேவகர்களின் அதிகாரக்குரல் தாயம்மாள் கிழவியை ஆணையிட்டு அழைத்தது. சர்வ அங்கமும் கூனிக் கூசியபடி கிழவி, அதிகாரி



களை மெல்ல நெருங்கினாள். அவர்களுக்கு மத்தியில் உள்ளூர்க்காரர்கள் சிலரும் இருந்தனர்.

அரசாங்கத்திடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத காரணத்தால், காலம் கடந்த கடனாகிப் போனதாலும், வேறு வழியில்லாமல் போனதாலும், அவளது கணவன் ''சிவன்காளை'' சேர்த்து வைத்து விட்டுப்போன ஐந்து ஏக்கர் புஞ்சை நிலத்தையும் ஏலம் விட்டு, அரசு தனது கடனை எடுத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் நிலத்தை ஏலம் விட வந்துள்ளதாகவும் அதிகாரிகளில் ஒருவர் கிழவியிடம் கூறினார்.

தன் பாதங்களுக்கு நேராகப் பூமி வெடித்து விட்டதைப் போன்ற உணர்வுகள், கிழவியின் நெஞ்சைக் கலக்கியது.

இங்கே வெட்டினால் ஏழு கெஜத்தில் நிச்சயம் தண்ணீர் கிடைக்கும் என்ற சோசியன் சொல்லைக்கேட்டு, கிணறு வெட்டிய இடத்தில் ஏழு கெஜத்திற்குக் கீழே பெரும் பாறையொன்று குன்றாகக் காட்சியளித்த நாளில் கணவன்-சிவன்காளை மனம் நொந்து மாண்டு போனாரே, அந்த நாளின் துயரத்தைக் காட்டிலும் இந்த அதிகாரி தந்த துயரச் செய்தியால், தனது வம்சமே அழிந்துவிட்டதாகக் கருதிய கிழவி ''ஓ'' வெனப் பெரும் குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

அதிகாரிகளிடம் மண்டியிட்டாள்! ''இந்த ஆண்டு நிச்சயம் நல்ல விளைச்சல் வரும். எப்படியும் கடனில் ஒரு பகுதியை அடைத்து விடுமாறு என் மகன் நீலகண்டனிடம் சொல்லியிருக்கிறேன். கருணை காட்டுங்கள் அய்யா!'' என்று கெஞ்சினாள்.

தங்களால் உதவி செய்ய முடியாத நிலையில் இருப்பதாகக் கூறிய அதிகாரி, நிலத்தை ஏலம் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஆணையிட்டுக்கொண்டிருந்தார். வட்ட ஆட்சியரும், கூட்டுறவு அதிகாரிகளும், ஊரிலுள்ள புதிய பணக்காரர்களில் சிலரும் அதிகாரியின் கட்டளைகளை நிறைவேற்றத் தயாராகிக்கொண்டிருந்தனர்!

ஏலம் தொடங்கிற்று!

தன்னுடைய கணவன் சிவன் காளையிடம் குற்றேவல் புரிந்த குமாரவேல் தன்னுடைய நிலத்தை ஏலம் எடுக்கத் துடித்துக் கொண்டிருப்பதை அறிந்த கிழவி, வீட்டிலிருக்கும் மகன் நீலகண்டனை அழைத்து வருமாறு பேரனை விரட்டிவிட்டாள்.

அதோ! மகன் நீலகண்டன் கையில் கத்தியுடன் குமாரவேலுவை நோக்கிப் பாய்கிறான்.

கொலை நடக்கப் போகிறது!...

அலறித் துடித்து எழுந்திருக்கிறாள் கிழவி!

* * * *

''தன்னுடைய கணவன் வாங்கிய கூட்டுறவுக் கடனைத்திருப்பிச் செலுத்தாவிட்டால், நிலத்தை ஏலம் விட நேரிடும்'' என்ற எச்சரிக்கையை அன்றையப் பகல் பொழுதில் கூட்டுறவு அதிகாரிகள் விட்டுச் சென்றிருந்தனர். அந்த நினைவுகள் தந்த துயரக் கனவை நினைத்துப் பார்த்த தாயம்மாள் கிழவி, அப்படி உண்மையாகவே நடந்து விடுமானால் என்ன செய்வது என்று நினைத்தவுடன் நடுநிசியில் புலம்பத் தொடங்கிவிட்டாள்.

துணைக்குப் படுத்திருந்த பேரன் பெரியசாமி விழித்துக்கொண்டு, பாட்டியின் அழுகைக்குக் காரணம் தெரியாமல் திகைத்தான்.

பாட்டி தான் கண்ட கனவையும், நினைவையும் பேரனிடம் கூறினாள்!

''பாட்டி! இதற்காக ஏன் அழுகிறாய்? நீ கனவு கண்டது உண்மையாக இருக்கலாம். ஆனால் பயப்படத் தேவையில்லை.

நீ கனவு கண்டதுபோல் நம் தலைமுறை அழிந்து போகாது!

நம்மைப் போன்ற எத்தனையோ ஏழைக் குடும்பங்களின் நிலையறிந்த தமிழக அரசு சிறிய விவசாயிகளைக் காக்கப் புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

''அத்திட்டத்தின்படி சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கி, கிணறு வெட்டிப் பொய்த்துப் போனால், ஒன்பதாயிரம் ரூபாய் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை. என்னுடைய ஆசிரியர் இன்றுதான் அரசின் இப்புதிய திட்டத்தை எங்களுக்குச் சொன்னார்'' என்றான், பேரன்.

பேரன் சொல்லுவதை நம்ப முடியாமல் தாயம்மாள் கிழவி புருவங்களை மேலுயர்த்தி வியப்புத் தெரிவித்தாள். தன்னுடைய ஊருக்கு வருகை தந்திருந்த தமிழக அரசின் முதல்வரைத் தானும் ஒருமுறை தரிசித்ததை நினைவு படுத்திக் கொண்டாள். இரக்கம் மிகுந்த அவரின் நெஞ்சத்திற்கும், அரசிற்கும், நன்றி செலுத்திக் கொண்டாள்.

''இந்த ஆண்டு விளைச்சல் நன்றாக இருக்கும். கடலை விற்று வரும் பணத்தில் ஆயிரம் ரூபாயை அரசுக் கடனுக்கு நாம் செலுத்திவிடுவோம். நம்முடைய நிலம் ஏலம் போகாது!'' என்று பேரனிடம் பெருமையோடு கூறிக் கொண்டாள் கிழவி.

''ஆமாம் பாட்டி! நம்மைப் போன்றவர்களும், அரசிடம் கடன் பெற்றுக் கிணறு வெட்டி நீர் கிடைத்து நன்கு விவசாயம் செய்பவர்களும், அரசுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தினால் தான், அரசின் கரம் வலுப் பெற்று, நம்மைப் போன்ற மற்ற ஏழை-எளிய விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவ முடியும்' என்றான் பெரியசாமி.

''ஓராயிரம் என்ன, இரண்டாயிரம்கூட கட்டலாம்! என் தலைமுறை இன்று மறு பிறவி எடுத்தது''—என்று தாயம்மாள் கிழவி மகிழ்ச்சியுடன் கூறினாள்.

'நாட்டுக்குத் தொண்டு
நமக்கு மகிழ்ச்சி !
நடக்கட்டும் போர்' என்றான்
வாழ்க சிதம்பரன் பேர் !

கேட்டுக்கும் வெள்ளையர் நீட்டுக்கும் துப்பாக்கி
வேட்டுக்கும் வெஞ்சிறை வீட்டுக்கும் அஞ்சாமல்
நாட்டுக்குத் தொண்டு---

வீட்டுக்கு வீடு விளக்கேற்றினான் எங்கும்
விடுதலை உணர்ச்சி உண்டாக்கினான்,
கூட்டுத் தொழில்களும் ஆக்க வேலைகளும்
குற்றமென்று சொன்ன கொடியர்க்கும் அஞ்சாமல்
நாட்டுக்குத் தொண்டு.....

தண்டா விளைச்சல்கள் தங்கச் சுரங்கங்கள்
அண்டும் பெருநாடே எங்கள் உடைமையென்று
தண்டோராப் போட்ட தமிழ னவனையே
தாழ்த்த முயன்ற தக்கைகட் கஞ்சாமல்
நாட்டுக்குத் தொண்டு.....

ஒப்போம் அயல்நாட் டுடைமைகள் என்றான்,
உரிமை எவற்றிலும் எமக்கென்று சொன்னான்.
கப்பல் கட்டி ஓட்டினான், வெள்ளையர்
செக்கிழுக்க வைத்தார் அந்தக் கேட்டிலும்
நாட்டுக்குத் தொண்டு.....

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

*கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்—ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.*

*மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிநீ டுழி விளங்குகவே—வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.*

**– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

*எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணாத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளர் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்*

**– நாமக்கல் கவிஞர்**





# கேட்டதெல்லாம் இங்கே கிடைக்கும்!

"உங்கள் கிணற்றை ஆழப் படுத்த வேண்டுமா? நவீன இயந் திரங்கள் வாடகைக்குக் கிடைக் கும்''

இந்த அறிவிப்பை எங்கேயா வது பார்த்ததாக நினைவு இருக் கிறதா?

கோவை மாவட்டத்தில் துடிய லூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையத்தில் (The Tudiyalur Co-operative Agricultural Services Ltd.,) இதுபோன்ற அறிவிப்பு களைப் பார்க்கலாம்.

கோயம்புத்தூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள இந் நிலையம், 1955 - ஆம் ஆண்டு ''துடியலூர் கூட்டுறவு கிராம வங்கி' என்ற பெயரில் அமைக் கப்பட்டது.

வெள்ளிவிழா ஆண்டை நோக்கி விறுநடை போட்டுவரும் இந்நிலையம், விவசாயிகளுக்கு ஒரு காமதேனுவாக, கேட்ட தெல்லாம் கிடைக்கும் வற்றாத ஊற்றாக விளங்கி வருகிறது.

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம் என்ன செய் கிறது? அதன் பணிகள் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வோமா?

ஒரு விவசாயி, வேளாண்மை யில் நல்ல மகசூலும், அதிக இலாபமும் பெறவேண்டும் என்று எண்ணினால் அதற்குத் தேவை யான விதை, உரம், பூச்சி மருந்து, உழவுக் கருவிகள் முதலியன வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவனுக்குப் போதிய பண வசதி இருக்க வேண்டும்.

இத்தனையும் இருந்தால் தானே அவன் நினைத்தது நிறை வேறும்? அத்தனைக்கும் அவன் எங்கே போவான்?

பயிர்க்கடன் ஓரிடத்தில் பெற லாம், உரங்களை இன்னோரிடத் தில் பெறலாம்; பூச்சி மருந்து எங்கேயாவது வாங்கிக் கொள்ள லாம். உழவுக் கருவிகளை ஒருவர் தரலாம். இப்படி இதற் கெல்லாம் ஒவ்வோரிடமும் அலைய வேண்டும்.

இவையெல்லாம் ஓரே இடத் தில் கிடைத்தால் எப்படி இருக் கும்?

துடியலூரிலுள்ள இந்நிலை யம், இதற்கெல்லாம் வழிவகை செய்கிறது.

* விவசாயிக்கு இங்கே கடன் தரப்படுகிறது.

* நல்ல தரமான விதைகள் வழங்கப்படுகின்றன.

* உரங்கள் தந்து உதவி செய் யப்படுகின்றன.

* பூச்சி மருந்துகள் கொடுக் கப்படுகின்றன.

* தெளிப்பான்கள், டிராக் டர்கள் வாடகையில் தரப்படு கின்றன.

* உழவுக் கருவிகள் பழுது பார்க்கப்படுகின்றன.

—இவையனைத்தும் ஒருங்கே ஒரே இடத்தில் கிடைப்பதால், எந்த விவசாயிதான் இதில் உறுப் பினராகச் சேர முன் வரமாட் டார்?

இந்தக் கூட்டுறவு நிலையம், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நல்ல பணியையும் செய்து வரு கின்றது.

அறுவடைக்குப் பின், விளைச் சல் பொருள்களை வாங்கி, பத் திரமாகச் சேமித்து வைத்துப் பாதுகாத்து, பிறகு நல்ல விலைக்கு விற்றுப் பணமும் தரு கிறது.

இந்த நிலையத்தின் செயல் எல்லை 13 வருவாய்க் கிராமங்

களையும், 56 சிற்றூர்களையும தன்னகத்தே கொண்டது. இந்த எல்லைக்குள் உள்ள மக்கள் தொகை 1,10,442.

இந்நிலையத்தில் யார் வேண்டுமானாலும் உறுப்பினர்களாகச் சேரலாம்-ஆனால், அவர்கள் விவசாயிகளாக இருக்க வேண்டும்!

இந்நிலையத்தில் 1955 ஆம் ஆண்டு 397 உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் செலுத்தியுள்ள பங்கு மூலதனம் ரூ. 32,460. 1978 ஜூன் 30 முடிய 11,243 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். அவர்கள் செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 12.58 இலட்சம்.

கையில் காசு இருந்தால்தானே எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்ய முடியும்? ஒரு விவசாயி, பயிர் செய்து அமோக விளைச்சல் கண்டு இலாபம் சம்பாதிக்கலாம் என்று கனவு காணலாம் .ஆனால், அது செயல் வடிவம் பெற அவனுக்குப் போதிய பணம் வேண்டும். அத்தேவையை நிறைவேற்றுகிற வகையில் விவசாயிக்குத் தக்க காலத்தில் கடன் தந்து உதவுகிறது இந்நிலையம். நீண்ட காலக் கடனாகவும், குறுகிய காலக் கடனாகவும் உறுப்பினர்களுக்கு இது பல்வேறு கடன்கள் தந்து உதவுகின்றது.

விவசாயிகள் கடன் கேட்டு பிறகு அதைப் பெற வீணாக அலைய வேண்டியதில்லை. குறித்த காலத்தில், விரைவாகக் கடன் தரப்படுவதால், விவசாயியும் உடனே செயலில் இறங்க முடிகிறது.

சேமமுற வாழ்வதற்குச் சேமிப்பு அவசியம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்நிலையம். விவசாயிகள் தாமாகவே முன்வந்து, நிலையான சேமிப்பில் (Fixed Deposit) சேர்ந்துள்ளனர்.

அடுத்து, விவசாயிக்குத் தேவைப்படுவது விதைகள்; அதுவும் நல்ல தரமான விதைகள். அவற்றைத் தேசிய விதைகள் நிறுவனத்திடமிருந்து வாங்கி, இந்நிலையம் விவசாயிகளுக்கு வழங்குகிறது.

விதைகளைச் சுத்தப்படுத்தித் தரவாரியாகப் பிரிக்கும் இயந்திரங்களையும் இங்கே நாம் காணலாம்.

உழவர்களுக்குத் தேவையான அம்மோனியம் சல்பேட், யூரியா, கால்சியம், அமோனியம் நைட்ரேட் என். பி. கே. கலவை உரங்கள் போன்றவற்றையும் இந்நிலையம் வழங்கி வருகின்றது.



பருத்தி விதைகளின் பஞ்சை நீக்கிச் சுத்தப்படுத்தும் இயந்திரம்.

பயிர்களுக்கு வேண்டிய கலப்பு உரங்களை இந்நிலையமே தயாரித்து, விவசாயிகளுக்கு வழங்குகின்றது. 'அசோகா மார்க்' கலவை உரங்கள் என்று இதற்குப் பெயர். இந்த உரங்கள் பல கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

அடுத்து, பயிர்களுக்குத் தேவைப்படுவது பூச்சிக் கொல்லி மருந்துகள். இவற்றை விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களில் இந்நிலையம் முன்னோடியாக விளங்குகிறது. பல்வேறு நிலையங்களிடமிருந்து மருந்துகளை வாங்கி, இது குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்குகிறது. 1977-78ஆம் ஆண்டில் ரூ. 103.79 இலட்சம் மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையத்திலுள்ள நவீன பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்ட இம்மருந்துகள் ஐ. எஸ். ஐ. முத்திரை பெற்றவையாகும்.

இந்நிலையத்தில் சுமார் 150 தெளிப்பான்கள் (Sprayers) உள்ளன. இவை விவசாயிகளுக்கு வாடகைக்குத் தரப்படுகின்றன. சொந்தமாகத் தெளிப்பான்கள் வைத்திருக்கும் விவசாயிகள், அவை கெட்டுப்போனால் இங்கே கொண்டு வந்து பழுது பார்த்துக் கொள்ளலாம். அதற்கென இங்குப் பழுது பார்க்கும் நிலையமொன்று, திறமைமிக்கவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கால்நடைகளுக்குத் தேவையான நல்ல தரமான தீவனத்தையும் இந்நிலையம் தயாரிக்கின்றது. 'அசோகா மார்க்' கால்நடை கோழித் தீவனங்கள் விஞ்ஞான முறைப்படி சேமித்து விவசாயிகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. கோழித் தீவனமும் இந்நிலையத்தாரால் தயாரிக்கப்படுகின்றது.

கூட்டுறவுத் துறையில் விவசாயிகளால் விவசாயிகளுக்காகத் தயாரிக்கப்படும் கால்நடைத் தீவனத்தில் தரத்தில் சிறந்த குதிரை மசால், சாம்பல் சத்து, கால்சியம் மற்றும் பிற வைட்டமின்கள் கலந்துள்ளன. கோழித் தீவனத்தில் தரத்தில் உயர்ந்த சகல ஊட்டப் பொருட்களும் பரிசிலிக்கப்பட்டு, போதுமான விகிதாசாரத்தில் சேர்க்கப்பட்டு வைட்டமின், நோயெதிர்ப்பு மருந்துகள், உப்பு வகைகள் ஆகியவை கலந்துள்ளன.

இந்நிலையத்தின் சார்பில் உழவுக்கருவிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் (Agro Tools Industries) ஒன்றும் இயங்கி வருகின்றது. மின்சாரத் தெளிப்பான்கள், கரும்புச் சாறு பிழியும் இயந்திரங்கள் முதலானவையும் இங்குத் தயாராகின்றன.



விதைகளைத் தூய்மையாக்கித் தரம் பிரிக்கும் இயந்திரம்.

'ட்யூகாஸ்' என்ற பெயரில் விசைத் தெளிப்பான்கள் கருவிகளையும் (Power Sprayers) இங்குள்ள தொழிற்கூடமே தயாரிக்கின்றது. அத்துடன் எல்லா விதமான தெளிப்பான்களையும் இது பழுதுபார்க்கிறது. ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள விசைத் தெளிப்பான்களுக்கான உதிரி பாகங்கள் இங்கு இருப்பில் வைக்கப்பட்டு விற்கப்பட்டுள்ளன.

இந்நிலையம், கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் உதவியுடன் 50 சாண எரிவாயு சாதனங்களைப் பல்வேறு இடங்களில் அமைத்துள்ளது. இங்குள்ள உழவுக் கருவிகள் தொழிற்கூடப் பொறியாளர்கள் பொறுப்பில் அமைந்துள்ளன.

பருத்தியின் இருப்பிடம் கோவை மாவட்டம் என்று சொல்லலாம். நீண்ட இழை உகாண்டா பருத்தி எம். சி. யூ. 5 ரகம் பருத்தி இங்குதான் பயிரிடப்படுகிறது. அரசினரிடமிருந்து தரமான பருத்தி விதைகளை வாங்கி, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. பருத்தி பயிரிட விதைகள், மருந்துகள், உரங்கள் முதலானவையும் வழங்கப்படுகின்றன. விளைந்த பருத்தியை இந்நிலையம் நல்ல விலைக்கு வாங்கிக் கொள்கிறது. பருத்தி விதைகளைச் சுத்தப்படுத்தும் நவீன இயந்திரங்களை இங்கே நாம் காணலாம்.

டிராக்டர் மட்டுமின்றி எல்லா விதமான விவசாய இயந்திரங்களும் இங்குப் பழுது பார்க்கப்படுகின்றன. சேவை மனப்பான்மையுடன் இந்நிலையம் பணிபுரிந்து வருவதால், 'கேர்' நிறுவனம் சுமார் எட்டு இலட்சம் ரூபாய் செலவில் டிராக்டர்கள், இயந்திரக் கலப்பைகள், மருந்தடிக்கும் கருவிகள், டிரெயிலர்கள் போன்ற உழவுக் கருவிகளை நன்கொடையாக வழங்கியுள்ளன.

இந்த இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் 1977-78 ஆம் ஆண்டில் கிடைத்த வருமானம் ரூ. 3.20 இலட்சமாகும்.

இந்நிலைய உறுப்பினர்கள், நவீன விவசாய முறைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் புதிய புதிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன.

இந்தத் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம் பல புதிய திட்டங்களையும் செயலாக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது.

எல்லாவகையான விதை உற்பத்தி, விதைப்பெருக்கம் ஆகிய பணிகளுக்காக ரூ. 1.7 கோடி மதிப்பீட்டில் ஒரு தீவிரத் திட்டத்தைத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அனுமதித்திருக்கிறது. இந்தத் திட்டத்தினால் கோவை மாவட்டத்தில் 23 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் பெறும். இந்த நிலையத்தைத் தவிர, கோவை மாவட்டத்திலுள்ள 9 வட்டாரக் கூட்டுறவு விற்பனைக் கழகங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும்.

பால் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களுக்கு அவர்களது அசையாப் பொருள்களை ஈடாகப் பெற்றுக் கொண்டு கடன் தொகைகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கு ரூ. 15,000 செலவிடப்படவுள்ளது.

விரைவில் அமலாக்கவிருக்கும் திட்டம் ஒன்றும் உள்ளது. அது, துடியலூரைச் சுற்றிலும் ஏறக்குறைய 400-லிருந்து 500 ஏக்கர் வரை தாழை பயிரிட்டு, அதிலிருந்து தைலம் பிரித்தெடுக்க ரூ. 13.65 இலட்சம் செலவில் இயந்திரத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உலகுக்கு அச்சாணியாகத் திகழும் உழவுக்கு-அந்த உழவுத் தொழில் செய்யும் உழவர்குடிப் பெருமக்களுக்குத் தேவையான உதவிகளையெல்லாம் ஒழுங்காகச் செய்து வரும் இந்நிலையம், இந்தியாவிலேயே முதன் முதலில் துவக்கப்பட்ட பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்கிறது!

— பி. வி. ஜி.



# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 71–வது பிறந்த நாள் விழா

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 71-வது பிறந்தநாள் விழா இந்த ஆண்டு தமிழக அரசின் சார்பில் சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை இராஜாஜி மண்டபத்தில் 30-10-78 திங்கள் மாலை 6 மணிக்கு விழா தொடங்கியது.

விழாவிற்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் தலைமை தாங்கினுர்கள். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச் சந்திரன் அவர்கள், பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் அவர்களின் திருஉருவப்படத் தைத் திறந்து வைத்து உரையாற்றினார்கள். அமைச்சர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நாட்டுப்பற்று, தமிழ் ஆர்வம், சொல்லாற்றல், சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட நலிந்த மக்களின் மேம்பாட்டுக்காக ஆற்றிய தொண்டு ஆகியவற்றைக் குறிப்பிட்டார்கள்.

திரு எஸ். எஸ். இராஜேந்திரன், துணைத் தலைவர், மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு, திரு டி. வி. நாராயணசாமி செயலர், தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம், திரு பி. மாயத்தேவர், எம். பி. திரைப்பட நடிகர் திரு ஆர். முத்துராமன், திரைப்பட இயக்குநர் திரு பாலமுருகன் ஆகியோர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் அருந் தொண்டை, தியாக வாழ்வைப் போற்றிப் பேசினார்கள்.

செய்தித்துறையின் துணை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். உதவி இயக்குநர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நன்றி கூறினார்.



பசும்பொன் கிராமத்திலுள்ள தேவர் நினைவு மண்டபத்தில் 30.10.78 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.







# பிஞ்சு நெஞ்சங்களில் நிறைந்திருந்த நேரு





# கூட்டுறவு- முன்னேற்றத்தின் அடித்தளம்

— ஜவகர்லால் நேரு



எங்கு நோக்கினாலும், அதிலும் இந்தியாவில் மிகவும் குறிப்பாக, கூட்டுறவு இயக்கம்தான் உச்சமான முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பலவகைக் காரணங்கள் மூலம் அந்த இயக்கம் முக்கியமானதாகிறது.

நம் சமுதாயத்தில் நலிந்துள்ள பகுதியினர்க்கு உதவ வேண்டும் என்பது நம்முடைய முதன்மையான குறிக்கோள்களில் ஒன்று; இதற்குக் கூட்டுறவு முறை உதவும், அல்லது அந்த வழியில் உதவ வேண்டும்.

கூட்டுறவு என்பது என்ன? அது கடன் கொடுக்கும் பாங்க் நடவடிக்கை மட்டுமல்ல; கிராமப் பொருளாதாரத்தின் முதன்மையான துறைகளிலெல்லாம் பங்கு பெறுவதே நம்முடைய கூட்டுறவு. பொதுமக்களின் இயல்பான ஊக்கத்தை அடிப்படையாகக்கொண்டிருக்க வேண்டும் என்பதும், மேல்நிலையிலிருந்து அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற இயக்கமாக வடிவெடுத்து விடக்கூடாது என்பதும்தான் கூட்டுறவின் முக்கியமான கருத்துக்கள்.

அரசாங்கத்தால் உதவமுடியும்; உதவவும் வேண்டும். ஆனால், பொதுமக்களின் பாராட்டுதல், பொதுமக்களின் கருத்து ஆதரவு, பொதுமக்களின் கூட்டுறவு ஆகியவற்றின் முதிர்ச்சியிலேதான் கூட்டுறவு இயக்கம் எழவேண்டும்.

விவசாயிகளுக்கும், சமுதாயத்தில் சமூக வகையாலும் பொருளாதார வகையாலும் நலிந்தவர்களுக்கும் எவ்வளவு தூரம் உதவியிருக்கிறது என்று பார்ப்பதுதான், இந்த இயக்கத்தின் வெற்றியைச் சோதித்து அறியும் வழியாகும்.

கிராமங்களை அடையும்போது ஒவ்வொரு விவசாயிக்கும் உள்ள சிக்கல்களைப் புரிந்து கொள்வீர்கள்; அவனுக்கு இந்த இயக்கத்தில் ஆர்வம் உண்டாகும்படிச் செய்ய வேண்டும்; அவனுக்கென்றே தோன்றியுள்ள இந்த இயக்கம் அவனுக்கும் கிராமத்துக்கும் எவ்வாறு நன்மை செய்யும் என்பதை அவன் உணரும்படி செய்ய வேண்டும். உள்ளூர் நிலவரத்தை அவன் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, சமூகத்திற்கு அவன் ஆற்றவேண்டியவை என்ன, சமூகத்திலிருந்து அவனுக்கு என்ன கிடைக்கும் என்பதை அவன் புரிந்து கொள்ள வேண்டும்.

எத்தனையோ காரியங்களுக்கு இந்தியா சரியான களமாக இருக்கிறது. உதாரணத்திற்கு, விவசாய முன்னேற்றத்தை எடுத்துக் கொள்வோம். எங்கெங்கே சிறந்த விவசாயி இருக்கிறானோ அங்கெல்லாம் 300 சத விகிதம் 500 சதவிகிதம்-சில சமயங்களில் அதற்கும் மேலாக—விளைச்சலைப் பெருக்கியிருப்பதைக் காண்கிறோம்.

இந்த நாட்டில் விளைச்சலை மிக விரைவாகப் பெருக்கிட முடியும் என்பதில் எனக்கு இம்மியளவும் ஐயமில்லை. ஓர் இடத்தில் அதைச் சாதிக்க முடியும் என்றால், பத்து இடங்களில் அல்லது நூறு இடங்களில் அல்லது ஆயிரம் இடங்களில் அதையே சாதிக்க முடியும்; எல்லா இடங்களுக்கும் ஒரே சூழ்நிலையை ஏற்படுத்தினால், ஓர் இடத்தில் அடைந்த சாதனையை எல்லா இடங்களிலும் அடையலாம். விவசாயத்துறைக்குச் சொன்ன இந்தக் கருத்து மற்றத் துறைகளுக்கும் பொருந்தும். வாய்ப்பு மட்டும் கொடுத்து விட்டால், பயனடையும் திறமையும், தெளிவுபெறும் திறமையும் நம் மக்களுக்கு உண்டு.

சில சமயங்களில் நாம் திட்டங்கள் வகுக்கிறோம்; ஆனால் போதிய அளவு வேகமாக அவற்றை நிறைவேற்றுவதில்லை. இன்று நம் முன் எழுகின்ற துன்பங்கள் எவ்வளவோ உண்டு; இப்படிப்பட்ட கஷ்டங்கள் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும். இந்தத் துன்பங்களைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், நாம் முன்னேறுவதன் விளைவாகவே இந்தத் துன்பங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை உணரலாம். ஆகையால், இந்தத் துன்பங்களைக் கண்டு நாம் தளர வேண்டியதில்லை. மேலும் முன்னேறுவதற்கான அறைகூவல்களாக அவை அமைய வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில் முன்னேற்றத்துக்கு உரிய ஏதோ ஒரு வகையானக் கடைக்கால் இட்டிருக்கிறோம். அந்த அஸ்திவாரத்தின் மீது கட்டடம் எழுப்புவது எளிமையாக இருக்கும். அவ்வாறே நாம் மேன்மேல் எழுப்புவோம் என்று நம்புகிறேன். கூட்டுறவு இயக்கமானது புதிய பாரதத்தைப் படைக்கும் இந்த மாபெரும் திருப்பணியிலே சிறப்பாகப் பங்கு பெற முடியும்.

(ஆதாரம்: ஜவஹர்லால் நேருவின் கருத்துரைகள்.)



# நேரு பல நிலைகளில்.

## காந்தியடிகள் இறந்தபோது...

### எச். வி. ஆர். அய்யங்கார்

**1948** ஜனவரி 30ஆம் தேதி பிற்பகலில் காந்திஜியை நரதுராம் கோட்ஸே சுட்டுவிட்டான். அப்போது ராஜாங்க காரியாலயத்தில் தமது ஆபீஸ் அறையில் பிரதம மந்திரி வேலை செய்து கொண்டிருந்தார். பிர்லா மாளிகையிலிருந்து எனக்கு டெலிபோன் செய்தி வந்தது. உடனே பிரதமரின் அறைக்குள் சென்று அவரிடம் செய்தியைச் சொன்னேன். அதை நம்பாதது போல ஒரு கண நேரம் என்னை அவர் வெறித்துப் பார்த்தார். பிறகு தமது குல்லாயை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டார். ''சரி; புறப்படுவோம்'' என்றார். எழுந்திருந்து கொண்டே, ''ரொம்பக் கவலைக்கிடமோ?'' என்று கேட்டார். நான், 'சொல்ல மகா வருத்தமா யிருக்கிறது. அவர் இறந்து கொண்டிருக்கிருர்; இந்நேரம் இறந்தே போயிருக்கலாம்'' என்றேன்.

அதிவேகமாகப் பிர்லா மாளிகையை நாங்கள் அடைந்தோம்; காந்திஜியின் திருமேனியைக் கண்டோம். அவருக்குத்தான் தமக்கென்று தனித்திருக்கக் கண நேர அவகாசங்கூடக் கிடையாதே! காம்பவுண்ட் சுவருக்கு உட்புறமும் வெளியிலும் திமுதிமு என்று பெருந் திரளான மக்கள் வெகு விரைவில் கூடி விட்டார்கள். கேட்டுகளையெல்லாம் அடைத்திருந்தார்கள். மக்களை அமைதியாயிருக்கும்படி யாராவது கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது. கம்பி வேலிக்கு அருகே இருந்த மேடை மீது பிரதம மந்திரி ஏறினார். போலீசாருக்கு இதிலே பயம். அவரையும் கொல்ல எவனாவது ஒரு கொலைகாரன் கூட்டத்துக்குள்ளே புகுந்து காத்திருக்கலாம் என்ற பயம்தான். போலீசார் எவ்வளவோ தடுத்துச் சொல்லியும் நேரு கேட்கவில்லை. ஆத்திரத்தோடு அவர்களை ஒதுக்கித் தள்ளினார். யார் வேண்டுமானாலும் தம்மைக் குறி பார்த்துச் சுடலாம் என்ற நிலையில் சில நிமிஷ நேரம் மேடையில் அப்படியே உட்கார்ந்திருந்தார்.

பிறகு மந்திரிகளும் சிவில் அதிகாரிகளும் ராணுவ தளபதிகளும் வந்து, சவச் சடங்கு ஏற்பாடுகளைப் பற்றி அவரைக் கலந்து ஆலோசித்தார்கள். இதற்கிடையிலே தேசத்துக்கு அவர் ரேடியோவில் பேச வேண்டும் என்று முடிவாயிற்று.

ரேடியோ நிலையத்துக்குக் காரிலே அவர் சென்றார். காரிலே அவர் தனியாக இல்லை. துணைவர்கள் அவரை நிம்மதியாயிருக்கவும் விடவில்லை. ரேடியோ நிலைய மைக்ரபோன் எதிரில் அவர் உட்கார்ந்தபோது ஒரு வார்த்தை கூடத் தயார் செய்து கொள்ளவில்லை; உணர்ச்சியை இன்ன விதந்தான் வெளியிட வேண்டும் என்று சிந்தித்து வைக்கவும் இல்லை. தம் இதயத்தையே திறந்து தேசத்தோடு பேசினார். வார்த்தைகள் தாமாக வெளிவந்தன. ஆங்கில உரைநடையிலேயே ஓர் அரிய இலக்கியமாக, ஒரு மனிதருக்கு மற்றொரு மனிதர் மனமுருகிச் சூட்டிய புகழ் மாலையாக, என்றும் கீர்த்தி பெற்றுத் துலங்கும் முறையில் அது அமைந்தது.

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

## உயிலுக்குச் சாட்சி

### என். ஆர். பிள்ளை

**ப**ண்டித்ஜிக்குப் பதினோராண்டுக் காலம் சேவை செய்யும் பாக்கியமும் அதிர்ஷ்டமும் எனக்குக் கிட்டின. தம்மிடம் பணி புரிவோரிடம் தமக்கு உள்ள பிரியத்தைக் கூச்சத்தோடு மனத்துள் வைத்திருப்பவர் அவர். இதை நான் அவரிடம் பல முறை காணும் வாய்ப்புக்கள் கிடைத்தன. என்னிடமும் பல முறை அவர் பல சமயம் விசேஷ அன்பு காட்டியிருக்கிறார். என் மனத்தில் ஆழப் பதிந்து என்றும் மறவாத ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்து என் துயரத்தை மிகவும் கூர்மையாக்குகிறது.



வினோபாவுடன்...

பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் காலையில் அயல் விவகார மந்திரி காரியாலயத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது பிரதம மந்திரியின் அவசர அழைப்பு வந்தது. உடனே அவருடைய காரியாலயத்துக்குச் சென்றேன். நான் உள்ளே நுழையும் போதே அவர் புன்சிரிப்புடன், ''என் உயிலில் கையெழுத்துப் போட உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?'' என்று கேட்டார். இதைச் செவியுற்றதும் நான் கொஞ்சம் திடுக்கிட்டேன். 'உயில்' என்ற சொல்லைக் கேட்டாலே, என்ன என்னவோ பயங்கள் எனக்கு உண்டாகும். பண்டித்ஜி மிக்க அமைதியாக இருந்ததைக் கண்டு, என்னை நானே தைரியப்படுத்திக் கொண்டேன். உயிலுக்கு முதல் சாட்சியான டாக்டர் கட்ஜு முன்னதாகவே இங்கே வந்திருந்தார். காரியம் சீக்கிரமாகவ்வே முடிந்தது; சுருக்கமாகவுந் தான்! சில நிமிஷ நேரத்தில் தமது உயிலிலே பண்டித்ஜி கையெழுத்திட்டார். நாங்கள் இருவரும் அதில் சாட்சிக் கையெழுத்துப் போட்டோம்.

அந்த வாய்ப்பால் பெருமை கொண்டு மிகவும் பரபரப்புள்ளவனாக என் அறைக்குத் திரும்பி வந்து சேர்ந்தேன். பண்டித்ஜியின் நண்பர் கோஷ்டியைச் சேர்ந்தவன் அல்ல நான். எனவே, இந்தக் கௌரவம் கிடைத்ததைப் பற்றி எண்ணிய போது, எனக்குப் பணிவு உணர்ச்சியே மிகுந்தது. உயிலிலே அவர் என்ன எழுதியிருக்கிறார் என்று பார்க்கவே எனக்குத் தோன்றவில்லை. மிகவும் சொந்த விஷயமாக, ஆப்த சமாசாரமாக, வெளி மனிதர்களுக்குச் சொல்லக் கூடாததாக இருக்கலாம் என்றே எண்ணினேன். ஆனால் நான் எண்ணியது தவறு.

அன்றைய வேலை முடிந்து, வீட்டுக்கு நான் புறப்படப் போகிற சமயம், பண்டித்ஜி என் அறைக்குள் வந்தார். சில சமயம் இப்படி அவர் வருவது வழக்கந்தான். ஏதோ அவசரக் கட்டளைகளை எனக்கு இடத்தான் அவர் வந்திருப்பார் என்று நான் நினைத்தேன். ஆனால் அவர் வந்த காரியம் அது அல்ல.

''என். ஆர்! இன்று காலையில் என் உயிலில் நீங்கள் கையெழுத்துப் போட்டீர்கள். ஆனால், அதில் நான் என்ன எழுதியிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாதே. உயில் அதோ இருக்கிறது. அதை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்; காலையில் எனக்குத் திருப்பித் தாருங்கள்'' என்று அவர் சொன்னார்.

எனக்கு உண்டான நன்றி உணர்ச்சியைச் சொல்ல என்னால் முடியவில்லை. ஏற்ற வார்த்தைகள் என் மனத்தில் தோன்றிய போது, அவர் போய்விட்டார். 'என்ன ஆச்சரியமான மனிதர்!' என்று நான் சிந்தித்துப் பார்த்தேன். அவர் சொன்னார் என்பதற்காகச் சம்பிரதாயமாகவே நான் கையெழுத்துப் போட்டேன். அவரது உயிலில் கண்ட பொருளைப் படித்தறிய எனக்கு உரிமை இல்லை. ஆயினும், அதைப் படிக்கும்படி என்னிடம் சொன்னார். அது மட்டுமா? சாவகாசமாகவும் படிக்கச் சொன்னார்.

இதுதான் பண்டித்ஜியின் சிறப்பு. மென்மையான மரியாதையையும் மனித உறவிலே மற்றவருக்கு அளிக்க வேண்டிய நுட்பமான மதிப்பையும் அவர் செலுத்தினார். இதனால் அவரிடம் சற்றும் கஞ்சத்தனமில்லாமல் தங்கள் அன்பையும் பக்தியையும் அவர்கள் சொரிந்தார்கள். அவரிடம் பணி புரிவதே பேரானந்தம் என்று எத்தனை எத்தனையோ பேர் கண்டிருக்கிறார்கள்.

—'தி ஸ்டேட்ஸ்மென்', கல்கத்தா.

## கோபமும் கனிவும்...

**1940** ஆகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் பம்பாய் ஆஜாத் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. மௌலானா ஆஜாத், புலாபாய் தேசாய், ஜவஹர்லால் நேரு ஆகியவர்கள் பேசினார்கள். நேரு பேச எழுந்தபோது, மழை கொட்டத் தொடங்கியது. கொட்டும் மழையில் அப்படியே லட்சக்கணக்கான மக்கள் அசையாமல் உட்கார்ந்து கொண்டு அவரது சொற்பொழிவைக் கேட்டார்கள்.

அப்போது ஒருவர் குடையொன்றை நேருவின் தலைக்கு மேலே பிடித்தார். ''மக்கள் நனையும்போது எனக்கு மட்டும் குடை எதற்கு? அப்பாலே போய்விடும்'' என்று அந்த நண்பரை நேரு கடிந்து கொண்டார். அடுத்த கணமே கோபம் தணிந்தது. ''குடை எனக்காக அல்ல; என் ஒலி பெருக்கியைப் பாதுகாக்கவே இந்த மனிதர் முயல்கிறார்'' என்று சிரித்துக் கொண்டே அவர் கூறியபோது கூட்டத்தினரும் உற்சாக ஆரவாரம் செய்தார்கள்.

வல்லபபாய் படேலுடன்...





# ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

செங்கற்பட்டு மாவட்டம், சோமங்கலத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி திரைப்பட அரங்கம் தான், இந்தியாவில் முதன் முதலில் வியாபார முறையில் அமைக்கப்பட்ட திறந்தவெளி திரைப்பட அரங்கமாகும்.

இந்தத் திரைப்பட அரங்கத்தை அமைப்பதற்காக தமிழ் நாடு அரசு 0.51 ஏக்கர் நிலத்தை அளித்துள்ளது. மேலும் இவ்வரங்கம் நிரந்தரத் திரைப்பட அரங்கமாக அமையும் வகையில் சட்ட விதிகளை அமைத்துள்ளது.

ஊரக வளர்ச்சி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சோமங்கலம் வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகளை ஆற்றிய போது இந்தத் திறந்தவெளி திரைப்பட அரங்கத்தைக் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்காக பாரத ஸ்டேட் வங்கி நிதி உதவியது.

இந்தத் திரைப்பட அரங்கத்தைக் கட்டுவதற்கு, நிலத்தைச் சேர்க்காமல் ஆகிய செலவு ரூ. 92,000 ஆகும். இத் திரைப்பட அரங்கத்திற்கு நுழைவுக் கட்டணமாக இரண்டு விதக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 45 காசு கட்டணத்தில் 281 இடங்களும் 70 காசு கட்டணத்தில் 192 இடங்களும் உள்ளன. திரைப்பட அரங்கம் முழுவதும் நிறைந்தால் ரூ. 260 வசூலாகும்.

படம் காட்டும் கருவி அமைந்துள்ள அறைக்கு இரு பக்கத்திலும் அவசர கால தேவைக்கான இரு தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 150 பேர் தங்கலாம். படக்காட்சி நடந்து கொண்டிருக்கும் பொழுது, திடீரென்று மழை பெய்யத் தொடங்கினால், இந்தத் தங்குமிடங்களில் தங்கிக் கொள்ளலாம். தொடர்ந்து திரைப் படத்தையும் பார்க்க முடியும். திறந்த வெளி திரைப்பட அரங்கின் திரை, துணியால் ஆகியது அல்ல. சிமெண்ட் சுவரே- 'திரை' போன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனால், மழையால் பாதிப்பு ஏற்படாமல் தொடர்ந்து காட்சி நடைபெறும்.

சோமங்கலத்தின் மக்கள் தொகை 1,748 ஆகும். சுற்று வட்டாரத்தில் வாழும் மக்களின் எண்ணிக்கை 4,000 ஆகும். ஆனால், அந்தப் பகுதியில் வேறு திரையரங்கம் ஏதுமில்லை. ஆகவே சோமங்கலத்திலுள்ளவர்களில் நாள்தோறும் ஆயிரம் பேர் திரைப்படங்கள் பார்க்கும் வாய்ப்பு உள்ளது.

இது போன்ற திறந்தவெளி திரையரங்கம் சுகாதார வசதி மிக்கதாகவும் அமைந்துள்ளது. அரசின் ஆக்கப் பணிகளை விளக்கிடும் செய்திப் படங்களும், மக்களுக்கு அறிவூட்டும் பொருள் விளக்கப் படங்களையும் ஊரகப் பகுதிகளில் அமைக்கப்படும் திறந்தவெளி திரைப்பட அரங்கங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

**திரையரங்கங்கள்...**

இந்தியாவில் திரையரங்குகள் ஏறத்தாழ 80,000 மக்களுக்கு ஒரு திரையரங்கம் என்ற அளவில் அமைந்துள்ளன. அமெரிக்காவில் 10,000 மக்களுக்கு ஒரு திரையரங்கமும், பிரான்ஸ் நாட்டில் 8,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், இத்தாலி நாட்டில் 5,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், ஜப்பான் நாட்டில் 14,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், இங்கிலாந்து நாட்டில் 22,000 பேருக்கு ஒரு திரையரங்கமும், சோவியத் நாட்டில் 5,000 பேருக்கு ஒரு திரையரங்கமும் என்ற அளவில் அமைந்துள்ளன.

நமது நாட்டில் ஊரகப் பகுதிகளில் ஒரு நிரந்தரமான திரைப் படக் கொட்டகை அமைப்பது என்றால் குறைந்தது ஏழெட்டு இலட்ச ரூபாய் செலவாகும். ஆனால் திறந்தவெளி திரைப்பட அரங்கத்திற்கு ஏறத்தாழ ரூ. 90,000 மட்டும் போதுமானதாகும்!

இந்தியா போன்ற நாடுகளில் சுமார் 50,000 பேருக்கு ஒன்று என்ற அளவிலாவது திரைப்பட அரங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.





திறந்த வெளித் திரையரங்கின் மாதிரி வடிவத்தை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பார்வையிடுதல்.

**என்ன நன்மை?**

ஊரகப் பகுதிகளில் அமைக்கப்படும் திரைப்பட அரங்குகளில் கதைப் படங்களுடன், தேசிய வளர்ச்சித் திட்டங்களை விளக்கும் படங்களை, உதாரணமாக— வேளாண்மைப் படங்கள், தொழில் வளர்ச்சிப் படங்கள், குடும்ப நலத் திட்டத்தை விளக்கிடும் படங்கள் போன்றவைகளை காட்டும் வாய்ப்புகள் உள்ளன. குறைந்த செலவில் மக்களுக்கு பொழுதுபோக்கு வசதியும் கிடைக்கிறது.

இந்தியாவில் முதன் முதலில் அமைக்கப்பட்ட திறந்த வெளி திரைப்பட அரங்கமாக சோமங்கலத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்தவெளி திரைப்பட அரங்கம் திரு என். கிருஷ்ணசாமி அவர்களால் அமைக்கப்பட்டது.

சோமங்கலத்தில் அமைக்கப்பட்ட திறந்தவெளி திரைப்பட அரங்கத்தைத் திறந்து வைத்து மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், திரைப்படம் ஆற்றல் வாய்ந்த சாதனம், அது மக்களின் நல் வாழ்வுக்குப் பயன்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி— அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், 'குறைந்த செலவில் கிராமப்புற மக்கள் திரைப்படங்களைப் பார்க்க, திறந்த வெளி திரைப்பட அரங்கம் பயன்படும். இது போன்ற நல்ல முயற்சிகளுக்கு அரசு ஆதரவு அளித்து உதவும்' என்று கூறினார்.

இன்றைய உலகில் திரைப்படம் மக்களின் பொழுதுபோக்கு அம்சங்களில் முதலாவதாக உள்ளது. நாட்டின் பொருளாதார நிலையைக் கண்ணுறும்போது, பொழுதுபோக்குக்கென நமது மக்கள், அதிலும் குறிப்பாக கிராமப்புற மக்கள் அதிகம் செலவழிக்கின்ற நிலையில் இல்லை. சொற்பச் செலவில், வசதிகளுடன் கூடிய நல்ல பொழுதுபோக்குப் பெற, திறந்தவெளி திரையரங்கம் அருமையானதொரு சாதனம்! இம்மாதிரி திறந்தவெளி திரை அரங்குகளை உருவாக்குவதற்காகும் செலவும் ரொம்பக் குறைவு! திரைப்படம் பார்த்து மகிழ்கின்ற மக்களுக்காகும் செலவும் ரொம்பக் குறைவு! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!



## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்!

தென்னார்க்காடு மாவட்டத்தில் பல துறைகளில் சாதனைகளைக் காணலாம். அவற்றில் ஒன்று தென்னார்க்காடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் சாதனையாகும். முதன் முதலாக திண்டிவனத்தில் 1939-ஆம் ஆண்டு டிசம்பர் 12ந் தேதி திரு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள்தலைமையில் மணிலா விற்பனையை ஒழுங்குபடுத்தி, ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் மூலம் விற்பனையைச் செய்ய, விற்பனைக்கூடம் திறக்கப்பட்டது.

இன்று இம்மாவட்டத்தில் திண்டிவனம், விருத்தாசலம், திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை, கடலூர், விழுப்புரம், பண்ருட்டி, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, காட்டுமன்னார்கோயில், திட்டக்குடி, சிதம்பரம், குறிஞ்சிப்பாடி, தியாகதுர்க்கம், சங்கராபுரம், திருவெண்ணெய்நல்லூர், மணலூர்ப்பேட்டை, குனியமங்கலம், அவலூர்ப்பேட்டை, சேத்தியாத்தோப்பு முதலிய இடங்களில் விற்பனைக் கூடங்கள் செயல்படுகின்றன.



# உழுவோம்! உழைப்போம்! உயர்வோம்!

உலகின் அச்சாணியாக விளங்குவது வேளாண்மை ஆகும். அதனாற்றான் திருவள்ளுவர் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு' என்று உழவின் சிறப்பை உலகுக்கு உணர்த்தினார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வளத்துக்கும் முக்கிய காரணமாய் விளங்குவது உழவும், தொழிலுமாகும். ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று மகாகவி பாரதியாரும் பாடியுள்ளார்.

வேகமான இந்த உலகில், வேளாண்மையும் வேகமாய் வளர்ந்து வருகின்றது. புதிய புதிய கண்டுபிடிப்புகள், புதிய புதிய ஆராய்ச்சிகள் நடந்த வண்ணமுள்ளன. இதற்கெல்லாம் காரணமாக விளங்குவது கோயம்புத்தூரிலுள்ள ''தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்' ஆகும்.

கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் இவ்வேளாண்மைப் பல்கலைக் கழகமானது 1971 ஜூன் முதல் நாள் அன்று துவங்கப்பட்டது.

**பல்கலைக் கழகத்தின் குறிக்கோள் :**

அ. வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பல்வேறு துறைகளில் கல்வி கற்பித்தல். ஆ. வேளாண்மையிலும் அது தொடர்புடைய பிற அறிவியல் துறைகளிலும் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துதல். இ. ஆராய்ச்சிகளில் கண்டறிந்த, உண்மைகளை உரிய அரசுத் துறைகளின் ஒத்துழைப்போடு கிராமப்புற மக்களை அடையச் செய்தல்.

இப்பல்கலைக் கழகத்தில் வேளாண்மைக் கால்நடை அறிவியல், மீன்வளம், வனத்துறை, வேளாண்மைப் பொறியியல், அடிப்படை அறிவியல் மற்றும் மானிடவியல் துறைகளில் அடிப்படையாகவும் நடைமுறைக்கேற்ற ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பல்கலைக் கழகத்தின் சின்னம் :**

வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகியவற்றின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் பல்கலைக் கழகத்தின் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சின்னமாகிய கோபுரத்தைப் பின்னணியாகக் கொண்டு அமைந்த தாமரை செழுமையைக் குறிக்கிறது. அதிலுள்ள ஏர்—உழவுத் தொழிலையும், மீன்—மீன் வளத்தையும், மரம்—வன வளத்தையும், காளை—கால்நடை வளர்ப்பையும், இயந்திரக் கலப்பை—வேளாண் பொறியியலையும், விளக்கு — மனையியலையும் குறிப்பிடும் அடையாளங்களாக உள்ளன. தாமரையின் பின்னணியாக உள்ள பசுமை நிறம் வேளாண்மை வளத்தைக் குறிப்பிடுகின்றது. இவை அனைத்துக்கும் சக்தியை வழங்கும் சூரியன் நடுவில் அமைந்துள்ளது. இச்சின்னத்தின் இருபுறமும் அமைந்துள்ள நெற்கதிர் தமிழ்நாட்டு நெற் சாகுபடியின் சிறப்பைக் காட்டுகிறது.

பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்: 'உழுவோம், உழைப்போம், உயர்வோம்' என்பதாகும்.

**வேளாண்மைக் கல்வி :**

வேளாண்மைக் கல்வியிலும், ஆராய்ச்சியிலும், விரிவாக்கப் பணிகளிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

கோயம்புத்தூரில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியும் மிகவும் பழமையானவை. கோவை வேளாண்மைக் கல்லூரியின் பழைய மாணவரே இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராக அமைந்தது இக்கல்லூரிக்குப் பெருமை சேர்க்கிறது. இத்தகைய நல்ல மரபில் உருவான இப்பல்கலைக் கழகம் உழவர் பெருமக்களிடையே அறிவொளியைப் பரப்புகிறது. வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி. விரிவாக்கம் ஆகிய முத்துறையின் முன்னேற்றத்திற்கும் அரும் பணி ஆற்றுகிறது.

**பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்வி நிறுவனங்கள் :**

1. வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்

தூர். 2. வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், மதுரை. 3. கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை. 4. வேளாண்மைப் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர். 5. அடிப்படை அறிவியல், மானிடவியல் கலைப்புலம், கோயம்புத்தூர். 6. மீன்வள அறிவியல் கல்லூரி, தூத்துக்குடி.

**வேளாண்மைக் கல்லூரிகள் :**

பி.எஸ்சி. (வேளாண்), எம். எஸ்சி. (வேளாண்), பிஎச்.டி. ஆகிய பட்டக் கல்வி புகுத்திவந்த வேளாண்மைக் கல்லூரி 1972 ஆம் ஆண்டு தொடங்கி பி.எஸ்சி. (தோட்டக்கலை) பட்டக் கல்வியும் நடத்தி வருகிறது. இக்கல்விக்கு ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரி 13 துறைகளைக் கொண்டது. அவற்றுள் உணவு நுண்ணியல், விதை நுண்ணியல், வனவியல், தீவனப் பயிரியல் துறைகள் பல்கலைக் கழகத் தோற்றத்திற்குப் பின்னர் உருவானவை.

இந்தியாவிலேயே முதன் முதலாக விதை நுண்ணியல் எம். எஸ்சி. (வேளாண்) பட்டக் கல்வி இங்குத் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், 1976-77 முதல் பட்ட மேற்படிப்பு டிப்ளமா கல்வி, வேளாண்மைத் தொழில் நிர்வாகம் பற்றியும் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. மதுரையில் உள்ள வேளாண்மைக் கல்லூரியில் ஒன்பது துறைகள் உள்ளன.

**கால்நடை மருத்துவக் கல்லூரி :**

சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி 1976 டிசம்பர் 1 முதல் இப்பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாக இணைந்தது. 1903ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இக்கல்லூரிதான், நம் நாட்டில் முதல் முதல் பிவி. எஸ்சி. பட்டக் கல்வியை வழங்கியது. அங்கு 16 துறைகளில் எம்.வி.எஸ்சி. பட்டக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டு முதல் கோழிப் பண்ணை அறிவியல், ஒட்டுண்ணியியல், கால்நடை மருத்துவ நுண்ணுயிரியல் ஆகியவற்றில் பிஎச்.டி. பட்ட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**வேளாண் பொறியியல் கல்லூரி :**

கோயம்புத்தூரில் 1972இல் தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில் ஐந்தாண்டுகள் பி.இ. (வேளாண்) தொழில் பட்டக் கல்வி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 50 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதில் நான்கு துறைகள் உள்ளன. பண்ணைத் திறன் மற்றும் பண்ணை இயந்திரங்கள், மண், நீர்ப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் எம்.இ. (வேளாண்) கல்வி 1977-78இல் தொடங்கப்பட்டுள்ளது. இங்கு வேளாண் தொழில்கள் என்னும் துறை ஒன்று தொடங்கும் திட்டமும் உள்ளது.

**அடிப்படை அறிவியல், மானிடவியல் கலைப்புலம் :**

இக்கலைப்புலம் 1972இல் தொடங்கப்பட்டது. இதில் எட்டு துறைகள் உள்ளன.

1975இல் சுற்றுப் புறச் சூழல் உயிரியல் எம்.எஸ்சி. பட்டக் கல்வி இங்கு ஆரம்பிக்கப்பட்டது. நம் நாட்டில் இத்தகைய கல்வி தொடங்கப்படுவது இதுவே முதலாவதாகும். பயிர் உடற் கூறியியலிலும் பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1977-78 முதல் சுற்றுப்புறச் சூழல் உயிரியல் பிஎச்.டி. பட்டக் கல்வியும் தொடங்கப்பட்டுள்ளது.

**மீன் வளக் கல்லூரி :**

ஒரு புதிய நான்காண்டுக் கால பி.எஃப். எஸ்சி. பட்டக் கல்வி 1977-78இல் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் 20 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்கல்லூரி தூத்துக்குடியில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறாக இப்பல்கலைக் கழகம் பி.எஸ்சி. (வேளாண்), பி. எஸ்சி. (தோட்டக்கலை), பி.இ. (வேளாண்), பி.வி.எஸ்சி, பி.எஃப். எஸ்சி., எம்.வி. எஸ்சி(வேளாண்), எம்.எஸ்சி., பிஎச்.டி. டிப்ளமா (வேளாண் தொழில் நிர்வாகம்) ஆகிய கல்விகளைக் கற்பிக்கிறது.

ஆண்டுதோறும் முதலாண்டுப் பட்டப் படிப்பிற்கென சுமார் 470 மாணவர்களும், மற்றும் எம்.எஸ்சி. பட்டப் படிப்பிற்கென சுமார் 300 மாணவர்களும் சேர்க்கப்படுகிறார்கள். மொத்தத்தில் தற்போது சுமார் 3,000 மாணவர்கள் இப்பல்கலைக் கழகத்தில் படிக்கிறார்கள். பாடம் கற்பிக்கும் முறையும் மேலை நாடுகளில் உள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளது.

**பகுதிநேர பட்ட மேற்படிப்பு :**

பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவர்கள் பட்ட மேற்படிப்பைப் பகுதி நேர அடிப்படையில் கற்க ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்பு, இப்பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பாகும். தற்பொழுது 180 பேர் அவ்விதம் எம்.எஸ்சி (வேளாண்) பிஎச்.டி ஆகிய கல்வியைக் கற்கிறார்கள்.

**ஆராய்ச்சி**

இப்பல்கலைக் கழகத்தின் இரண்டாவது முக்கிய பணி வேளாண்மையில் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்வதாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 6 கல்லூரிகளிலும் தீவிர ஆராய்ச்சித் திட்டங்கள் பல செயல்படுகின்றன. ஒவ்வொரு ஆசிரியரும் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். கல்லூரிகளைச்

வேளாண் பொறியியல் கல்லூரி



சார்ந்த ஆராய்ச்சிப் பண்ணைகளைத் தவிர, 30க்கும் மேற்பட்ட இடங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் இப்பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படுகின்றன. மொத்தத்தில் சுமார் 1,300 ஆராய்ச்சியாளர்கள் இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகிறார்கள்.

1. ஆராய்ச்சிகளின் முடிவுகளைப் புத்தகங்கள், கையேடுகளாக அச்சிடுவது, கட்டுரைகளாக செய்திக் கதிர்களாகப் பத்திரிகைகள், மாத இதழ்களுக்கு அனுப்புவது, மற்றும் வானொலி, டெலிவிஷன் முதலியவைகளுக்கு அனுப்பி வைப்பது.

2. விவசாயிகளுக்கென பயிற்சிகள் கோவை, மதுரை, ஒசூர், ஆகிய இடங்களில் நடத்தி ஆண்டொன்றுக்குச் சுமார் 2,000 விவசாயிகளுக்கு, பெண்கள் உட்பட பயிற்சி அளித்து வருகிறது.

3. அஞ்சல் வழிப் பாடத் திட்டத்தின்கீழ் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த விவசாயிகளுக்கு சில முக்கிய துறைகளில் உதாரணமாக தீவிர நெல் சாகுபடி, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ப்பு போன்ற துறைகளில் மூன்று மாதங்கள் பாடங்கள் அனுப்பி இறுதியில் நேர்முகப் பயிற்சி நடத்தப்படுகிறது. கோவை, மதுரை, சென்னை ஆகிய இடங்களில் இது வரை, சுமார் 3,700 பேர்கள் பயின்று சான்றிதழ் பெற்றுள்ளனர்.

4. வானொலியில் வேளாண் பள்ளி என்ற திட்டத்தின்கீழ் மேற்கண்ட பாடத் திட்டங்களை வானொலி மூலம் வாரம் ஒரு முறை அறிவித்து பல ஆயிரக் கணக்கான விவசாயிகளுக்கு வேளாண் துறையில் பாடம் கற்பித்து வருகிறது. 1978 ஜனவரி முதல் வானொலி வேளாண்மைப் பள்ளியில் பயில்வோருக்கும் ஒரு நாள் நேர்முகப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது.

5. தேசிய செயல் விளக்கத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் சிறு விவசாயிகளின் பண்ணைகளில் நவீன முறையில் அறிவியல் அடிப்படையில் அராய்ச்சியாளர்கள் செயல்முறைகளைச் செய்து காண்பித்து அந்தப் பண்ணைகளில் சராசரி மகசூலை சுமார் மூன்று மடங்கு அதிகமாக்கிக் காட்டியிருப்பதுடன், இந்தப் பண்ணைகளை மாதிரிப் பண்ணைகளாக்கி மற்ற நூற்றுக்கணக்கான விவசாயிகளுக்கு இவைகளின் மூலம் பயிற்சி அளித்துள்ளார்கள்.

6. தமிழ்நாட்டில் அரசாங்கம், வங்கிகள், கூட்டுறவு மற்றும் தனியார் துறைகளில் செயல்பட்டு வரும் விரிவாக்கத் திட்டங்களுக்குப் பலவிதங்களில் உதவி, விஸ்தரிப்பாளர்களுக்குப் பல்கலைக் கழகத்தின் வல்லுநர்கள் மூலம் அவ்வப்போது பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

7. திருச்சியிலும், பாண்டிச்சேரியிலும் வேளாண் அறிவியல் நிறுவனங்கள் மத்திய அரசின் பண உதவியுடன் நிறுவி அங்கு பல நோக்குப் பயிற்சிகள் முற்போக்கு விவசாயிகளுக்கும், மற்றும் விரிவாக்கத் துறையில் பணியாற்றுவோருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன.

8. இப்பல்கலைக் கழகத்தைக் காணவரும் விவசாயிகளும் மாணவர்களும், உள்நாட்டு, அயல் நாட்டு வல்லுநர்களும் பல்கலைக் கழகத்தின் பணிகளைக் கண்டறியும் வகையில் மத்திய பொருட்காட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

9. வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் புதிய கண்டுபிடிப்புகளையும், வல்லுநர்களின் பேச்சுகளையும் பதிவு செய்வதற்காக ஒரு வானொலிப் பதிவு அறை நிறுவப்பட்டுள்ளது. இங்கு வல்லுநர்களுக்கு வானொலிப் பேச்சில் பயிற்சியும் கொடுக்கப்படுகின்றது.

10. விவசாயிகள் தங்களுடைய சிக்கல்களுக்கு விடை வேண்டி வந்தால் நேரடியாகவும், கடிதம் எழுதினால் உடனடியாகப் பதில் கடிதம் அனுப்பியும் அவர்களுக்குத் தக்க விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அதே போல் விவசாயிகள் வானொலி நிலையத்தாரிடம் கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதில்கள் கொடுக்கப்பட்டு அவை வானொலியில் ஒலிபரப்பாகின்றன.

**உழவர் பயிற்சி நிலையங்கள் :**

கோயம்புத்தூர், மதுரை, ஒரத்த நாடு ஆகிய மூன்று இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

இந்நிலையங்களில் உழவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி நடைபெறுகிறது. ஒசூரில் கால்நடை உதவியாளர் பயிற்சி மையம் ஒன்று உள்ளது. பல்கலைக் கழகத்தின்கீழ் உள்ள தேசிய செயல் விளக்கத் திட்டம், வயல் வெளிகளிலேயே செயல் விளக்கங்களை நடத்திக் காட்டுகிறது. இதனால் உயர் விளைச்சல் ரகங்களின் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள், அவற்றின் உயர்விளைச்சல் திறன், அந்தந்த வட்டாரத்தின் சாகுபடிச் சிக்கல் அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவைகள் விவசாயிகளுக்குத் தெளிவாக உணர்த்தப்படுகின்றன.

விரிவாக்கப் பணி முறைகளை மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கும் விவசாயிகளுடன் தொடர்பு கொள்வதற்கும் இத்தேசியசெயல் விளக்கங்கள் ஒரு சோதனைக் கூடமாகப் பயன்படுகின்றன. மேற்கண்ட முறைகளில் இப்பல்கலைக் கழகம் கடந்த ஏழு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

மற்றப் பல்கலைக் கழகங்களைப் போல் அல்லாமல், இவ் வேளாண்மைப் பல்கலைக் கழகம் வேளாண்மையில் பல துறைகளில் முதல் நிலை பட்டதாரிகள், முதுநிலைப் பட்டதாரிகளை உருவாக்குவதுடன் நின்று விடாமல், வேளாண் மக்களுக்குத் தேவையான, உடனுக்குடன் பயன்தரக் கூடிய பல ஆராய்ச்சிகளைச் செய்து அதன் முடிவுகள் விரிவாக்கப் பணிகள் மூலம் கிராமங்களுக்குச் சென்றடையும் சீரிய பணியையும் செய்து கொண்டிருக்கிறது என்று பெருமையோடு குறிப்பிடலாம்.

## தகவல் தொடர்பு நிலையம்

1971ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டபோது, தகவல் தொடர்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்தது.

நவீன வேளாண்மை முன்னேற்றத்தில் வேளாண்மைத் தகவல் தொடர்பு ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. வேளாண்மையிலும் பல்கலைக் கழக முன்னேற்றத்திலும் தகவல் தொடர்பு சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த நிலையத்தின் தேவை மிக அவசியமாகிறது.

இந்த நிலையமானது தகவல் தொடர்பை ஒரு விஞ்ஞானமாகவும், ஒரு கலையாகவும், ஒரு தலைசிறந்த பணியாகவும் கருதுகின்றது. இது ஒரு தனிப் பாடமாகக் கருதப்பட்டாலும் சமூக விஞ்ஞானத்திற்கு மிகவும் நெருங்கிய தொடர்புள்ள ஒன்றாகும். இதன் முக்கியமான பணி தமிழகத்திலும், இந்தியாவிலும், மற்ற இடங்களிலுள்ள பலதரப்பட்ட மக்களுக்குத் தகவல்களையும், ஆராய்ச்சியின் புதுமைகளையும் உணர்த்துவதாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை 600002

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—**தந்தை பெரியார்.**



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—**பேரறிஞர் அண்ணா.**

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!


Shell